நாகபூசணி
பக்கம் 15

கிராமங்கள்
பக்கம் 13


# உதயன்

32 பக்கங்கள்
யாழ். - 20/=
வன்னி - 20/=

சுடர்: 29 கதிர்: 227 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆனி 27, வெள்ளி 11.07.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily


32°C
தெளிவான வானிலை
காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று 34 km/h
ஈரப்பதம்: 48%
காற்றமுக்கம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04



கிளர்ச்சியாளர்கள் வசம் அணு மூலப்பொருள்கள் 7



ஈராக் படைகளும் கிளர்ச்சியாளர்களும் 14




வசந்தஷ், சீமா அரையிறுதியில் 17



நெய்மருக்கு கேரளாவில் சிகிச்சை 18

## இந்தியாவுக்கும் தெரிவித்தே தென்னாபிரிக்கா செயற்படும்

### சிறில் ரமபோஷ தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 11
தென்னாபிரிக்காவால் இலங்கையில் முன்னெடுக்கப்படும் நல்லிணக்க முயற்சிகள் தொடர்பில் இந்தியாவுக்குத் தெரியப்படுத்தப்படும் என்று தெரிவித்துள்ளார் தென்னாபிரிக்கதுணை ஜனாதிபதி சிறில் ரமபோஷ.
இரா.சம்பந்தன் தலைமையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கொழும்பிலும், க.வி.விக்னேஸ்வரன் தலைமையில் யாழ்ப்பாணத்திலும் நடந்த சந்திப்புகளின் போது, தென்னாபிரிக்காவின் இந்த முயற்சி குறித்து, இந்தியாவுக்குத் தெரியப்படுத்தப்பட்டதா என்று வினவப்பட்டது என்

22 ஆம் பக்கம் பார்க்க

## வடமாகாண ஆளுநருக்கு 6 மாதங்கள் பதவி நீடிப்பு?

### நம்பகமான வட்டாரங்களில் இருந்து கசிந்தது தகவல்



யாழ்ப்பாணம், ஜூலை 11
வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறியின் பதவிக் காலம் நாளையுடன் முடிவடையவுள்ள நிலையில், அவருக்கு மேலும் 6 மாத காலம் பதவி நீடிப்பு வழங்குவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார் என்று நம்பகரமான தகவல்கள் வெளியாகியுள்ளன.
யாழ்ப்பாண மாவட்டத்தின் இராணுவத் தளபதியாகப் பணியாற்றிய மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, 2009 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 12 ஆம் திகதி வடக்கு மாகாண ஆளுநராக, ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டார்.

22 ஆம் பக்கம் பார்க்க

# அரசிடம் பிச்சை கேட்கவில்லை தீர்வையே எதிர்பார்க்கின்றோம்

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 11
"நாங்கள் அரசிடம் பிச்சை கேட்கவில்லை. ஒரு தேசிய இனத்திற்கான நிரந்தர அரசியல் தீர்வையே கேட்கின்றோம். நாட்டிலுள்ள இனப் பிரச்சினையைக் கூட தீர்க்க தகுதியில்லாத அரசாகவே இந்த அரசு இருக்கின்றது. நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கெடுக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு போதும் மறுக்கவில்லை. ஆனால் அதில் பங்குபற்ற வைத்து எம்மை தோற்கடித்து, பெரும்பான்மையின வாதத்தின் தீர்வை திணிப்பதற்கு இந்த அரசு எடுக்கும் முயற்சிகளுக்கு நாம் ஒரு போதும் ஒத்துழைப்பு வழங்கமாட்டோம். இந்த விடயங்களை ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிந்து கொண்டும் தெரியாததைப் போன்று நடிப்பதிலும் பார்க்க அவர் வாயை மூடிக் கொண்டிருப்பது சிறந்தது."- இவ்வாறு காட்டமாகத் தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், அந்தக் கட்சியின் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன்
"தமிழ் மக்களின் பிரச்சினை

22 ஆம் பக்கம் பார்க்க

## குறிகாட்டுவானில் நேற்று படகு சேவையில் குழப்பம்

### ஆயிரக்கணக்கான பயணிகள் பரிதவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 11
குறிகாட்டுவான் துறைமுகத்தில் படகு உரிமையாளர்கள் நேற்று மாலை 5.30 மணியளவில் திடீரென மேற்கொண்ட புறக்கணிப்பால் ஆயிரக் கணக்கான பக்தர்கள் நெருக்கடிகளை எதிர் கொண்டனர்.

22 ஆம் பக்கம் பார்க்க

## தமிழக மீனவர்கள் விரைவில் விடுதலை



யாழ்ப்பாணம், ஜூலை 11
தலைமன்னார் கடற்பரப்பில் கடந்தவாரம் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 37 இந்திய மீனவர்களும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அனுமதி கிடைத்தவுடன் விடுவிக்கப்படவுள்ளனர். அவர்கள் எதிர்வரும் இரு தினங்களுக்குள் விடுவிக்கப்படுவர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.
இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்படும் மீனவர்களை உரிய சட்ட நடவடிக்கையின் பின்னர் படகுகளை பறிமுதல் செய்து உடனுக்குடன் விடுவிக்குமாறு ஜனாதிபதி கடற்றொழில் அமைச்சுக்கு பணித்துள்ளார். இரு நாடுகளுக்கும் இடையிலான நல்லுறவைப் பேணும் வகையிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.
அதற்கமைவாகவே தற்போது இலங்கைச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 37 இந்திய மீனவர்களும் விடுவிக்கப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.
(ற-14-5)




யாழ்ப்பாணத்துக்கான ரயில் சேவைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் யாழ்ப்பாண ரயில் நிலைய புனரமைப்புப் பணிகள் துரித கதியில் நவீன இயந்திரங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## நயினையில் இன்று தேர்

யாழ்ப்பாணம், ஜூலை 11
நயினை நாகபூசணி அம்பாள் ஆலயத்தின் தேர்த் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு பக்திபூர்வமாக நடைபெறும். அதிகாலை 4 மணிக்கு விசேட ஆராதனைகளுடன் ஆரம்பமாகி, காலை 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசைகள் நடைபெற்று அம்பாள் தேரில் ஆரோகணித்து திருவீதியுலா வந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பார்.
தேர்த் திருவிழாவைக் காண குடநாட்டில் மட்டுமன்றி, வெளியிடங்களில் இருந்தும் பெருமளவான மக்கள் வரவுள்ளதால் இன்று விசேட படகுச் சேவைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-7)

தேர்த்திருவிழா சிறப்பிதழ் உள்ளே

# தென்னாபிரிக்க அனுசரணைக்கு வாய்ப்பே இல்லை

### நாடாளுமன்றில் அரசு திட்டவட்டமாகத் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 11
தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் சர்வதேச மத்தியஸ்தராக தென்னாபிரிக்க உப ஜனாதிபதி சிறில் ரமபோஷவையோ அல்லது தென்னாபிரிக்க அரசையோ ஈடுபடுத்திக்கொள்ளும் எதிர்பார்ப்பு இலங்கைக்கு கிடையாது என்று அரசு நேற்று நாடாளுமன்றில் அறிவித்தது.
நாடாளுமன்றம் நேற்று பிற்பகல் ஒருமணிக்கு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கூடியது. சபாநாயகர் அறிவிப்பு, பொதுமனுத் தாக்கல், வாய்மூல விடைக்கான கேள்விச்சுற்று ஆகியன முடிவடைந்த பின்னர் 23/2 இன் கீழ் விசேட கூற்றொன்றை விடுத்து தென்னாபிரிக்க உப ஜனாதிபதி சிறில் ரமபோஷவின் இலங்கைப் பயணத்துடன் தொடர்புடைய விடயங்கள் சம்பந்தமாக ஜன நாயக தேசியக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினரும், ஜே.வி.பி

22 ஆம் பக்கம் பார்க்க

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சீட்டுக் கட்டு சரிவதை போன்று சரியப் போகிறது ஆளும் கட்சி

## ஐக்கிய தேசியக் கட்சி கூறுகின்றது




போர் நிறைவின் பின்னர் மக்களுக்கு அளிப்பதாக அரசு அளித்த வாக்குறுதிகள் போர் நிறைவடைந்து ஐந்து ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் நிறைவேற்றப்படவில்லை"

கொழும்பு, ஜூலை 11
ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரதான கூட்டணி கட்சியான ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பிளவு ஏற்படக் கூடிய அபாயம் உருவாகியுள்ளது என்று தெரிவித்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் மைக்கல் பெரேரா, அடிக்கி வைக்கப்பட்ட சீட்டுக் கட்டு சரிவதனைப் போன்று ஆளும் கட்சிக்குள் சரிவு ஏற்படவுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
"ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் சிறியவை. அவற்றை திருத்திக்கொள்ள முடியும். தனிப்பட்ட ஒரு நபரின் ஆதிக்கம் காரணமாக ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பிளவடையக் கூடிய அபாயத்தை எதிர்நோக்கியுள்ளது. பாதைகளை அமைப்பதன் மூலம் நாடு அபிவிருத்தி அடைந்து விடாது.
நாட்டின் தற்போதைய அபிவிருத்தித் திட்டங்களானது ஒரு குடும்பத்தை செல்வந்தராக்கவே வழியமைத்துள்ளன. போர் நிறைவின் பின்னர் மக்களுக்கு அளிப்பதாக அரசு அளித்த வாக்குறுதிகள் போர் நிறைவடைந்து ஐந்து ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும்நிறைவேற்றப்படவில்லை"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# ராஜதந்திரப் பொறியில் சிக்கியுள்ளது இலங்கை

## ரமபோஷவின் பயணம் குறித்து ஜே.வி.பி. கருத்து



கொழும்பு, ஜூலை 11
நாட்டின் பிரச்சினைகளில் வெளிநாடுகள் தலையிட இடமளிக்க போவதில்லை என்று கூறி வரும் அரசு, தென்னாபிரிக்காவை வரவழைத்துள்ளமை கோமாளித்தனம் என்று தெரிவித்துள்ளார் ஜே.வி.பியின் பரப்புரைச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத். தென்னாபிரிக்காவை அழைத்தன் மூலம் அரசின் இரட்டை வேடம் வெட்ட வெளிச்சத்திற்கு வந்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,
"யார் என்ன கூறினாலும் நாட்டின் தேசிய பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டே சிறில் ரமபோஷ இலங்கை வந்தார்.
இலங்கையின் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பான பேச்சுக்கு ஆபிரிக்க தேசிய காங்கிரஸ், இலங்கையின் நாடாளுமன்ற குழுவுக்கு கடந்த வருடம் அழைப்பு விடுத்திருந்தது. இதனையடுத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா உள்ளிட்ட பிரதிநிதிகள் தென்னாபிரிக்கா சென்று பேச்சு நடத்தியமை இரகசியமான விடயமல்ல. தேசிய பிரச்சினை பற்றியே அங்கு பேசப்பட்டுள்ளது.
இந்தப் பயணத்துக்கு பதில் பயணமாகவே சிறில் ரமபோஷவின் இலங்கைப் பயணம் அமைந்தது. இலங்கை வந்து தேநீர் அருந்தி, உணவு உண்டு விட்டு விளையாட்டுப் போட்டியை ரசித்து விட்டு செல்லவே ரமபோஷ இலங்கை வந்தார் என்று கூறுவார்களேயானால், அப்படி கூறுபவர்களின் மூளையில் குறைப்பாடு இருக்கும். இவை மிகப் பெரிய நகைச்சுவைக் கதைகள்.
இது ரமபோஷவின் விநோத பயணம் என்று விமல் வீரவன்ஸ கூறுவாரேயானால், அது இரண்டு கைகளினால் தனது நிர்வாணத்தை மூடிக் கொண்டதற்கு ஈடானது. அவை வெட்கத்தில் கூறும் கதைகள். தென்னாபிரிக்காவின் தலையீடு அவசியமில்லை அப்படி நடந்தால், அரசிலிருந்து இருந்து விலகுவோம் என புளுகிய வீரவன்ஸ, தற்போது பாறை மீது மலம் கழித்த பூனையை போல் தடுமாறுகிறார்.
சர்வதேச தலையீடுகளை எதிர்ப்பதாக அரசு ஒரு புறம் கூறி வருகிறது. எந்த துரதிர்ஷ்ட சாலிகளுக்கும் இலங்கைக்குள் வர இடமளிக்க போவதில்லை என அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க பேசி வருகிறார். ஆனால் சிறில் ரமபோஷ வந்தார். உண்மையில் இந்த அரசு மற்றுமொரு ராஜதந்திர பொறியில் சிக்கியுள்ளது. இந்தியாவும் தென்னாபிரிக்காவும் மனித உரிமை ஆணையாளர் நவநீதம் பிள்ளையின் யோசனைக்கு வாக்களிக்கவில்லை. அவ்வாறு வாக்களிக்காத இந்த நாடுகள் வேறுவிதமாக தலையீடுகளை மேற்கொண்டு வருகின்றன" - என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

# வீதி விபத்தில் இலங்கை பெண் உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 11
ஐக்கிய அரபு ராஜ்ஜியத்தில் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் இலங்கையை சேர்ந்த 52 வயதான பெண் உயிரிழந்துள்ளார். வீதியை கடக்க அவர் முயற்சித்த போது வேகமாக வந்த கார் ஒன்றில் மோதுண்டு அவர் உயிரிழந்துள்ளார்.
இந்த சம்பவம் கடந்த செவ்வாய்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.
காயமடைந்த பெண் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார் என்று அந்நாட்டுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)



இலங்கை வந்திருந்த ஆஸ்திரேலிய குடிவரவு - குடியகல்வுத்துறை அமைச்சர் ஸ்கொட் மொரிஸன், பாதுகாப்புத்துறைச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவை, நேற்று அவரது உத்தியோகபூர்வ அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

# ஆண் குழந்தை கடத்தப்பட்டது

கொழும்பு, ஜூலை 11
திருகோணமலை மற்கோ பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை ஒன்றரைவயது ஆண் குழந்தையொன்று கடத்தப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ள பொலிஸார், இது தொடர்பில் ஒருவர் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவித்துள்ளனர்.
சந்தேக நபருக்கும் கடத்தப்பட்ட குழந்தையின் குடும்பத்தினருக்கும் இடையில் ஏற்கனவே தனிப்பட்ட பிரச்சினைகள் நிலவிவந்துள்ளமை ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. எனினும், கடத்தப்பட்ட குழந்தை தொடர்பில் இதுவரை எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
இதுதொடர்பில் திருகோணமலை தலைமையக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற)

# புராதன பொருள்கள் மீட்பு

வவுனியா, ஜூலை 11
வவுனியா சின்னபூவரசங்குளம் பகுதியில் புராதன தொல்பொருள்கள் சில மீட்கப்பட்டுள்ளன. தனியாருக்குச் சொந்தமான விவசாய காணி ஒன்றிலிருந்தே இந்தப் புராதன தொல்பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன என்று வவுனியா மாவட்ட அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திர தெரிவித்தார்.
விவசாய நடவடிக்கைகளுக்காக நிலத்தை பதப்படுத்த முற்பட்ட போது, பழைமை வாய்ந்த சிலை ஒன்று மீட்கப்பட்டதை அடுத்து மாவட்ட அரச அதிபருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது. அதனை அடுத்து குறித்த இடத்தில் அகழ்வு மேற்கொள்ளப்பட்டு மேலும், மூன்று சிலைகளும், மட்பாண்டங்கள் சிலவும் மீட்கப்பட்டுள்ளன.
மீட்கப்பட்ட பொருள்கள் தொல்பொருள் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்று மாவட்ட அரச அதிபர் குறிப்பிட்டார்.



குறித்த இடத்தில் தொல்பொருள் அகழ்வுப் பணிகள் மேற் கொள்ளப்படுமானால் மேலும் பல பொருள்கள் மீட்கப்படலாம் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ற)

# தூக்கை ஆயுள் தண்டனையாக்குக

## மனித உரிமைகள் ஆணைக்குழு பரிந்துரை




கொழும்பு, ஜூலை 11
தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள கைதிகளின் தண்டனையை ஆயுள் தண்டனையாகத் தளர்த்துமாறு பரிந்துரைத்துள்ளது மனித உரிமைகள் ஆணைக்குழு.
அனைத்து சிறைச்சாலைகளிலும் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் பின்னர் தயாரித்த அறிக்கையிலேயே இது தொடர்பில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்ட இந்த அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப் படவுள்ளது என்று ஆணைக் குழுவின் ஆணையாளர் கலாநிதி பிரதிபா மஹானாம ஹேவா தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
"சிறைச்சாலைகளில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் ஊடாக பல விடயங்கள் கண்டறியப்பட்டன. சுமார் 540 பேருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட போதும், இது கொள்கை ரீதியில் பின்பற்றப்படுவதில்லை.
1976 ஆம் ஆண்டே தூக்குத் தண்டனை இறுதியாக நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் பின்னர் இன்று வரை எவருக்கும் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படவில்லை.
வயதானவர்களுக்கும் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அவர்கள் உள மற்றும் உடல் ரீதியில் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். இவை உட்படப் பல விடயங்களை கருத்திற்கொண்டே தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள கைதிகளின் தண்டனையை ஆயுள் தண்டனையாக தளர்த்துமாறு மனித உரிமைகள் ஆணைக்குழு பரிந்துரை செய்துள்ளது"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# கைவிலங்குடன் இணைக்கப்பட்ட கதிரையுடன் 'கம்பிநீட்டிய' கைதி

கொழும்பு, ஜூலை 11
பச்சை மிளகாய் திருடிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு புறக்கோட்டை மெனிங் காய்கறிச் சந்தையின் பொலிஸ் காவலரணில் இருந்த கதிரையொன்றில் கை விலங்கால் பிணைக்கப்பட்ட சந்தேகநபர் ஒருவர், அந்தக் கதிரையையே தூக்கிக்கொண்டு 'கம்பிநீட்டிய' சம்பவமொன்று நடந்துள்ளது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நடந்துள்ளது.
வெளியிடங்களிலிருந்துமெனிங் சந்தைக்கு மொத்த வியாபாரிகள் கொண்டுவரும் பச்சை மிளகாய் மூடைகளிலிருந்து இவர் சிறிது சிறிதாகத் திருடி வந்திருக்கிறார் என்று கூறப்படுகின்றது. ஒருசில நாள்களாக இவரது திருட்டை அவதானித்து வந்த வியாபாரிகள் சிலர் இவரை கையும் மெய்யுமாகப் பிடித்து மெனிங் சந்தை பொலிஸ் காவலரணில் ஒப்படைத்துள்ளனர். அங்கிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் அவரது ஒரு கையில் விலங்கைப் பூட்டி அதன் மறுமுனையை கதிரை ஒன்றுடன் பிணைத்து வைத்தனர்.
பொலிஸாரின் கவனம் வேறு பக்கம் திரும்பிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்ட சந்தேகநபர், தன்னைப் பிணைத்து வைத்திருந்த கதிரையையும் தூக்கிக்கொண்டு தப்பிச் சென்றுள்ளார். பச்சை மிளகாயின் விலை மிகவும் உயர்ந்துள்ள நிலையில், சந்தேகநபர் சிறிது சிறிதாகத் திருடிய மிளகாயின் பெறுமதி சுமார் இரண்டு லட்சம் ரூபாவுக்கும் அதிகமென சம்பந்தப்பட்ட வியாபாரிகள் கூறுகின்றனர். (ற)

பக்கங்கள்: முப்பத்திரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா யாழ். 20/-

கிளாசிக்

சுடர்: 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆனி 27 வெள்ளிக்கிழமை (11.07.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 227

# வடக்கில் 782 கிலோ மீற்றர் வீதி போருக்குப் பின்னர் புனரமைப்பு

**யாழ்ப்பாணம், ஜூலை 11**

**வடக்கில், ஒவ்வொரு மாவட்டங்களையும் பிரதான நகரங்களுடன் இணைக்கும் 707.9 கிலோ மீற்றர் நீளமான வீதிகளின் புனரமைப்பு பணிகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன. இறுதிக் கட்டப் புனரமைப்பு பணிகள் ஒரு சில வீதிகளில் மாத்திரம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் விசேட செயற்றிட்டப்பிரிவு வட்டாரங்கள் தெரிவித்தன.**

போர் முடிவடைந்த 2009 ஆம் ஆண்டு வடக்கில் பிரதான வீதிகளை அகலமாக்கி புனரமைக்கும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. சீன அரசினால் வழங்கப்பட்ட நீண்டகால கடன் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவி என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்த புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன என்றும் சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதன்படி, ஏ - 9 பிரதான வீதியில் 135 கிலோமீற்றர் நீளமான வீதி, யாழ்ப்பாணம் - கே.கே.எஸ் பிரதான வீதியில் 18.5 கிலோ மீற்றர், யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியில் 33.7 கிலோமீற்றர், யாழ்ப்பாணம் - பலாலி பிரதான வீதியில் 17.3 கிலோமீற்றர், புத்தூர் - மீசாலை பிரதான வீதி

(22ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ நெருக்கடியிலிருந்து தப்பவே மக்கள் வெளிநாடுகளுக்கு ஓடுகின்றனர்

### கூட்டமைப்பு எம்.பி. சுமந்திரன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 11

வடக்கில் சகல விடயங்களிலும் இராணுவத்தினர் தலையீடு செய்வதாலேயே மக்கள் வெளிநாடுகளுக்குத் தப்பி ஓடிக் கொண்டிருக்கின்றனர். இது விசித்திரமான விடயமல்ல என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

அதிகாரத்தை பகிர்ந்து நாட்டைக் கட்டியெழுப்பும் அமைப்பு ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றிருந்தது. இதில் கலந்துகொண்டு

(22ஆம் பக்கம் பார்க்க)

## கோண்டாவில் வாள்வெட்டு சம்பவம் ஒருவருக்கு நீதிமன்று நேற்று பிணை

யாழ்ப்பாணம், ஜூலை 11

கோண்டாவிலில் இளைஞன் ஒருவர் வாளால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை அடுத்து கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் யாழ். நீதிமன்றினால் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

வெட்டிக் கொல்லப்பட்டவரது சகோதரர்கள் இருவரில் ஒருவரே தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான மூன்று ஆள் பிணையில் விடுவிக்கப்பட்டார். மற்றையவருக்கு எதிர்வரும் 24 ஆம் திகதிவரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இளைஞர்களுக்கு இடையில் ஏற்பட்ட சிறு பிரச்சினை வாள் வெட்டில் முடிந்தது. இதில் கோண்டாவிலைச் சேர்ந்த ர.சுகிர்தன் (வயது-20) என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்று பொலிஸார் குறிப்பிடுகின்றனர். (ஐ-4)

## முல்லை. கல்வி வலயத்துக்கு கல்விப் பணிப்பாளர் நியமனம்

முள்ளியவளை, ஜூலை 11

முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளராக திருமதி உதயராணி முனீஸ்வரன், வட மாகாண கல்வி அமைச்சினால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இதற்கான பணிப்பினை மாகாண ஆளுநர் வழங்கியுள்ளார். முல்லைத்தீவு கல்வி வலயத்துக்கு கல்விப்பணிப்பா

(22ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு, அம்பாறை பகுதிகளில் காட்டு யானைகள் அட்டகாசம்

மட்டக்களப்பு, ஜூலை, 11

மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களின் எல்லைப்புற கிராமங்களில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துள்ளது என்று அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து பாதிப்பை எதிர்கொண்டுள்ள மக்கள் தெரிவிக்கையில்,

(22ஆம் பக்கம் பார்க்க)

## யாழில் தனியார் பஸ்களுக்கு இயந்திர ரிக்கற் அறிமுகம்



யாழ்ப்பாணம் ஜூலை.11

தனியார் பஸ்களுக்கு ரிக்கற் மெசின் பயன்படுத்தும் முறை நேற்று உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

குடாநாட்டில் உள்ளூர் மற்றும் வெளியூர் சேவைகளில் ஈடுபடும் தனியார் பஸ்களுக்கு இயந்திர ரிக்கற் வழங்குவதை நடைமுறைப்படுத்துமாறு தனியார் பஸ் சங்கம் அறிவித்திருந்த போதும் அந்த அறிவிப்பு கருத்தில் கொள்ளப்படவில்லை.

இந்த நிலையில் மாவட்ட செயலகத்தின் அறிவுறுத்தல் படி, முதற்கட்டமாக யாழ்ப்பாணத்தில் இருந்து உள்ளூர் தூர சேவையில் ஈடுபடும் 4 பஸ்களின் உரிமையாளர்களுக்கு ரிக்கற் மெசின் வழங்கப்பட்டது.

யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் பஸ் உரிமையாளர்களிடம் அவற்றைக் கையளித்து உத்தியோக

(22ஆம் பக்கம் பார்க்க)

## பாடசாலை மாணவன் பலியானது பிரேக் இல்லாத வாகனம் மோதியே

### பொலிஸார் நீதிமன்றில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 11

யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரி முன்பாக மாணவனை மோதி அவன் உயிரிழக்கக் காரணமான தனியார் பஸ்ஸுக்கு பிரேக் இல்லை என்று பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர். பஸ் சாரதியைப் பிணையில் விடுவித்த நீதிமன்று அவரது சாரதி அனுமதிப்பத்திரத்தைத் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது.

யாழ்.நீதிமன்றில் நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது.

இதன்போது குறித்த சாரதியை பிணையில் விடுவிக்குமாறு அவர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி கோரினார். மாணவனை மோதிய பஸ்ஸுக்கு பிரேக் இல்லாத நிலையிலேயே அவர் அதைச் செலுத்தியுள்ளார் என்று பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர்.

அதனையடுத்து சாரதியை 5

(22ஆம் பக்கம் பார்க்க)

## மகளிருக்கு ஓட்டோ வழங்கும் நிகழ்வு அல்வாயில் இன்று

வடமராட்சி, ஜூலை 11

வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் மகளிருக்கு ஓட்டோக்களை வழங்கும் வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தின் திட்டத்தின் கீழ் முதலாவது ஓட்டோ வழங்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நிறுவ னத் தலைவர் பா.இரகுநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. அல்வாயில் உள்ள நிறுவன மண்டபத்தில் இடம்பெறும் இந்த நிகழ்வில் கரவெட்டி பிரதேச செயலர் ச.சிவசிறிபிரதம விருந்தினராகக் கலந்துகொண்டுதெரிவுசெய்யப் பட்ட பெண்மணிக்கு ஓட்டோவைக் கையளிப்பார். (ஒ-173)

## மஹிந்தவின் காட்டாட்சிக்கு ஆஸி.யும் ஒத்துழைக்கின்றதா?

### குடிவரவு அமைச்சர் மொரிசனின் இரகசிய யாழ்.விஜயம் குறித்து கூட்டமைப்பு சீற்றம்

"ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசினதும், அதன் படைகளினதும் அட்டூழியங்களினால் தான் உயிருக்குப் பயந்து இலங்கையிலிருந்து ஆஸ்திரேலியாவுக்கு படகுகள் மூலம் அகதிகளாக மக்கள் செல்கின்றனர். அதிகளவான மக்கள் யாழ். மாவட்டத்திலிருந்தே இவ்வாறு

(22ஆம் பக்கம் பார்க்க)

முதற்தடவையாக உங்கள் திசைகாட்டியின் விசா வெல்லப்படும் என்கின்ற உறுதிப்பாட்டுடன்

செங்கன் விசா - 2 வருடம் - 4 வருடம்

கல்வித்தகைமை எதுவும் தேவையே இல்லை.
சுவிஸ், பிரான்ஸ், நோர்வே, இத்தாலி உட்பட
26 நாடுகளுக்கு படிக்க உழைக்க
அரிய வாய்ப்பு

திட்டத்தில் இணைந்து 5 தினங்களில்
தூதரகங்களில் விண்ணப்பதாரி
நேரில் விண்ணப்பம் சமர்ப்பிக்கலாம்.

முடிவுநாள் : 11.07.2014

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்

175, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

021 221 9016, 021 568 9090



(49599)(10.6)

## ஹன்ரர் வாங்கித் தரவில்லையாம் தீ மூட்டி உயிர்துறந்த இளைஞன்

*யாழ்ப்பாணம், ஜூலை 11*

*ஹன்ரர் வாகனம் வாங்கித்தரவில்லை என்று கூறி மண்ணெண்ணை ஊற்றித் தீ மூட்டியவர் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார்.*

*யாழ்.கொழும்புத்துறையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த ஜெயாகரன் அயித் (வயது - 20) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்தார்.*

*அவரது தந்தையார் வெளிநாட்டில் உள்ளார். தனக்கு ஹன்ரர்*

(22ஆம் பக்கம் பார்க்க)

## டெங்கு ஒழிப்பு நடவடிக்கையை தீவிரப்படுத்த யாழ்.மாவட்டச் செயலகத்தில் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை 11

கரவெட்டி, பருத்தித்துறை, சாவகச்சேரி மற்றும் உடுவில் பிரதேச செயலாளர் பிரிவுகளிலேயே அதிகளவு டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இந்தப் பிரதேசங்களில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துமாறு யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 7 ஆம் திகதி முதல் எதிர்வரும் 13 ஆம் திகதி வரையில் டெங்கு ஒழிப்பு வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டு,

(22ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

கிரபிக்ஸ் • அனிமேஷன் • மல்டிமீடியா
விரிவான இலவச கருத்தரங்கு
12 வருடம் அனுபவம்மிக்க விரிவுரையாளர்(CSC India)
13th July (ஞாயிறு)
முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளுங்கள்
CSC-ASIAN COMPUTER EDUCATION
யாழ்.நகரில்
2G, ஸ்ரான்லி வீதி,
T.P : 021-222 5677

## சமய சந்நிதி

வலி. வடக்கு, ஜீலை 11

மல்லாகம் பழம்பதி பிள்ளையார் ஆலய அருள்மிகு ஸ்ரீ தேவி கருமாரி அம்பாளுக்கு மஹா கும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிக்கு இடம்பெறும். (க-86)

வான் விற்பனைக்கு
மிகவும் நல்ல நிலையில் உள்ள டவுன் ஏஸ் (லொட்டோ) வான் AC Agestable Seat, 4 கதவு (F)பிளட்ரூப் Sony Setup என்ஜின் பொடி 100% நிலையில் உள்ள வான் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 291 5823

## மஹோற்சவம்

சுன்னாகம், ஜீலை 11

புன்னாலைக்கட்டுவன் அருள்மிகு ஆயக்கடவை சித்தி விநாயகர் தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவம் இடம்பெற்று வருகின்றது.

இன்று 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சுவாமி தேரில் ஆரோகணித்து வீதிவலம் வருவர். நாளை சனிக்கிழமை தீர்த்தோற்சவம் இடம்பெறும். (க)

## சின்னம் சூட்டும் வைபவம்

வலி.மேற்கு, ஜீலை 11

சங்கானைசிவப்பிரகாசமகாவித்தியாலயத்தில்இன்றுகாலை 9 மணிக்கு சாரணர் சின்னம் சூட்டும் நிகழ்வு வித்தியாலய அதிபர் எஸ்.நோபேட் உதயகுமார் தலைமையில் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## பதிவுகளை மேற்கொள்ளல்

வலி. வடக்கு, ஜீலை 11

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உடற்கல்வி டிப்ளோமா பட்டத்தைப் பெற்று 2012, 2013 ஆம் ஆண்டுகளில் வெளியேறி வேலையற்று இருக்கும் டிப்ளோமா பட்டதாரிகளையும் மற்றும் ஏற்கனவே வெளியேறி வேலையற்று இருக்கும் டிப்ளோமா பட்டதாரிகளையும் உடனடியாக டிப்ளோமா பட்டதாரிகள் உடற்கல்வி ஆசிரிய சங்கத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு சங்கத் தலைவர் ப.தர்மகுமாரன் அறிவித்துள்ளார். (க-86)

## மரண அறிவித்தல்

### செல்லப்பா கந்தசாமி



மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் குமரபுரம் பரந்தனை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா கந்தசாமி நேற்று (10.07.2014) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் செல்லப்பா- சின்னம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற சிவபூபதியின் அன்புக் கணவரும், சிவானந்தசோதி, அருள்சோதி, வைகுந்தநாதன் ஆகியோரின் அன்புத்தந்தையும், காலஞ்சென்ற சின்னப்பா மற்றும் மோகனசுந்தரம், தவரஞ்சிதம் ஆகியோரின் மாமனாரும், தாரணி, பூங்கோதை, வசிதரன், பிரதீபன், சிவகௌரி, கௌசிகன், பாலகிருஷ்ணன், பிரகலாதன், கஜனி ஆகியோரின் பேரனும், இராசம்மா, காலஞ்சென்ற சண்முகசுந்தரம் மற்றும் கணேசன், சகுந்தலா ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் நேசரத்தினம், சிவயோகராணி, கனகரத் தினம், காலஞ்சென்ற புவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், பிரணவன், பார்கவி ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.07.2014) வெள்ளிக்கிழமை பி.ப. 1.00 மணிக்கு அவரது குமரபுரம் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோரக்கன் கட்டு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

56, குமரபுரம்,
பரந்தன்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 791 5677

(45595) (4.6.3)

## பரிசளிப்பு விழா இன்று

கரணவாய், ஜீலை 11

உடுப்பிட்டி அ.மி.கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி திறந்தவெளி அரங்கில் இடம்பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் எஸ். கிருஷ்ணகுமார் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா கலந்து கொள்ளவுள்ளார். (ற-108)

## 2ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர்
**சின்னத்தம்பி பத்மநாதன்**
(பப்பு-பிரான்ஸ்)



தோற்றம்
18.09.1946

மறைவு
11.07.2012

ஈராண்டானதுவே உங்கள் முகம் கண்டு
ஆறவில்லை எம் இதயம்
நித்தம் புலம்புகிறோம்
உங்கள் முகம் காணாமல்...

நாவற்குழி வீதி,
மந்துவில் ஒழுங்கை, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

## மறவன்புலோ வரைபடம் திறப்பு விழா

தென்மராட்சி, ஜீலை 11

தென்மராட்சி தெற்கு மறவன்புலோ கிராம அலுவலர் பிரிவை உள்ளடக்கிய வரைபடத் திறப்பு விழா இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயத்தில் 10 அடி உயரமும் 8 அடி அகலமும் கொண்ட இந்தவண்ண வரைபடத்தை யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் திறந்து வைக்கவுள்ளார்.(ற-9)

கிரபிக்ஸ் • அனிமேஷன் • மல்டிமீடியா
July 19th & 20th புலமைப்பரிசில் பரீட்சை
(Sat & Sunday)
மேலதிக விபரங்களுக்கு
CSC-ASIAN COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2008 CERTIFIED TRAINING INSTITUTION
யாழ்.நகரில்
2G, ஸ்ரான்லி வீதி,
T.P : 021-222 5677



# யாழ்ப்பாணம் மாநகர சபை

## நல்லூர் கந்தசுவாமி கோயில் மகோற்சவ கால தற்காலிக கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2014

நல்லூர் கந்தசுவாமி கோயில் மகோற்சவ காலத்தில் தற்காலிக கடைகள் அமைப்பதற்கான நிலையங்களை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் 14.07.2014 - 25.07.2014ஆம் திகதி வியாழன் முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

| | |
|---|---|
| கேள்விப் படிவக்கட்டணம் | 570/= (வற் வரி,தே.க.வரி உள்ளடங்கலாக) |
| கேள்வி படிவம் விநியோகிக்கும் திகதி | 14.07.2014 - 24.07.2014 பிற்பகல் 2.00 மணிவரை |
| கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல் | 25.07.2014 முற்பகல் 10.00 மணிவரை |
| கேள்வி திறத்தல் | 25.07.2014 முற்பகல் 10.30 மணிக்கு |
| துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையங்களுக்கான மீளளிக்கக்கூடிய வைப்புப் பணம் | 10000/= |
| ஏனைய கடைகளுக்கான மீளளிக்கக்கூடிய வைப்புப்பணம் | 2.000/= |

விண்ணப்பப் படிவங்கள் யாவும் ஆணையாளர் மாநகர சபை என முகவரியிடப்பட்டு இவ் அலுவலகத்தில் வைக்கப்படும் கேள்விப் பெட்டியினுள் 25.07.2014 முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும். கேள்வியில் சித்தி பெற்றவர் கேள்வித் தொகையை 31.07.2014 பிற்பகல் 2.30 மணிக்கு முன்னர் முழுமையாகச் செலுத்தி குறிக்கப்பட்ட இடத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விவரங்களை மாநகராட்சி மன்ற நானாவித இறைவரிப் பகுதியில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்வதுடன் வரை படத்தையும் பார்வையிடலாம்.

கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

குறிப்பு :

1)கோயில் சுற்றாடலில் உள்ள நிரந்தரக் கடைகளும் உற்சவ காலத்திற்கு மாநகர சபையால் வழங்கப்படும் கடைகளும் தவிர வேறு கடைகள் தனியார் காணிகளிலோ அல்லது தனிப்பட்ட இடங்களிலோ சபையின் அனுமதி இன்றி திறந்து வியாபாரம் நடத்தவும் விளம்பரங்கள், விளம்பரப் பதாகைகள் அமைப்பதற்கும் அனுமதி வழங்கப்பட மாட்டாது என்பதையும் அறியத்தருகின்றேன்.

2)கோயில் சுற்றாடலில் உள்ள நிரந்தரக் கடைகள் வியாபார மாற்றம் செய்வதாயின் அதற்கான உரிமத்தை யாழ்ப்பாண மாநகர சபையிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

3) ஆகக்கூடிய தொகையாக துவிச்சக்கரவண்டிக்கு ரூபா 5/= உம் மோட்டார் வண்டிக்கு ரூபா 10/= உம் மட்டுமே அறவிடப்பட வேண்டும். தலைக்கவசத்திற்கு பணம் அறவிடப்படலாகாது.

4)உணவு கையாளும் நிலையங்கள் மேலதிகமாக சுகாதார வைத்திய அதிகாரியினால் வழங்கப்படும் படிவத்தைப் பூர்த்தி செய்து பொது சுகாதார பரிசோதகரினால் உறுதிப்படுத்திய பின்னர் விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

5)நல்லூர் உற்சவ கால வியாபார அனுமதிபெற்ற வியாபாரிகள் மாத்திரம் உள்நுழைய அனுமதிக்கப்படுவார்கள். ஏனைய வியாபாரிகள் எக்காரணம் கொண்டும் உள்நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

மாநகராட்சி மன்றம், யாழ்ப்பாணம்.
10.07.2014

திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா
முதல்வர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

(சி/14961)(7.6.3)

## விசேட பொதுக் கூட்டம்

வட்டுக்கோட்டை, ஜீலை 11

வட்டுக்கோட்டை கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் நாளை 12ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் சங்கத் தலைவர் க.சி.தவராசா தலைமையில் இடம்பெறவுள்ளது.


முதன்மை விருந்தினராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட கூட்டுறவுஅபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே. அருந்தவநாதன் கலந்து கொள்வார். (க)

## மரண அறிவித்தல்

### திருமதி இந்திராணி சண்முகலிங்கம்

(இளைப்பாறிய ஆசிரியை - யா/கொக்குவில் இந்துக்கல்லூரி)



மலேசியாவைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட இந்திராணி சண்முகலிங்கம் நேற்று (10.07.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதர் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - நேசமணி தம்பதியரின் மருமகளும், சண்முகலிங்கம் (இளைப்பாறிய தபால் அதிபர்) அவர்களின் பாசமிகு மனைவியும், பாரததேவி, காராளமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும், தேவகி தேனுமதி (கனடா), திரிவேணி திரிலோசினி (போதனாசிரியர் - தொழிநுட்பவியல் கல்லூரி, யாழ்ப்பாணம்), கிருஷ்ணவதனா (உதவிச் செயலாளர் - தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு, கொழும்பு), தர்ஷினி (ஆசிரியை, யா/மகாஜனக்கல்லூரி, தெல்லிப்பழை) ஆகியோரின் அன்புத் தாயாரும், இளமேகன் (கனடா), குகன் (பரிசோதகர், தேசிய தொழில்பயிற்சி அதிகாரசபை, கிளிநொச்சி), Dr.செந்தூரன் (வைத்தியர் - யாழ்.போதனா வைத்தியசாலை), சந்திரசேகரம் (விரிவுரையாளர் - யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், பவனுஜெயன், கேசிகன், தரண்யா, லக்ஷயா, லாஹித்யா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.07.2014) வெள்ளிக்கிழமை மு.ப.10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வைரவர் கடாட்சம், பலாலி வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.

(49843) (12.3.6)

தகவல்: கணவர்,
சகோதரி.

## செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 11

யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்சாலை மன்றத்தின் ஏற்பாட்டில் தொழில் முயற்சியாளர்களுக்கான செயலமர்வு நாளை சனிக்கிழமை இராசாவின் தோட்டம் வீதியிலுள்ள மன்ற அலுவலக மண்டபத்தில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை இடம்பெறவுள்ளது.

இதில் பங்குபற்ற ஆர்வமுள்ள தொழில் முயற்சியாளர்கள் நாளைய தினத்துக்கு முன்னர் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு மன்றத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (க)

# காரைநகர் தியாகராசா ம.ம.வியின் பரிசளிப்பு விழா





காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா ம.ம.வித்தியாலய வருடாந்தப் பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தினமும் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. வித்தியாலய அதிபர் திருமதி வா.தவபாலன் தலைமையில் காலை 9.30 மணிக்கு மடத்துக்கரை முத்துமாரி அம்மன் ஆலய முன்றிலிலிருந்து விருந்தினர்கள், மாணவர்களின் கலைநிகழ்வுகள், பாண்ட் வாத்திய இசை என்பவற்றுடன் அழைத்து வரப்பட்டு நடராசா ஞாபகார்த்த மண்டபத்தில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் தி.ஜோன்குயின்ரஸ், கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்ட வவுனியா வலய ஓய்வுநிலைக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மேகநாதன், முன்னாள் கல்விப் பணிப்பாளர் வி.இராதாகிருஷ்ணன், காரைநகர் கோட்டக் கல்வி அதிகாரி பு.ஸ்ரீவிக்னேஸ்வரன் ஆகியோரும் மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கினர். தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்த விழாவில் பாடசாலையின் முன்னாள் அதிபர் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளையும் கலந்துகொண்டனர். (வ-250)

## கும்பாபிஷேக மலர் வெளியீடு

கரணவாய், ஜூலை 11

இமையாணன் திடல் பத்திரகாளி அம்பாள் ஆலய சங்காபிஷேக நிகழ்வும், கும்பாபிஷேக மலர் வெளியீடும் இன்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளது.

ஆலய பரிபாலனசபைத் தலைவர் கோ.குணசிங்கம் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் நூலின் வெளியீட்டுரையை ஆசிரியர் மா.செல்வதாஸும், அறிமுகவுரையை யாழ்.பல்கலைக்கழக சமூகவியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணனும் நிகழ்த்துவர்.

நூலின் முதற் பிரதியை ச.நல்லதம்பி பெற்றுக் கொள்வார். (வ-108)

# போக்குவரத்து விதிகளை மீறிய 30 பேர் மாட்டினர்

வாகன அனுமதிப் பத்திரம், வரிப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம் என்பன இல்லாது வாகனம் செலுத்திய சுமார் 30 பேர் போக்குவரத்துப் பொலிஸாரிடம் செவ்வாய்க்கிழமை மாட்டினர்.

யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள வாகனப் பரீட்சகர் இந்திக்க பிரேம்லால் மற்றும் நெல்லியடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கங்கார தலைமையில் செவ்வாய்க்கிழமை வடமராட்சிப் பகுதியில் திடீர் வாகனப் பரிசோதனை நடவடிக்கை இடம்பெற்றது.

நெல்லியடி, வதிரிச் சந்தி, மூத்த விநாயகர் கோயிலடி உள்ளிட்ட பகுதிகளிலுள்ள வீதிகளில் குறிப்பிட்ட குழுவினர் போக்குவரத்துப் பொலிஸாரின் உதவியுடன் போக்குவரத்தில் ஈடுபட்ட வாகனங்களைத் திடீர் சோதனைக்குட்படுத்தினர்.

தனியார் வாகனங்கள் மட்டுமன்றி இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்கள், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான வாகனங்கள் மற்றும் பாடசாலைச் சேவையில் ஈடுபடும் வாகனங்கள் உட்பட அனைத்து வாகனங்களும் பரிசோதிக்கப்பட்டன.

இதன்போது வாகனம் செலுத்துவதற்கான சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம், வரி அனுமதிப் பத்திரம் என்பன இல்லாமலும் பிறேக் மற்றும் ஒளிச்சமிக்ஞை இல்லாது போக்குவரத்தில் ஈடுபட்ட சுமார் 30க்கு மேற்பட்ட வாகனச் சாரதிகள் போக்குவரத்துப் பொலிஸாரிடம் அகப்பட்டனர். (வ-108)

## ஆலயத்துக்கு வெண்கல மணி

யாழ்ப்பாணம், ஜூலை 10

யாழ்ப்பாணம் அத்தியடி விநாயகப் பெருமான் ஆலயத்துக்கு அத்தியடியைச் சேர்ந்தவரும், லண்டனில் வசிப்பவருமாகிய கனகசபை சபாநாதன் என்பவரால் அவரது மனைவியின் நினைவாக புதிய வெண்கல மணி ஒன்று அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

தற்போது ஆலய மணி கோபுரத்துள் இந்த மணி பொருத்தப்பட்டுள்ளது. (ஒ)

# ஆயுள்வேத வைத்தியசாலையில் தொலைபேசி பாவனைக்கான கட்டணம் பிரதேச சபையால்

வலி.தென்மேற்கு, ஜூலை 11

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் கீழ் இயங்கும் ஆயுள்வேத வைத்தியசாலையில் கடமையாற்றிவரும் மருத்துவருக்கு சுற்றறிக்கைக்கு ஏற்ப தொலைபேசிப் பாவனைக்கான மாதாந்தம் 6ஆயிரம் ரூபா வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கியுள்ள உறுப்பினர்கள் வெளிநாட்டு அழைப்புகளுக்கான கட்டணம் வ்ழங்க முடியாது என்றும் தீர்மானித்துள்ளனர்.

வலி.தென்மேற்குப் பிரதேச சபை நிர்வாகத்துக்கு உட்பட்ட ஆனைக்கோட்டை உப அலுவலகத்தில் இயங்கும் ஆயுள்வேத வைத்தியசாலையில் கடமையாற்றி வரும் மருத்துவர் தமது பாவனைக்குரிய தொலைபேசிக் கட்டணத்தை வழங்குமாறு பிரதேச சபையைக் கோரியிருந்தார்.

மருத்துவருடைய கோரிக்கையைப் பற்றி பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்ட போது சுற்றறிக்கைகளின்படி மருத்துவரின் தொலைபேசிக் கட்டணம் வழங்க வேண்டும்என்று தெரிய வந்தது. அதையடுத்து மருத்துவரின் கோரிக்கையைஏற்றுக்கொண்ட உறுப்பினர்கள் மருத்துவர்பாவிக்கும் தொலைபேசிக்கான கட்டணம் 6000 ரூபாவரை வழங்கலாம் என்றும் வெளிநாட்டுப் பாவனைக்கான கட்டணம் வழங்க முடியாதென்று தீர்மானித்ததுடன் தொலைபேசி பாவனைக்குரியசிட்டையை சபையில் சமர்ப்பித்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் தெரிவித்தனர். (வ-115)




யாழ். கலாலயா பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)



மகளிருக்கான துரித 1 மாத கால பயிற்சிகள் வெளிநாடுகளிலிருந்து விடுமுறையில் வந்திருப்பவர்களுக்கும் விரைவில் வெளிநாடு செல்ல இருப்பவர்களுக்கும் மற்றும் ஆர்வமுள்ளவர்களுக்கும் உகந்ததொரு பயிற்சிநெறி.

கேக் ஐசிங் உணவு தயாரித்தல் கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும், Facials உடன் மணப் பெண் அலங்காரம், பலவித சேலை அணியும் முறைகள், Saree (B)பிளவ்ஸ் தைத்தல் ஆகிய பயிற்சிகள்.

ஆரம்பம்:-14.07.2014 திங்கட்கிழமை காலை 9.30
மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.
- இயக்குநர் -

குருவே துணை



வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்றம் வழங்கும்
சிறப்பு யோகா வாழ்வு மற்றும் பயிற்சிகள்

அருட்தந்தை தத்துவஞானி வேதாத்ரி மகரிஷி அவர்களால் வடிவமைக்கப்பட்ட முழுமை நல வாழ்வுக்கு மனவளக்கலை யோகா பயிற்சிகள்

வேதாத்ரி மகரிஷி அவர்களினால் இவ்வுலகிற்கு அளித்துள்ள பயிற்சிகளானவை மனித வாழ்வில் உடலுக்கு நலத்தையும், உயிருக்கு தியானத்தையும் வழங்குவதோடு மனித வாழ்வியலில் அமைதியையும், சிறந்த ஒழுக்கத்தையும் வழங்கக் கூடியனவாகும்.

அப்பயிற்சிகளாவன:
- எளிய முறை உடற்பயிற்சிகள்
- எளிய முறை காயகல்ப பயிற்சி
- எளிய முறை தியானப் பயிற்சிகள்
- அகத்தாய்வு எனும் தற்சோதனைப் பயிற்சிகள்

காலம்: 12.07.2014 - 18.07.2014 வரை (பிற்பகல் 4.30 மணி தொடக்கம்)
மனவளக்கலை பயிற்சி ஆரம்பம்

இடம்: நாச்சிமார் கோயில் கல்யாண மண்டபம், கே.கே.எஸ்.வீதி, வண்ணார்ப்பண்ணை, யாழ்ப்பாணம்.

தலைமையுரை: மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி சி.முருகானந்தவேல் அவர்கள்

பயிற்சி வழங்குபவர்: மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி எஸ்.இந்திரா அவர்கள் (தமிழ்நாடு, இந்தியா)

அகத்தாய்வு !
12.07.2014 - 13.07.2014ஆகிய இரு தினங்கள் வண்ணார்பண்ணைத் தவமையத்தில் காலை 08.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை.
- ஆரம்பப் பயிற்சி முடித்தவர்களுக்கு மட்டும் -

புதிதாக பயிற்சி பெற விரும்புபவர்களுடன் ஏற்கனவே பயிற்சி பெற்றவர்களும் பயின்று பயன்பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
"சிறப்பான பயிற்சிகளை சிறப்புடனே பயில்வோம்"
"வாழ்க வளமுடன்"

தொடர்புகளுக்கு:
077 772 6732/077 123 5646,
071 440 3268/077 736 8745

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்றம்,
கேசாவில் பிள்ளையார் வீதி, முதலாம் ஒழுங்கை,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
(49695)(12.3.6)



கரம்பொன் தூய செபஸ்தியார் ஆலயப் பெருவிழா - 2014

மேற்படி பெருவிழா 06.07.2014 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.
நற்கருணைப் பெருவிழா 12.07.2014 மாலை 5.00 மணிக்கும்
திருவிழாத் திருப்பலி 13.07.2014 காலை 7.00 மணிக்கும் நடைபெறும்.
குறிப்பு : 13.07.2014 அன்று காலை 6.00 மணிக்கு யாழ். பஸ்தியன் சந்தியில் இருந்து வாகன வசதி செய்யப்பட்டுள்ளது.
புனிதரின் ஆசிபெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
பங்குத்தந்தை, பங்குமக்கள்
தூய செபஸ்தியார் ஆலயம் கரம்பொன்
(49833)
(7.6.3)

லொறி விற்பனைக்கு
நல்ல நிலையில் உள்ள 41 ஸ்ரீ XXXX இலக்கமுடைய Asok Leyland லொறி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 980 6919

வீடு வாடகைக்குண்டு
மானிப்பாய் வீதியிலிருந்து ஆரம்பமாகும் வெள்ளாந்தெருவில் இருக்கும் மேல்மாடி 3அறைகள் மற்றும் சகல வசதிகளுடனும் வாடகைக்குண்டு.
தொழில் புரியும் (கணவன், மனைவி)குடும்பம் விரும்பத்தக்கது.
(50937)
(12.3.6)
தொடர்பு: 077 789 3125

# போரை வெற்றி கொண்ட அரசால் சுற்றாடலை பாதுகாக்க முடியவில்லை

## சபையில் சஜித் பிரேமதாச


சஜித் பிரேமதாச

கொழும்பு,ஜூலை 11
போரை வெற்றிகொண்ட இந்த அரசினால் சுற்றாடலைப் பாதுகாக்க முடியவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன் தினம் உரையாற்றிய போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத்தை இல்லாமற் செய்த அரசால் ஏன் சட்ட விரோத மர வியாபாரி களை கட்டுப்படுத்த முடிய வில்லை. சுற்றாடல் பாதுகாப்பு குறித்த நாடாளுமன்ற விவாதத்தில் துறைசார் அமைச்சர்கள் பங் கேற்கவில்லை. இதன் மூலம் சுற்றாடல் பாதுகாப்புக்கு அரசு வழங்கும் முக்கியத்துவம் புலனாகின்றது.

சட்டவிரோதமான முறையில் ஏராளமான மரங்கள் வெட்டப் படுகின்றன. வனவிலங்கு துறையிலும் பெரியளவில் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

பெருமளவில் யானைகள் களவாடப்படுகின்றன. வன விலங்குகள் சட்டவிரோத மான முறையில் வெளிநாடுகளுக்குக் கடத்தப்படுகின்றன.

மஹிந்த சிந்தனைக் கொள் ளைத் திட்டம் வெறும் வார்த் தைகளுக்கு மட்டுப்படுத்தப்பட் டுள்ளது. அரசு குறுகிய கால நலன்களை அடிப்படையாகக் கொண்டே செயற்படுகின் றது.

மத்தள விமான நிலையம் அமைக்கும் போது சுற்றாடல் காரணிகள் குறித்து கவனம் செலுத்தப்படவில்லை என சஜித் பிரேமதாச நாடாளு மன்றில் தெரிவித்துள்ளார்.

இவைமட்டுமன்றி இனமுரண் பாடுகள் தலை தூக்கத் தொடங் கியுள்ளதாகவும் சஜித் பிரேம தாச தெரிவித்துள்ளார். (ஓ)

# வறட்சி நிவாரணத்துக்காக ரூ.100 மில்லி.ஒதுக்கீடு

கொழும்பு,ஜூலை 11
வறட்சி காரணமாக அநுராத புரம் மாவட்டத்தில் விவசாயத் தைக் கைவிட்ட விவசாயிக ளுக்கு100மில்லியன் ரூபாவை நிவாரணமாக பெற்றுக் கொடுக்க அரசாங்கம் நட வடிக்கை எடுத்துள்ளது.

இதற்கிணங்க மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலுமுள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பங் களை இலக்காகக் கொண்டு வேலைக்காக நிதி பெறும் வேலைத்திட்டம் என்ற பெயரில் இதற்கான செயற்பாடுகள் நடை முறைப்படுத்தப்படவுள் ளன.

இதன் முதற் கட்டமாக பிரதேச செயலாளர் பிரிவுக்கு இரண்டு மில்லியன் ரூபா வீதம் 22 பிரதேச செயலாளர் பிரிவுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

விவசாய சேவைகள் திணைக் களம். நீர்ப்பாசன திணைக் களம், பொருளாதார அபிவி ருத்தியமைச்சு ஆகியவை ஒன்றிணைந்து அநுராதபுரம் மாவட்டத்தின் மாவட்டச் செய லாளர் அலுவல கத்திற்கூடாக நடைமு றைப்படுத்தப்பட வுள்ள இந்த வேலைத் திட்டத்தின் கீழ் ஒரு குடும்பத்திற்கு நாளொன்றுக்கு 500 ரூபா நிவாரண மாக வழங்கப்படும்.

அதேநேரம் நிவாரணம் மூலம் பயன்பெறுவோரின் உதவியுடன் அந்தந்த பிரதே சங்களில் கைவிடப்பட்ட குளங் கள் புனரமைப்பு செய்யப்பட வுள்ளன. (ஓ)

# சீன, தாய்வான் கப்பல்கள் இலங்கை கடற்பரப்புக்குள் நுழைவதேயில்லை

## தென்னிந்திய மீனவர்களாலேயே பாதிப்பு என்கிறார் ராஜித


ராஜித சேனாரத்ன

கொழும்பு,ஜூலை 11
தாய்வான், சீனா ஆகிய நாடு களின் கப்பல்கள் இலங்கை கடற்பரப்புக்குள் நுழைந்து கடற்றொழிலில் நடவடிக்கை யில் ஈடுபடுவதில்லை என குறிப்பிட்ட கடற்றொழில் மற் றும் நீரியல்வள அபிவிருத்தி அமைச்சர் ராஜித்த சேனா ரத்ன, ஜெயலலிதா என்ன கூறி னாலும், கச்சதீவு இலங் கைக்கு சொந்த மானது என்று இந்திய அரசு நீதிமன்றில் அறிவித்து விட்டதாகவும் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன் தினம் வாய்மூல விடைக்கான கேள்விசுற்றின்போது ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினர் ரவி கருணா நாயக்க எழுப்பிய இடையீட்டுக் கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

"தாய்வான், சீனா, இந் தியா ஆகிய நாடுக ளின் கப்பல்கள் இலங் கையின் கடற்பரப்புக் குள் நுழைந்து கடற் றொழிலில் ஈடுபடு வதாக கூறப்படுகின் றது. எனவே, இலங் கைக்குரியகடல்வளங் களைப் பாதுகாப்ப தற்கு அரசு முன்னெ டுத்துள்ள நடவடிக் கைகள் எவை?, கச்ச தீவு இலங்கைகுரி யது என அறி விக்கப் பட்டுள்ள போதிலும், அது தொடர்பில் எந்த நோக்கத்துடன் ஜெய லலிதா குரலெழுப்பு கின் றார்?" இவ்வாறு ரவி கருணாநாயக்க எழுப் பியிருந்த கேள்விக ளுக்கு பதில் வழங் கிய அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு:-

தாய்வான், சீனா ஆகிய நாடுகள் சர்வதேச கடற்பரப்பிலேயே மீன்பிடி நடவடிக்கை யில் ஈடுபடுகின்றன. இலங்கைக் கொடியு டன் எமது கடல் எல் லையில் மீன்பிடி நட வடிக்கையில் சீன கப்பல்கள் ஈடுபடுவ தாக ஜே.வி.பி யின் நாடாளுமன்ற உறுப் பினர் ஒருவர் குற்றஞ் சாட்டியுள்ளார். இதை ஏற்கமுடியாது. முத வீட்டு சபையின் அனு மதியுடனேயே அது வும் சர்வதேச கடற் பரப்பிலேயே சீனா மீன்பிடி நடவடிக்கை யில் ஈடுபடுகின்றது என்பதைச்சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

தென்னிந்திய மீனவர் களே இலங்கை கடற் பரப்புக்குள் நுழைந்து எமது கடல் வளங் களைஅழிக்கின்றனர்.

அதேவேளை, இந்து சமுத்திர வலயத்தி லுள்ள மீன்களுள் 48 சதவீத மானவற்றை குறித்து வலயத்துக்கு அப்பாலுள்ள நாடுகள் அறுவடை செய் கின்றன. குறிப்பாக ஸ்பெயின், பிரான்ஸ் ஆகிய நாடுகள் டபிள் ரோலரை பயன்படுத்துகின்றன. இத னால் கடல்வளம் பாதிப்படைகின்றது.



உள்ளக்கோயிலில் உறைந்திருக்கும் அன்னையின்
பதின் நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
நாகமுத்து
சிதம்பரப்பிள்ளை

பூர்வபக்க சதுர்த்தசி:
11.07.2014

மண்ணில் மழலையாய்
14 ★ 04 ★ 1914

விண்ணில் தெய்வமாய்
16 ★ 06 ★ 2000

ஆறாத்துயரோடு ஆண்டுகள்பல சென்றாலும்
அன்னையெனும் தீபம் அணையாது ஒளிர்கிறதே!
மண்ணுலகில் உள்ளவரை மாண்புடனே திகழ்ந்தீரே!
விண்ணுலக வாழ்வின் விந்தைதனை யாரறிவார்

பாசமெனும் பிணைப்பினிலே பதிந்திருக்கும் தாய்மைதனை
பாரினிலே உள்ளவரை பணிந்தே நாம் துதித்திடுவோம்
அறிவுப் பசிதீர அயராது தினம் உழைத்தீர்!
அறியாமை நீக்கிவிட அருளுரைகள் தந்தீரே!

நிலையில்லா இவ்வுலகில் நிறைந்திருக்கும் தொல்லைதனை
நீக்கிவிட்டுச் சென்றீரோ நிமலன் அருள்வேண்டி
காலத்தின் போக்கினிலே கருமங்கள் பல ஆற்றி
கணப்பொழுதில் மறைந்தீரே! காண்போமா இப்புவியில்

என்றும் உங்கள்
நினைவில் வாழும்.
குடும்பத்தினர்.

குடியிருப்பு,
மந்துவில் வடக்கு, கொடிகாமம்.
(43681)(4.3.6)




ஓராண்டு நினைவஞ்சலி

திருமதி
மங்கையர்க்கரசி
குலசேகரம்பிள்ளை

மண்ணில்
09.10.1936

விண்ணில்
22.06.2013

அன்பின் உறைவிடமாய் பாசத்தின் திலகமாய்
எம் கண்களின் மணியாய் திகழ்ந்தெம்மை வாழவைத்த எம்
அன்புத்தாயே! திடீரென எம்மைத் தவிக்கவிட்டுச் சென்றீரோ
நினைத்திட முடியவில்லை நெஞ்சுதான் பொறுக்குதில்லை
ஓராண்டு ஓடி மறைந்தாலும் எப்படியம்மா உம்மை மறவோம்?
விழிகளும் இன்னும் ஓயவில்லை கண்ணீரருவி பாயுது
எங்கள் கண்ணீர் அலைகளை உங்களுக்கு காணிக்கையாக்கி
உங்கள் ஆத்மா இறை நிழல் சேர பிரார்த்திக்கின்றோம்
எங்கள் உயிர் உள்ளவரை உங்கள் நினைவுகளைச்
சுமந்தபடி நாம் வாழ்வோம்.

அன்னாரின் பிரிவால் வாடும்
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

53/6, அன்னசத்திர லேன்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(49817)(7.6.3)




31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்
செல்வநாயகம்
மகாலிங்கம்
(மகான்)

தோற்றம்
27 . 02 . 1960

மறைவு
11 . 06 . 2014

நீங்கா அன்பு தந்து அழியாத பாசம் வைத்து
ஆண்டெல்லாம் அழுது புரள நீங்கள் எம்மை
விட்டுச் சென்றீர்கள்
நேர்மையும் கண்ணியமும் உமது இரண்டு கண்களாய்
பழகும் திறனுடையாய் சிரிக்கும் மனதுடையாய்
பொறாமை உணர்வுகள் இன்றி அனைவரும் நலம் வாழ
நல்லிதயம் கொண்டு வாழ்ந்தாய்
அழகுச் சூரியனே எம்மையெல்லாம் விட்டுப் பிரிய
காலன் உன்னைக் கடத்திச் சென்றான்
ஒரு மாதம் போனது ஆனால் ஒரு நாள்
போனது போல் நாங்கள் எல்லோரும் துடிக்கின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.
(43368)(4.3.6)

# கிளர்ச்சியாளர்கள் வசம் அணு மூலப்பொருள்கள்

## ஈராக் அரசு தெரிவிப்பு

ஐ. எஸ். ஐ. எஸ். கிளர்ச்சியாளர்கள் அணு மூலப் பொருள்களைக் கைப்பற்றியுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையை ஈராக் எச்சரித்துள்ளது.


மொசூல் நகரிலுள்ள பல்கலைகழகத்தில் விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்காக வைக்கப்பட்டிருந்த மூலப் பொருள்களையே கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியுள்ளனர்.

சுமார் 40 கிலோ கிராம் நிறையுடைய யுரேனியத் தைக் கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபைக்கான ஈராக்கிய பிரதிநிதி கடிதமொன்றில் கூறியுள்ளமை ஊடகங்களுக்குக் கசிந்துள்ளது.

ஈராக் மற்றும் ஏனைய வெளிநாடுகள் மீது அவற்றைப் பயன்படுத்தும் அச்சுறுத்தலைத் தடுப்பதற்கு இந்தக் கடிதத்தின் ஊடாகச் சர்வதேச நாடுகளின் உதவி கோரப்பட்டுள்ளது.

எனினும் இந்த அச்சுறுத்தலை நிராகரித்துள்ள அமெரிக்கா, கைப்பற்றப்பட்ட மூலப் பொருள்கள் செறிவூட்டப்பட்ட யுரேனியமாக இருக்காது என நம்புவதாக கூறியுள்ளது.

இந்த மூலப் பொருள்களைப் பயன்படுத்தி ஆயுதங்களைத் தயாரிப்பது கிளர்ச்சியாளர்களுக்குக் கடினமான ஓர் விடயம் என அமெரிக்கா அதிகாரிகள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர்.(த)



மொசூல் நகரில் கிளர்ச்சியாளர்கள்



ஈபிள் கோபுரம்

## ஈபிள் கோபுரத்தை தகர்க்க அல் கெய்தா திட்டமாம்

பாரிஸ், ஜூலை 11

பிரான்ஸின் பிரசித்தி பெற்ற ஈபிள் கோபுரத்தை அல் கெய்தா தீவிரவாதிகள் அழிக்க திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிரான்ஸ் தலைநகர் பரிசில் உள்ள உலக அதிசயங்களில் ஒன்று எனப் பெருமை வாய்ந்த ஈபிள் கோபுரத்தைத் தகர்க்கவுள்ளதாக அல்கெ ய்தா தெரிவித்துள்ளது.

இது குறித்து பிரான்ஸில் பதுங்கியுள்ள அல்கெ ய்தா அமைப்பினை சேர்ந்த அலி (வயது-29) என்ற அல்ஜீரிய தீவிரவாதி கூறியதாவது:-

இதற்கான திட்டங்களை தீட்டி வருகிறேன். இரவு அரங்குகள், அருங்காட்சியகம் மற்றும் கலாசார நிகழ்வுகள் நடைபெறும் இடங்கள் கிறிஸ்தவர்களை அதிகளவில் கவருவதால், அவர்கள் அங்கு குவிந்த வண்ணம் இருப்பர். அந்தச் சமயத்தில் தாக்குதல் நடத்தப்படும்-என்றார்.

இதற்கிடையே இந்த அல்ஜீரியத் தீவிரவாதி மூளைச் சலவை செய்யப்பட்டுள்ளதாகவும், கடந்த ஆண்டு ஜூன் மாதம் கைது செய்யப்பட்டுப் பின்னர் தப்பியதாகவும் கூறப்படுகிறது. (த)



ஈராக்கில் ஏற்பட்டுள்ள மோதல் காரணமாக இடம்பெயர்ந்து நிர்க்கதியாகியுள்ள குடும்பமொன்று வீதியோரத்தில் தஞ்சமடைந்துள்ள காட்சி இது. (த)

## இப்படியும் ஒரு தாய்



நியூயோர்க், ஜூலை 11

தனது 11மாத மகனைப் படுகொலை செய்து அவனது சடலத்தைப் புகைப்படமெடுத்து பேஸ்புக் இணையத்தளத்தில் வெளியிட்ட இளம் தாயொருவர் கைது செய்யப்பட்ட சம்பவம் அமெரிக்காவில் இடம்பெற்றுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்து சர்வதேச ஊடகங்கள் நேற்று வியாழக்கிழமை செய்திகளை வெளியிட்டுள்ளன. நியூயோர்க் நகரில் குயின்ஸ் எனும் இடத்தைச் சேர்ந்த நிகொலி கெல்லி (வயது-22) என்ற பெண்ணே இவ்வாறு கியம் பீலிக்ஸ் என்ற தனது பாலகனான மகனைப் படுகொலை செய்துள்ளார்.

அதன் பின் அந்தச் சடலத்தைப் புகைப்படமெடுத்து பேஸ்புக் இணையத்தளத்தில் வெளியிட்ட கெல்லி, தனக்கு இனிமேலும் தனது மகன் தேவையில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

"எனது குழந்தையை இழந்துள்ள நிலையில் அவனை மீள என்னால் உயிர்ப்பிக்க ஏதாவது வழியிருக்குமானால் அவனை உயிர்ப்பிப்பதே எனது விருப்பமாகும். அவன் இறந்து விட்டான் என்பதை அறிகையில் மிகக் கஷ்டமாக உள்ளது. ஒரு தாய் என்ற வகையில் நான் அவனைப் பாதுகாக்க நினைத்தேன். அவனது ஆன்மா என்னையே சுற்றி வரும் என்பதை அறிவேன்" என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். கெலியிடம் இருந்து பிரிந்து வாழும் அவரது கணவரே தனது மகன் இறந்து இருப்பதைக் கண்டு பொலிஸாருக்கு அது தொடர்பில் அறிவித்துள்ளார். (த)

## ஜப்பானின் ஒகினாவாத் தீவை தாக்கியது நியோகுரி சூறாவளி

ஜப்பானின் ஒகினாவா தீவை கடுமையாகத் தாக்கி 2 பேரை பலி வாங்கிய நியோகுரி சூறாவளி, கடந்த புதன்கிழமை நிலப்பகுதியை அடைந்தது.

இந்தச் சூறாவளி ஒகினாவா தீவைச் செவ்வாய்க்கிழமை தாக்கியது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தாழ்வான பகுதிகளில் வசித்த சுமார் 5 லட்சம் பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டனர். கனமழையுடன் காற்று வீசியதால் சில இடங்களில் மரங்கள் வேருடன் சாய்ந்தன. வீடுகள் இடிந்தன. ஒரு உணவகமும் இடிந்தது. தலைநகர் நஹாவில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சூறாவளி தீவைக் கடந்து ஜப்பானின் நிலப்பகுதியை அடைந்துவிட்ட போதிலும், தொடர்ந்து மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது. கனமழை காரணமாக, 62 வயதுடைய ஒருவர் தனது படகு மோதியதில் உயிரிழந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர். (த)

## இந்தோனேசிய அதிபர் தேர்தல்; ஜோகோ விடோடோ வெற்றி ?

ஜகார்த்தா, ஜூலை 11

இந்தோனேசிய அதிபர் தேர்தலில் ஜகார்த்தா ஆளுநர் ஜோகோ விடோடோ வெற்றி பெறுவார் எனக் கருத்துக் கணிப்பு அமைப்புகள் தெரிவித்துள்ளன.

ஜோகோவை எதிர்த்து முன்னாள் ராணுவ ஜெனரல் பிரபோவோ சுபியான்டோ போட்டியிட்டார்.

யார் யாருக்கு எவ்வளவு வாக்குக் கிடைத்திருக்கும் என்கிற அதிகாரபூர்வ மற்ற கணிப்பை தேர்தல் ஆய்வு அமைப்புகள் வெளியிட்டுள்ளன. அதன்படி ஜோகோ 53 சதவீத வாக்குகள் பெற்று முதலிடத்தில் உள்ளார்.

பிரபோவோ 47 சதவீத வாக்குகள் பெற்றிருக்கிறார். இந்தக் கணிப்புப் பற்றி பிரபோவோ கருத்து ஏதும் தெரிவிக்கவில்லை.

விடோடோ வெற்றி பெற்றால் தலைமைப்பதவியில் அமர்ந்து ஜனநாயகத்தை வலுப்படுத்தி புதிய மாற்றம் கொண்டுவருவார் என எதிர்பார்க்கப்படுகிறது. சாதாரண குடும்பப் பின்னணி கொண்ட விடோடோ, மர வேலைப்பாட்டுப் பொருள்கள் ஏற்றுமதியாளராக இருந்தார். முன்னாள் சர்வாதிகாரி சுகார்த்தோவின் மருமகனான பிரபோவோ ஆட்சிக்கு வந்தால் மீண்டும் சர்வாதிகாரம் தலைதூக்கும் என விமர்சகர்கள் கருதுகின்றனர். (த)

## காஸா மீது தொடர் தாக்குதல்

### இஸ்ரேல் பிரதமர் அறிவிப்பு

காஸாப் பகுதியிலுள்ள ஹமாஸ் இயக்கத்தின் அடையாளம் காணப்பட்ட இலக்குகள் மீது மேலதிக தாக்குதல்கள் நடத்தப்படும் என இஸ்ரேல் பிரதமர் பெஞ்ஜமின் நெத்தன்யாகு தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் பாதுகாப்பு சிரேஷ்ட அதிகாரிகளுடன் பேச்சு நடத்திய பின்னர் பெஞ்ஜமின் நெத்தன்யாகு இதனைத் குறிப்பிட்டுள்ளார். தமது நாட்டின் மீது நடத்தப்பட்ட ரொக்கெட் தாக்குதல்களுக்குப் பலஸ்தீன ஆயுததாரிகள் பாரிய விலை கொடுக்கவேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஹமாஸ் இயக்கம் நாட்டின் பல்வேறு நகரங்களை இலக்கு வைத்து 72 ரொக்கெட் தாக்குதல்களை நடத்தியுள்ளதாக இஸ்ரேல் இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

காஸா மீது இரவு முழுவதும் நடத்தப்பட்ட விமானத் தாக்குதல்களை அடுத்து ஹமாஸ் இயக்கம் இந்த ரொக்கெட் தாக்குதல்களை நடத்தியுள்ளது.

இந்தத் தாக்குதல்களில் சுமார் 40 பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டதாகவும் அரைவாசிக்கும் அதிகமானவர்கள் பொது மக்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# பொருளாதாரத்துக்கே முன்னுரிமை

## இந்திய பட்ஜெட்டை நேற்றுத் தாக்கல் செய்தார் அருண் ஜெட்லி

புதுடில்லி, ஜூலை 11

இந்திய பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான புதிய அரசின் முதல் நிதிநிலை அறிக்கையை, மத்திய நிதியமைச்சர் அருண் ஜெட்லி நேற்று வியாழக்கிழமை மக்களவையில் தாக்கல் செய்தார்.

வரிவிலக்குக்காக வரையறுக்கப்பட்ட விளிம்பினை உயர்த்தி, மக்களின் வரி சுமை குறைக்கப்படுவதாக இந்த பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. பல புதிய திட்டப்பணிகளும் அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிவிப்பின் படி தனிநபர் வருமான வரி விலக்குக்கான உச்ச வரம்பு ரூபா 2 லட்சத்தில் இருந்து ரூபா 2.5 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. மூத்த குடிமக்களுக்கு இந்த உச்ச வரம்பு ரூபா 2.5 லட்சத்தில் இருந்து ரூபா 3 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.



### இனி புகைவிட கூடுதல் பணம்

புகையிலைப் பொருள்களுக்கான மற்றும் சில குறிப்பிட்ட பானங்களுக்கான வரி விகிதம் அதிகப்படுத்தப்பட்டுள்ளது. அதில் புகையிலை பொருள்களுக்கு மட்டும் 22 சதவீதம் அதிகரிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் நரேந்திர மோடியின் கனவுத் திட்டமான, குஜராத் மாநிலத்தில் சர்தார் வல்லபாய் படேலின் சிலையை அமைக்க 200 கோடி ரூபா நிதி ஒதுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

16 ஆவது மக்களவையின் முதல் பட்ஜெட் கூட்டத்தொடரில், 2014-15 ஆம் ஆண்டுக்கான இந்த நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்த அருண் ஜெட்லி அவரது உரையின் ஆரம்பத்தில், இந்திய மக்களின் எதிர்பார்ப்பு அதிகமாக உள்ளதை அரசு உணர்ந்துள்ளதாக தெரிவித்தார். இருந்தபோதும் கவர்ச்சித் திட்டங்கள், அநாவசிய செலவினங்களை அரசு தவிர்க்க வேண்டிய கட்டாயத்தில் இருப்பதாக தெரிவித்த அவர், நாட்டின் வளர்ச்சியை அடுத்த 2 ஆண்டுகளில் 7 முதல் 8 சதவீதமாக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருப்பதாக கூறினார்.

### பொருளாதார வளர்ச்சிக்கு கூடுதல் முக்கியத்துவம்

கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 5 சதவீதத்திற்கும் குறைவாக இருந்துள்ளதால், தற்போது நிலவும் சவால்களை சமாளிக்க அரசுக்குத் தனியாக செலவு நிர்வாக ஆணையம் அமைக்கப்படும் என்று தெரிவித்தார். இதன் மூலம் அரசின் செலவினங்களைக் கட்டுப்படுத்தி, தேவையில்லாத செலவினங்களைக் கட்டுப்படுத்த முடியும் என்று நம்பிக்கை வெளியிட்டார் மேலும் மானிய செலவினங்களை முறைப்படுத்தவும் இந்த ஆணையம் பரிந்துரைகளை வழங்கும் என்றும் குறிப்பிட்டார்.

கல்வி, மருத்துவம், விவசாயம், சுகாதாரம், பெண்களின் பாதுகாப்பு மற்றும் அவர்களுக்கு அதிகாரமளித்தல் மற்றும் பாதுகாப்புத்துறை உள்ளிட்ட நாட்டின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கும் பல துறைகளில் அதிக அளவில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். வறுமைஒழிப்புத் திட்டங்களுக்கு கூடுதல் கவனம் செலுத்தப்படும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

நாட்டின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கும் 100 சிறப்பு நவீன நகரங்களை நாடு முழுவதும் அமைக்கவும், 7060 கோடி ரூபா நிதி ஒதுக்கப்படுவதாகவும் அறிவித்தார். அதே சமயம், நாட்டில் உள்ள அனைத்து கிராமங்கள் உள்ளிட்ட நகரங்களிலும் தடையில்லாத மின்சாரம் வழங்கும் திட்டம் வரும் 2019 ஆம் ஆண்டுக்குள் நிறைவேற்றப்படும் என்றும் உறுதியளித்தார்.

### கல்வியில் சிறப்பு கவனம்

புதுடில்லியில் உள்ளது போன்ற அனைத்து மருத்துவ வசதிகளும் கொண்ட 'எயிம்ஸ்' எனப்படும் அனைத்திந்திய மருத்துவ அறிவியல் கழகம் சென்னையிலும் அமைக்கப்படும் என்று அறிவித்தார். தொடர்ந்து நாட்டில் உள்ள எல்லா மாநிலங்களிலும் படிப்படியாக அவற்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உறுதியளித்தார். அதைப் போலவே நாட்டில் புதிதாக 5 இந்திய தொழில்நுட்பக் கழகங்கள் மற்றும் 5 இந்திய மேலாண்மை கழகங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். கல்வித்துறையில் நாடு பின்தங்கியிருக்கும் நிலையை மாற்றியமைக்க தேவையான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும், என்றும் கூறினார்.

இந்தியாவில் நதிகளை இணைக்கும் திட்டம் குறித்து ஆராய்வதற்கு ரூபா 100 கோடியும், கங்கை நதியை சுத்தப்படுத்தி சீரமைக்கும் திட்டப் பணிக்காக 2037 கோடி ரூபாவும் ஒதுக் கப்படுவதாக அறிவித்தார்.

பாதுகாப்பு நடவடிக்கையை அனைத்து மாநிலங்களிலும் ஏற்படுத்த மாநில காவல்துறைக்காக ஒதுக்கப்படும் நிதி கிட்டத்தட்ட இருமடங்காக உயர்த்தப்படும் என்றும் தெரிவித்தார்.

நாட்டின் தேசிய சாலை மேம்படுத்தல் பணிக்காக ரூபா 37,000 கோடி ஒதுக்கப்படுவதாகவும், மேலும் நாட்டில் புதியதாக 16 துறைமுகங்கள் பல்வேறு பகுதிகளில் ஏற்படுத்தப்படும் என்றும் குறிப்பிட்டார். (கு)

# மோடியை வரவேற்க காத்திருக்கும் அமெ.

புதுடில்லி, ஜூலை 11

அமெரிக்கா செல்லவிருக்கும் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு சிறப்பு வரவேற்பு அளிக்க அமெரிக்காவில் உள்ள இந்திய வம்சாவளியினர் திட்டமிட்டுள்ளனர்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடக்கும் வருடாந்த பொதுச் சபைக் கூட்டத்தில் மோடி கலந்து கொள்வதுடன், அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவையும் வெள்ளை மாளிகையில் சந்தித்துப் பேசவுள்ளார்.

இந்நிலையில் மோடியின் வருகையைச் சிறப்பாக்க நியூயோர்க்கில் உள்ள யான்கீ அரங்கம் அல்லது நியூ ஜெர்சியில் உள்ள ஜெயன்ட்ஸ் அரங்கத்தில் வரவேற்பு விழாவை நிகழ்த்த அங்குள்ள இந்திய வம்சாவளியினர் முடிவு செய்துள்ளனர்.

மேலும் சுமார் 1 லட்சம் பேர் கலந்து கொண்டு மாபெரும் பேரணி ஒன்றையும் நடத்தவுள்ளதாகக் கூறப்படுகிறது. (கு)

# பா.ஜ.க ராஜாவுக்கு கொலை மிரட்டல்

புதுடில்லி, ஜூலை 11

காரைக்குடியில் உள்ள பா.ஜ.க துணைத் தலைவர் எச்.ராஜாவுக்குக் கொலை மிரட்டல் விடுத்து கடந்த செவ்வாய்க்கிழமை மர்ம நபர்கள் கடிதம் அனுப்பியுள்ளனர்.

காரைக்குடி சுப்பிரமணியபுரம் 9 ஆவது வீதியில் எச்.ராஜா வீடு உள்ளது. இவர் பா.ஜ.க மாநில துணைத் தலைவராக உள்ளார். மக்களவைத் தேர்தலில் சிவகங்கைத் தொகுதியில் பா.ஜ.க வேட்பாளராகப் போட்டியிட்டு மூன்றாம் இடம் பிடித்தார்.



எச்.ராஜா

இவருக்கு, ஏற்கனவே கடிதம் மூலம் கொலை மிரட்டல் விடுத்த சம்பவமும், இவரது வீடு மீது பெற்றோல் குண்டு வீசிய சம்பவமும் நடந்துள்ளதால், வீட்டுக்குப் பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. இவருக்கென தனியாக பொலிஸ் ஒருவரும் பாதுகாப்புக்கு உடன் செல்கிறார்.

இந்நிலையில், கடந்த செவ்வாய்க்கிழமை இவரது வீட்டுக்கு அஞ்சலில் வந்துள்ளது. அனுப்புநர் முகவரியின்றி வந்த அந்தக் கடிதத்தில், கொலை மிரட்டல் தொடர்பான வாசகங்கள் இருந்தன.

இது பற்றி எச்.ராஜா கூறும்போது, எனக்கும் என் வீட்டுக்கும் பாதுகாப்பு உள்ளது. அஞ்சலில் வந்த மிரட்டல் கடிதத்தின் நகலை கொடுத்துள்ளேன் என்றார்.

இதுபற்றி சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அஷ்வின் முகுந்த் கோட்னீஸ் கூறும்போது, கொலை மிரட்டல் கடிதம் தபாலில் வந்ததால், யார் அனுப்பினார்கள் எனக் கண்டுபிடிப்பது சிரமம். அவரது வீட்டுக்கு ஏற்கனவே பொலிஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. அக்கடிதத்தில் குழப்பமான வாசகங்கள் உள்ளன. இருப்பினும் தீவிரமாகக் கண்காணித்து வருகிறோம் என்றார். (கு)



பட்ஜெட் விவாதத்தில் பங்கேற்பதற்காக நாடாளுமன்றுக்கு வருகை தரும் காங்கிரஸ் உப தலைவர் ராகுல்காந்தி. (கு)

# ராஜீவ் கொலை வழக்கு ஒத்திவைப்பு

புதுடில்லி

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கு விசாரணையை உச்ச நீதிமன்றம் எதிர்வரும் 22ஆம்திகதி வரை ஒத்திவைத்துள்ளது.

இந்த வழக்கு விசாரணைகளின் போது ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளை விடுவிக்கும் உரிமை மாநில அரசுகளுக்கு உள்ளதா என்பது குறித்து இந்தியாவிலுள்ள அனைத்து மாநில அரசுகளும் எதிர்வரும் 18 ஆம் திகதிக்குள் பதிலளிக்க வேண்டுமென உச்ச நீதிமன்றம் கோரியுள்ளது.

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை விதிக்கப்பட்டவர்களை விடுவிக்க மாநில அரசுக்கு உரிமை உள்ளதா என்பது தொடர்பில் நடைபெற்று வரும் வழக்கின் விசாரணை நேற்று முன்தினம் அரசியல் சாசன அமர்வு முன்னிலையில் ஆரம்பமாகியது.

இதன்போது மத்திய புலனாய்வு அமைப்பு தொடர்ந்த வழக்கொன்றில் தண்டனை விதிக்கப்பட்டவரை மன்னித்து விடுதலை செய்ய மாநில அரசுகளுக்கு அதிகாரம் உள்ளதா எனவும் ஆயுள் தண்டனைக் கைதியை விடுவிக்கும் அதிகாரம் மாநில அரசுகளுக்கு உள்ளதா என்பது உள்ளிட்ட விவகாரங்களிலும் இந்தியாவிலுள்ள அனைத்து மாநில அரசுகளும் ஜூலை மாதம் 18 ஆம் திகதிக்குள் பதிலளிக்க வேண்டுமென இந்த அமர்வு கோரியுள்ளது.

இந்திய உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி ஆர்.எம். லோதா தலைமையிலான அமர்வு இந்த வழக்கின் விசாரணையை எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளதாக இந்தியத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

மேலும் இந்த வழக்கில் தீர்ப்புக்கள் வெளியாகும் வரை எந்தவொரு மாநில அரசும் இது போன்ற விடுதலை நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடாது என்றும் உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது. (கு)

# இரண்டு மணி நேரத்தில் ஏழுமலையான் தரிசனம்

புதுடில்லி, ஜூலை 11

திருப்பதி ஏழுமலையானை பக்தர்கள் இரண்டு மணி நேரத்தில் தரிசனம் செய்ய விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என ஆந்திர மாநில இந்து சமய அறநிலைத் துறை அமைச்சர் மாணிக்யாலா கடந்த புதன்கிழமை கடப்பாவில் தெரிவித்தார்.

ஏழுமலையானை சாதாரண நாட்களில் தரிசனம் செய்ய சுமார் 2 முதல் 5 மணி நேரம் வரை ஆகிறது. வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாள்களில் 10-15 மணி நேரம் வரை பக்தர்கள் காத்திருக்கின்றனர்.

இந்நிலையில், அமைச்சர் மாணிக்யாலா, கடப்பா மாவட்டத்தில் சுற்றுபயணம் மேற்கொண்டார். தெவுன்னி கடப்பா கோயிலில் சுவாமி தரிசனம் செய்த பின்னர் செய்தியாளர்களிடம் கூறியது:

திருப்பதி ஏழுமலையான் கோயிலில் பக்தர்கள் பலமணி நேரம் காத்திருந்து சுவாமியை தரிசித்து வருகின்றனர். இனி விரைவாக தரிசனம் செய்யும் வகையில் நடவடிக்கை எடுக்க தேவஸ்தான அதிகாரிகளுடன் பேச்சு நடத்தப்பட்டது. (கு)

## தேர்தல் குறித்து இன்று வெள்ளிக்கிழமை கலந்துரையாடல்

கொழும்பு.ஜூன் 11
அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள் மற்றும் தேர்தல் ஆணையாளர் நாயகத்துக்கும் இடையில் விசேட கலந்துரையாடல் ஒன்று இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் தேர்தல்கள் செயலகத்தில் இடம்பெறவுள்ளது.
தேர்தல் பெயர் இடாப்பு திருத்தம் குறித்த இந்த கலந்துரையாடலில் பேசப்படவுள்ளது.
இதேவேளை எதிர்வரும் தேர்தல்கள் குறித்தும் பேசப்படவுள்ளது. (ஒ)




ஆஸ்திரேலியாவில் தஞ்சம் கோரும் இலங்கை அகதிகளைத் திருப்பி அவர்களின் நாட்டுக்கு அனுப்பும் நடவடிக்கைக்கு எதிராக லண்டனில் அமைந்துள்ள ஆஸ்திரேலியத் தூதரகத்தின் முன்பாக அகதிகளுக்கான போராட்ட அமைப்புக் குழுவின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்பட்டது. (ஒ)

# அகதிகளின் தற்கொலை முயற்சி மிரட்டலுக்குப் பணியமாட்டோம்!

### ஆஸி. பிரதமர் இறுமாப்பு

கொழும்பு.ஜூலை 11
ஆஸ்திரேலியாவுக்குச் சொந்தமான கிறிஸ்துமஸ் தீவுகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தஞ்சக் கோரிக்கையாளர் களில் சிலர் தற்கொலைக்கு முயன்றனர் என செய்திகள் வந்துள்ள நிலையில், இப்படியெல்லாம் மிரட்டி ஆஸ்திரேலிய தஞ்சக் கோரிக்கை கொள்கைகளை மாற்றிவிட முடியாது என ஆஸ்திரேலியப் பிரதமர் டோனி அபாட் கூறியுள்ளார் என்று பி.பி.ஸி. தெரிவித்துள்ளது.




கிறிஸ்துமஸ் தீவில் தாய்மார்கள் சுமார் ஒரு டசின் பேர், தற்கொலைக்கு முயன்றனர் என ஆஸ்திரேலிய ஊடகங்கள் சில செய்திகள் வெளியிட்டிருந்தன.
தஞ்சக் கோரிக்கையாளர்களுக்கு உணவு, உடுப்பு, உறைவிடம் எல்லாம் நாங்கள் ஒழுங்காக வழங்குகிறோம். எல்லாவற்றுக்கும் மேலாக அவர்கள் பாதுகாப்புடன் இருக்கிறார்கள்.
நவுருவில் வைக்கப்படுபவர்கள் எவ்விதமான தண்டனைக்கோ கஷ்டங்களுக்கோ ஆளாகப்போவதில்லை என ஆஸ்திரேலியப் பிரதமர் டோனி அபாட் தெரிவித்துள்ளார்.
கிறிஸ்துமஸ் தீவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தஞ்சக் கோரிக்கையாளர்களில் தாய்மார்கள் சிலர், தாம் இறந்தால் தமது பிள்ளைக்காவது அகதித் தஞ்சம் கிடைக்கலாம் என்ற எண்ணத்தில் தற்கொலைக்கு முயன்றதாக ஆஸ்திரேலியா ஊடகங்கள் செய்தி வெளியிட்டதை அடுத்து பிரதமரின் இந்தப் பதில் வந்துள்ளது.
கிறிஸ்துமஸ் தீவிலிருந்து நவுருவுக்கோ, மனுஸ் தீவுகளுக்கோ கொண்டுசெல்லப்படலாம் என்று தெரியவந்ததை அடுத்து, மிகவும் கலங்கிப்போன தஞ்சக் கோரிக்கையாளர்கள், இறந்து விடுவதே நல்லது என நினைத்து தற்கொலைக்கு முயன்ற தாக அவர்களது சட்டத்தரணிகளை மேற்கோள்காட்டி தெரிவிக்கப்பட்டிருந்தது.
ஆஸ்திரேலியா நோக்கி படகில் சென்றபோது அண்மையில் இடை மறிக்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையர்கள் 153 பேர் இலங்கைக்கே திருப்பியனுப்பப்படுவார்களா என்பதை பிரதமர் அபாட் தெளிவுபடுத்த மறுத்திருந்தார்.
அவர்களைத் திருப்பியனுப்ப ஆஸ்திரேலிய உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்திருந்த நிலையில், அவர்களைத் திருப்பியனுப்புவதாக இருந்தால், 72 மணி நேரத்துக்கு முன்கூட்டியே அது பற்றி அவர்களிடம் தெரிவிக்கப்படும் என ஆஸ்திரேலிய அரசு உத்தரவாதம் அளித்திருந்தது. (ஒ)

## பல்கலைப் பிரச்சினைக்கு 50 நாள் வேலைத்திட்டம்

கொழும்பு.ஜூலை 11
பல்கலைக்கழகங்கள், பல்கலைக்கழக நிறுவனங்கள் ஆகியவற்றுக்குச் சென்று பிரச்சினைகளை இனம் கண்டு தீர்வு வழங்கும் திட்டம் ஒன்றை ஆரம்பிக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு நடவடிக்கை எடுத்துள்ளது.
50 நாள் துரித திட்டமாக இதனை மேற்கொள்வதாக ஆணைக் குழுவின் தலைவி பேராசிரியர் ஷனீகா ஹிரிம்புரேகம தெரிவித்தார்.
இப்பிரச்சினைகளுக்கு குறுகிய கால நீண்ட காலத் தீர்வுகள் வழங்கப்படும்.
ஆணைக் குழுவின் உப தலைவர், செயலாளர், மேலதிகச் செயலாளர்கள், கணக்காளர் உட்பட ஒரு குழுவினர் இப்பிரச்சினைகளைக் கண்டறிந்து தீர்வுகளைக் காண்பதற்காக அனுப்பப்படுவர் என்றும் அவர் தெரிவித்தார்.

**பிரச்சினைகளை இனம் கண்டு தீர்வு வழங்கும் திட்டம் ஒன்றை ஆரம்பிக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு நடவடிக்கை எடுத்துள்ளது.**

பிரச்சினைகள் இருப்பின் இந்த வேலைத் திட்டத்தின் கீழ் பல்கலைக்கழக அதிகாரிகளுக்கு கருத்துக்கள், அபிப்பிராயங்களை சமர்ப்பிக்க வாய்ப்பு கிடைக்குமென்றும் பேராசிரியர் ஷனீகா ஹிரிம்புரேகம கூறினார். (ஒ)

## அடைவு கடையில் கொள்ளையிட்ட 9 கிலோ தங்க நகைகள் மீட்பு

### மிரிஹான பொலிஸார் அதிரடி

கொழும்பு.ஜூலை 11
பாணத்துறை,மொரட்டுமுல்ல பள்ளியகுரு பிரதேசத்தில் நகை அடைவு பிடிக்கும் நிலையமொன்றில் கொள்ளையிடப்பட்ட 5 கோடி ரூபா பெறுமதியான நகைகளை மிரிஹான விசேட பொலிஸ் நடவடிக்கை பிரிவு நேற்றுமுன்தினம் கைப்பற்றியுள்ளது.
நகைக்கொள்ளையுடன் தொடர்புடைய இருவர் மொரட்டுமுல்ல பகுதியில் கைது செய்யப்பட்டனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். கடந்த மே மாதம் 25ம் திகதி நகை அடைவு பிடிக்கும் நிலையத்தில் இருந்த 11 கிலோ கிராம் எடையுள்ள நகைகள் கொள்ளையிடப்பட்டிருந்தன.
இந்த சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொண்ட மிரிஹான விசேட பொலிஸ் நடவடிக்கைப் பிரிவு இரு சந்தேகநபர்களை கைது செய்தது. அவர்களை விசாரணை செய்ததில் கொள்ளையிடப்பட்ட 9 கிலோ கிராம் நகைகள் திக்வெல்ல மற்றும் வெலிகம பகுதிகளில் அடைவு வைக்கப்பட்ட நிலையிலும் உருக்கப்பட்ட நிலையிலும் மீட்கப்பட்டன.
கொள்ளையிடப்பட்ட அதி கூடுதலான நகைகள் மீட்கப்பட்டமை இதுவே முதற்தடவை எனவும் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபர்கள் 43 மற்றும் 27 வயதுடைய மொரட்டுமுல்ல பிரதேசவாசிகள் எனத் தெரியவருகிறது. (ஒ)

## நோயாளியின் ஆறரை லட்சம் ரூபாவை சுருட்டியவர் கைது

கொழும்பு.ஜூலை 11
கொழும்பு, நாரஹேன்பிட்டியிலுள்ள பிரபல தனியார் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சைபெற்றுவந்த நோயாளியொருவரின் ஆறரை லட்சம் ரூபா பணத்தைக் களவாடிய நபரொருவர் கொழும்பு குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
கேகாலை, நெலுந்தெனிய பிரதேசத்தைச் சேர்ந்த 63 வயதான இந்த நபர் நோயாளியைக் கவனித்துக்கொள்வதற்காக உறவினர்களால் நியமிக்கப்பட்டிருந்ததாகவும், நோயாளி உறங்கிய சமயத்தில் இந்தப் பணம் அடங்கிய பையுடன் அவர் தலைமறைவாகிவிட்டதாகவும் தெரியவருகிறது.
சுமார் ஒருமாத காலமாக வைத்தியசாலையில் தங்கி சிகிச்சைபெற்றுவந்த தனது கணவர் சுகமடைந்ததை யடுத்து, வைத்தியசாலைக் கட்டணத் தைச் செலுத்துவதற்காக அவரது மனைவி ஆறரை லட்சம் ரூபா பணத்தை ஒரு பையில் போட்டு அவரிடம் கொடுத்துவிட்டுச் சென்றிருக்கிறார். இதை அவதானித்த பராமரிப்பு நபர் கடந்த 5ஆம் திகதி அதிகாலை நோயாளி ஆழ்ந்து உறங்கிக்கொண்டிருந்த சமயம் பணப்பையை அபகரித்துக் கொண்டு வைத்தியசாலையை விட்டு தலைமறைவாகி விட்டார்.
அதனைத் தொடர்ந்து நோயாளி நாரஹேன்பிட்டி பொலிஸாருக்குக் கொடுத்த முறைப்பாட்டின் அடிப்படையில் கொழும்புப் பிராந்திய குற்றத் தடுப்புப் பொலிஸ் பிரிவினர் சந்தேக நபரை கேகாலையில் உள்ள ஹோட்ட லொன்றில் கைது செய்தனர்.



இவர் ஏற்கனவே பதிவுசெய்யப்பட்ட ஒரு குற்றாவாளியெனவும் இதற்கு முன்னரும் பல தடவைகள் இவ்வாறான குற்றச் செயல்களைப் புரிந்தவர் எனவும் விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது. (ஒ)

# ஆள்கடத்தலை முறியடிக்க ஆஸியுடன் ஒத்துழைத்துச் செயற்படுகிறது அரசு

### வெளிவிவகார பிரதி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு.ஜூலை 11
ஆள்கடத்தலை முறியடிப்பதில் இலங்கையும், ஆஸ்திரேலியாவும் நெருங்கிய ஒத்துழைப்புடன் செயற் பட்டுவருகின்றன என்று வெளிவிவகார பிரதியமைச்சர் நியோமல் பெரேரா நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.



ஆஸ்திரேலிய அதிகாரிகளால் ஜூன் மாத இறுதியில் கைது செய்யப்பட்ட 41 சட்டவிரோத குடியேற்ற வாசிகளே கடந்த 7 ஆம் திகதி இலங்கையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.
நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் 23/2 இன் கீழ் விசேட கூற்றொன்றை விடுத்து ஜனநாயக தேசியக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜே.வி.பியின் தலைவருமான அநுரகுமார திஸாநாயக்க எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே பிரதியமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
" இலங்கையர்களை ஏற்றிச் சென்ற படகொன்று கைப்பற்றப்பட்டுள்ளமை தொடர்பில் ஆஸ்திரேலிய அதிகாரிகளினால் இலங்கை அரசுக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது. குறித்தப் படகில் இருந்தவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
இது தொடர்பில் தகவல் வெளியிடுவதற்கு ஆஸ்திரேலியா ஏன் ஆரம்பத்தில் மறுத்தது என்பதற்கான காரணத்தை திரட்டமுடியாது. மூன்றாவது நாடொன்றில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கான காரணத்தை அரசால் திரட்டமுடியாது- என்றார். (ஒ)



# 'பறக்கும் விண்வெளி ஆய்வு கூடம்' முதன்முதலாக உருவாக்கியது நாஸா

அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாஸா உலகின் முதன் முதலாக பறக்கும் விண்வெளி ஆய்வு கூடமொன்றை உருவாக்கிச் சாதனை படைத்துள்ளது. நட்சத்திரங்களைப் பற்றி ஆய்வு செய்வதற்காக, மாறுதலாக வடிவமைக்கப்பட்ட போயிங் 747 ரக ஜெற்லைனர் விமானத்தில் 8 அடி விட்ட பரப்பளவில் 17 தொன் எடை கொண்ட தொலை நோக்கி யொன்றைப் பொருத்தியுள்ளனர் நாசா விஞ்ஞானிகள்.

சோபியா (ஸ்டிரட்டோஸ்பெரிக் அப்சர்வேட்டரி ஃபார் இன்ப்ராரெட் அஸ்ட்ரானமி) என்றழைக்கப்படும் இந்த அகச்சிவப்பு கதிர் தொலைநோக்கியை போயிங் விமானத்தின் பின் பகுதியில் உள்ள ஸ்லைடிங் டோரில் கண்ணாடி மூலம் வானத்தைப் பார்க்கும் வகையில் நிலை நிறுத்தி உள்ளனர். பூமியில் இருந்து 7,624 மைல்களுக்கு அப்பால் அந்தரத்தில் பறக்கும் இந்த ஜெற் விமானம் 12 மணிநேரத்துக்கு மேலாக அசையாமல் நிற்கும் திறனுடையது.

இதுகுறித்து நாஸா கூறுகையில்; சோபியா அனுப்பும் தகவல்களை வேறெந்த வானியல் கருவிகளாலும் நிலத்திலிருந்தோ அல்லது விண்வெளியிலிருந்தோ பெற முடியாது. சோபியா ஒரு மொபை லைப் போன்றது. சூப்பர்நோவா, வால் மீன்கள் போன்ற மாறிக் கொண்டேயிருக்கும் விண்வெளியின் நிகழ்வுகளை அதனால் எளிதாகக் கண்டு பிடிக்க முடியும். இந்தத் தொலைநோக்கி ஜேர்மனி விண்வெளி ஆய்வு மையத்தின் (டி.எல்.ஆர்.) உதவியுடன் உருவாக்கப்பட்டுள்ளது. எனவே, அதில் ஏதாவது பழுது ஏற்பட்டால் தேவைப்படும் பொழுது அதனுடைய நிகழ்ச்சிகளை மறுபடியும் மாற்றி எழுதி பழுதைச் சரிசெய்ய முடியும் என்று தெரிவித்துள்ளது.

# ஹொலிவூட் நடிகையின் நாட்டுப்பற்று

'சூப்பர் மேன்' உள்ளிட்ட பல படங்களில் நடித்தவர் பிரபல ஹொலிவூட் நடிகை எமி அடம்ஸ். 'அமெரிக்கன் ஹஸில்' என்ற படத்துக்காக எமி அடம்ஸ். ஒஸ்கார் விருதுக்காக பரிந்துரைக்கப் பட்டிருந்தார். இவர் எந்தளவுக்கு சிறந்த நடிகையோ அதே அளவுக்கு நாட்டுப்பற்றுள்ள நடிகை என்ற பெயர் பெற்றவர். அவருடைய நாட்டுப்பற்று உணர்வு சமீபத்தில் நடைபெற்ற ஒரு சம்பவத்தால் உலகுக்குத் தெரியவந்தது.

கடந்த வாரம் எமி அடம்ஸ் 'டெட்ராய்ட்' என்ற நகரத்தில் இருந்து 'லொஸ் ஏஞ்சலு'க்கு விமானத்தில் முதல் வகுப்பில் பயணம் செய்து கொண்டிருந்தார். இந்தநிலையில், சாதாரண வகுப்பில் அமெரிக்க இராணுவ வீரர் ஒருவர் பயணம் செய்துகொண்டிருந்ததைப் பார்த்ததும் உடனே தன்னுடைய முதலாவது வகுப்பு ஆசனத்தை அவருக்கு விட்டுக் கொடுத்தார்.

அந்த அமெரிக்க வீரர் எவ்வளவோ மறுத்தும், நாட்டுக்காக உயிரையே தியாகம் செய்யத் துணியும் ஒரு போர் வீரர் முதலாவது வகுப்பில் செல்வதுதான் சரி என்று கூறி வலுக்கட்டாயமாக அவரை தான் உட்கார்ந்திருந்த ஆசனத்தில் உட்கார வைத்துள்ளார். இந்த சம்பவத்தை அதே விமானத்தில் பயணம் செய்து கொண்டிருந்த அமெரிக்க தொலைக்காட்சி ஒன்றில் பணிபுரியும் ஒருவர் டுவிட்டரில் பதிவேற்றியதில், பலரும் எமி அட்ம்ஸின் செய்கையைப் பாராட்டியுள்ளனர்.



சாதாரண வகுப்பில் அமெரிக்க இராணுவ வீரர் ஒருவர் பயணம் செய்துகொண்டிருந்ததைப் பார்த்ததும் உடனே தன்னுடைய முதலாவது வகுப்பு ஆசனத்தை அவருக்கு விட்டுக் கொடுத்தார்.

CMYK

# இஸ்ரேலில் அறிமுகமாகிறது ஆகாயக் கார் போக்குவரத்து



இன்றைய உலகில் சகல நாட்டிலும் வாகன நெரிசல் அதிகரித்து வருகிறது. இதனால் எண்ணெய் வளம் குறைந்துக் கொண்டே போவதுடன் சுவாசப் பிரச்சினை போன்றவை தோன்றுகின்றன. இதைத் தடுக்கச் சுரங்க ரயில், மோனோ ரயில் போன்றவற்றை பல்வேறு நாடுகளும் அறிமுகப்படுத்தி உள்ளன. ஆனால் இஸ்ரேல் நாடு ஆகாயக் கார் என்ற புதிய போக்குவரத்து முறையை விரைவில் அறிமுகப்படுத்த உள்ளது. இந்தக் கார் ஆகாயத்தில் இணைக்கப்பட்டிருக்கும் இரும்புத் தூண்கள் வழியாகப் பயணம் செய்யும். இது காந்த சக்தியுடன் இயங்க கூடியதாகும்.

இதில் தூணைத் தொட்டபடி கார் பாய்ந்து செல்லும். இந்தக் கார் 70 கிலோ மீற்றர் வேகத்தில் செல்லக்கூடியதாகும். டெல் அவிவ் நகரில் உள்ள விமானத் தயாரிப்பு நிறுவனம் அமைந்துள்ள பகுதியில் தற்போது கார் பயணத்துக்கான பாதை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. அடுத்த ஆண்டு இந்தப் பணி முற்றிலும் பூர்த்தியாகி ஆகாயக் கார் இயக்கப்பட உள்ளது.

அமெரிக்காவில் உள்ள நாஸா விண்வெளி மையத்தின் பணியாளர்கள் ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடத்துக்குச் செல்லும் வகையில் அந்தரத்தில் தொங்கும் கேபிள் கார் வசதி செய்யப்பட்டுள்ளது. இதே முறையை மையமாக வைத்து இந்த புதிய ஆகாயக் கார் திட்டத்தை உருவாக்கி உள்ளனர்.

விரைவில் இஸ்ரேலில் உள்ள அனைத்து நகரங்களிலும் இந்த ஆகாயக் கார் திட்டத்தைக் கொண்டுவர உள்ளனர். இது தொடர்பாக கார் நிறுவனம் கூறும்போது, நவீன உலகில் இனி இதுபோன்ற போக்குவரத்துத் தான் உதவுவதாக இருக்கும். நாங்கள் இந்தப் போக்குவரத்து முறையைத் தொடங்கியதற்கு பிறகு பல நாடுகளும் இந்த போக்குவரத்து முறையை உருவாக்கவுள்ளன என்று கூறியுள்ளது.

# நண்பனுக்காக பல ஆயிரம் டொலர்கள் திரட்டிய கனேடிய சிறுவனின் சாதனை

கனடா-பிரிட்டிஷ் கொலம்பியாவைச் சேர்ந்த 7 வயதுச் சிறுவன் தனது நண்பனுக்கு உதவுவதற்காக வாரஇறுதி நாள்களில் லெமனேட் விற்கும் முயற்சியில் ஈடுபட்டான். அவனது நண்பனான சிறுவன் ஒருவனுக்கு பெருமூளை வாத நோய் வந்துள்ளது. அந்த நோயைக் குணப்படுத்துவதற்கு அதிக செலவில் சத்திரசிகிச்சை செய்ய வேண்டும். ஆனால் அதற்கான வசதிகள் கனடாவில் இல்லை.

7 வயதுடைய குயின் காலண்டரும், பிரெய்டன் குரொஸ் டானிசும் பாலர் பாடசாலையில் இருந்தே நண்பர்கள். பிரெய்டன் பெருமூளைவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ளான். இந்நோய் தசை இயக்கம், முன்னேற்றம் போன்றனவற்றைப் பாதிக்கும். வளர வளர தசைகள் இறுக்கமடைந்து சாதாரண செயற்பாடுகளை செய்வதே கடினமாக இருக்கும்.

இதற்கான சத்திரசிகிச்சை நியு ஜேர்சியில் தான் செய்ய முடியும். இதற்கு சுமார் 15,000 டொலர்கள் வரை தேவைப்படும் அத்துடன் போக்குவரத்து ஏனைய பிசியோதெரபி போன்றவற்றுக்கான செலவினங்கள் மேலதிகமானது. பிரெய்டனின் பெற்றோர் மகனுக்கு உதவ கடன் பெறுவதற்கு ஆயத்தம் செய்த வேளையில், குயின் தன்னால் உதவ முடியும் என முன் வந்துள்ளான். நண்பனுக்கு உதவுவதற்காக லெமனேட் விற்று நிதி திரட்ட பெற்றோரின் அனுமதியைப் பெற்று நண்பனுடன் சேர்ந்து லெமனேட் ஸ்டான்ட்டை பிற் மெடோவ் என்ற இடத்தில் கடந்த வார இறுதியில் தொடங்கினான்.

நண்பர்கள் இருவரும் ஏராளமான வாடிக்கையாளர்களின் கவனத்தை ஈர்த்துள்ளனர். பல தராளமனப் பாங்குள்ள குடியிருப்பாளர்கள் 20 டொலர் தாள்களை நன்கொடையாக வழங்கியுள்ளனர். இதே சமயம் குயினின் தாயார் இணையத்தள மூலம் நிதி திரட்டும் முயற்சியை உருவாக்கினார். அந்த முயற்சியில் அதன் இலக்கான 20,000 டொலர்களை மிஞ்சி உதவி நிதி சேர்ந்துள்ளது.



இணையத்தளத்தில் குயின் தனது நண்பனின் நோய் குறித்து விளக்கியதோடு சத்திரசிகிச்சை சம்பந்தமாகவும் அதற்கான திட்டம் ஒகஸ்ட் மாதம் எனவும் தெரியப்படுத்தியுள்ளான். திங்கட்கிழமை காலையில் தளத்தில் 48,000-டொலர்களுக் கும் மேலான தொகை நன்கொடையாக சேர்ந்துள்ளது.

# நீங்கள் ஓர் ஆனந்தத் தொழிற்சாலை!

கடந்த இருபத்துநான்கு மணி நேரத்தில் நீங்கள் எவ்வளவு மணிநேரம். அல்லது எத்தனை நிமிடங்கள். ஆனந்தமாக இருந்தீர்கள்? இதைச் சற்று ஆழமாக யோசித்துப் பாருங்கள். ஒவ்வொரு இரவிலும் நித்திரைக்குச் செல்லுமுன் ஐந்து நிமிடங்களையாவது இதற்காக ஒதுக்குங்கள். 'இன்று எவ்வளவு நேரம் நான் ஆனந்தமாக உணர்ந்தேன்... நேற்றையை விட இன்று என் ஆனந்தம் குறைந்துவிட்டதா? அல்லது அதிகமாகி இருக்கிறதா? என்று அசை போட்டுப் பாருங்கள்.

இது அவசியம் நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டிய விடயம்!.. வாழ்க்கையில் நீங்கள் பல விடயங்களைச் செய்ய நேர்ந்தாலும் அந்தச் செயல்களின் ஒரே நோக்கம் 'ஆனந்தமாக இருக்க வேண்டும்' என்பது தான். இல்லையா? ஆக, நீங்கள் ஓர் ஆனந்தத் தொழிற்சாலை! ஆனந்தம் என்ற அற்புதமான விடயத்தை உருவாக்குவதே உங்கள் வேலையாக எப்போதும் இருக்கிறது.

ஞானக்கதிர்

11 JUL 2014



# விரைவில் நவீன மியூசிக் பிளேயர்

கீக் வேவ் (Geek Wave) என்ற உயர் தரத்திலான ஒலியை பிறப்பிக்கக் கூடிய மியூசிக் பிளேயர் ஒன்று விரைவில் அறிமுகம் செய்யப்படவுள்ளது.
இதனை அறிமுகப்படுத்துவதற்கு சுமார் 800.000 டொலர்கள் நிதி எதிர்பார்க்கப்பட்டு Indiegogo தளத்தில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது.
இந்த விளம்பரம் முடிவதற்கு இன்னும் 10 நாள்களே உள்ள நிலையில் இதுவரை 780.000 டொலர்கள் நிதி கிடைக்கப்பெற்றுள்ளது.
இந்தசாதனத்தில் ட்ரக்&டொப் முறையில் இசைகளைக் கையாளக்கூடிய வசதி காணப்படுவதால் பயன்படுத்துவதற்கு இலகுவாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 'ஐ' கடிகாரம் தொடர்பில் புதிய தகவல்





அப்பிள் நிறுவனம் ஐ கடிகாரம் என்ற ஸ்மார்ட் கடிகாரத்தை உற்பத்தி செய்து வருவது யாவரும் அறிந்ததே.
எனினும் அதன் வடிவமைப்பு எவ்வாறு இருக்கும் என்று இதுவரையில் அப்பிள் நிறுவனம் தகவல் வெளியிடவில்லை.
ஆனால் பல்வேறு தொழில்நுட்ப நிபுணர்களின் ஊகங்களின் அடிப்படையில் பல வடிவங்களை உள்ளடக்கிய படங்கள் வெளி யிடப்பட்டன.
அதன் வரிசையில் தற்போது நம்பகத்தன்மை வாய்ந்த புதிய படம், காணொலி வெளியிடப்பட்டுள்ளது.
இதன்படி கடிகாரத்தின் திரை 2.5 அங்குல அளவுடையதாக காணப்படுகின்றது.
இதனுடன் 8 ஜிபி சேமிப்பு நினைவகமும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

**பல்வேறு தொழில்நுட்ப நிபுணர்களின் ஊகங்களின் அடிப்படையில் பல வடிவங்களை உள்ளடக்கிய படங்கள் வெளியிடப்பட்டன.**

# ஐ பாட் சாதனங்களிலும் வலம் வரும் பேஸ்புக் மெசஞ்சர்

அப்பிளின் ஐ போனில் பேஸ்புக் மெசெஞ்ச அப்பிளிக்கேஷனை பயன்படுத்தும் வசதி தற்போது காணப்படுகின்றது.
இந்த நிலையில் இனிவருங் காலங்களில் ஐ பாட் - சாதனங்களிலும் இந்த அப்பிளிக்கேஷனை பயன்படுத்துவதற்காக புதிய பதிப்பு ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.
இதில் பேஸ்புக் தளத்தை திறக்காமலேயே செய்திகளை பெற்றுக்கொள்ள முடிதல், ஸ்டிக்கர்களை அடிப்படையாகக் கொண்ட சம்பாசனைகள் , தனிப்பட்ட முறையில் புகைப் படங்களை அனுப்புதல், குழுக் கழுக்கடையிலான சம்பாசனை உட்படப் பல வசதிகள் உள்டக்கப்பட்டுள்ளன.
இந்த அப்பிளிக்கேஷன் ஐ. ஓ.எஸ். 7.0 இயங்குதளப் பதிப்பிலும் அதன் பின்னர் வெளியிடப்பட்ட பதிப்புக்களைக் கொண்ட ஐ போன், ஐ பாட் மற்றும் ஐ பொட் - சாதனங்களில் பயன்படுத்த முடியும்.

**இனிவருங் காலங்களில் ஐ பாட்-சாதனங்களிலும் இந்த அப்பிளிக்கேஷனை பயன்படுத்துவதற்காக புதிய பதிப்பு ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.**




# கூகுளின் புதிய முயற்சி



**இது மிகவும் விலை குறைவாக இருப்பதுடன், இலகுவாகக் கையாளக் கூடியதாகவும் காணப் படுகின்றது.**

இணைய உலகில் கலக்கிவரும் கூகுள் நிறுவனம் அதற்கு அப்பால் பல்வேறு இலத்திரனியல் சாதன உற்பத்தியிலும் காலடிபதித்து வருகின்றது.
இவற்றில் ஒரு அங்கமாக தற்போது வீடியோ ஹேம் மற்றும் வீடியோக்களை முப்பரிமாணத் தோற்றத்தில் காட்சிப்படுத்தக் கூடிய சாதனம் ஒன்றினை உரு வாக்கியுள்ளது.
இது மிகவும் விலை குறைவாக இருப்பதுடன், இலகுவாகக் கையாளக் கூடியதாகவும் காணப்படுகின்றது.

# உடல் ஆரோக்கியத்தை பாதுகாக்கும் சாதனம்: தற்போது தள்ளுபடி விலையில்

சம்சுங் நிறுவனம் சமீபத்தில் சம்சுங் கியர் பிற் (Samsung Gear Fit) என்னும் உடல் ஆரோக்கியத்தைப் பேணி பாதுகாக்கும் சாதனம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.
இந்தச் சாதனத்தை தற்போது அமேஸன் தளத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.
இந்தத் தளத்திலிருந்து கொள்வனவு செய்வதன் மூலம் இந்தச் சாதனத்தின் உண்மையான விலையிலிருந்து 50 சதவீத விலைத்தள்ளுபடியைப் பெற்றுக்கொள்ளமுடியும். அதாவது 99 டொலர் களுக்குக் கொள்வனவு செய்ய முடியும்.
1.84 அங்குல அளவுடைய Super AMOL சிம் திரையைக்




கொண்ட இந்தச் சாதனம் தூசு துணிக்கைகள் மற்றும் நீரிலிருந்து பாதுகாப்புடையதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.
மேலும் இதில் தரப்பட்டுள்ள 210 mAh மின் கலமானது 2 தொடக்கம் 4 நாள்கள் வரையில் மின்னை சேமித்து வைத்திருக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது.


# வீடியோ விளம்பரத் தொழில் நுட்பத்தை வாங்கும் பேஸ்புக்

சமூகவலைத்தளங்களின் வரிசையில் அசைக்க முடியாத அரசனாக தொடர்ந்தும் முன்னணியில் திகழும் பேஸ்புக் நிறுவனம் பல்வேறு நிறுவ னங்களை இலக்காகக் கொண்டு காணொலி விளம்பர சேவையை அறிமுகம் செய்யவுள்ளது.
இதன் மூலம் பேஸ்புக் தளத்தில் பதிவேற்றப்படும் காணொலிகளில் அதனுடன் மிகவும் ஒத்துப்போகக் கூடிய விளம்பரங்கள் காட்சிப் படுத்தப்படவுள்ளன.
இதற்கான தொழில்நுட்பத்தை வாங்குவதற்காக 400 மில்லியன் டொலர்கள் தொடக்கம் 500 மில்லியன் டொலர்கள் வரையான பணத்தை முதலீடு செய்ய தீர்மானித்துள்ளது.
இதேவேளை தற்போது யூரியூப் தளமும் இவ்வாறான விளம்பர சேவையை நடத்தி வருகின்றமை தெரிந்ததே.
எனினும் பேஸ்புக் தளத்துக்கு நாள் தோறும் பல லட்சக்கணக்கான பயனாளர்கள் பயணம் செய்வதால் இந்த முயற்சிக்கு விளம்பர நிறுவனங்க ளிடையே பெரும் வரவேற்பு இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

**பேஸ்புக் தளத்தில் பதிவேற் றப்படும் காணொலிகளில் அதனுடன் மிகவும் ஒத்துப்போகக் கூடிய விளம்பரங் கள் காட்சிப் படுத்தப்படவுள்ளன.**



## தமிழ்க் கொலை




தமிழ்க்கொலையுடன் வீதிப் பெயர்ப்பலகை

*கிளிநொச்சி, ஜூலை 11*
*கிளிநொச்சி அறிவியல் நகரில் பொருத்தப்பட்டுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீடத்தின் வீதிக்கான பெயர்ப் பலகை எழுத்துப் பிழைகளுடன் காணப்படுகின்றது.*
*இதில் பல்கலைக்கழக வீதி என்பதற்குப் பதிலாக 'பல்லைக்கழக வீதி என்று தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனைப் பார்ப்பவர்களின் மனதில் இது கடும் வேதனை ஏற்படுத்தி வருகின்றது.* (க-86)

# தனியார் பஸ்ஸை மறித்து மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

### அவர்களை ஏற்றிச் செல்லாமையே காரணம்

மன்னார், ஜூலை 11
மன்னார் உயிலங்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்கள் நேற்று வியாழக்கிழமை காலை தனியார் பஸ் ஒன்றை இடைமறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமையால் மன்னார்-உயிலங்குளம் பிரதான வீதியில் சிறிது நேரம் போக்குவரத்து தடைப்பட்டிருந்தது.
பாடசாலை மாணவர்களைக் கடந்த சில தினங்களாகக் குறித்த தனியார் பஸ் ஏற்றிச் செல்லாது சென்று விடுவதைக் கண்டித்தே குறித்த வீதி மறியல் மேற்கொள்ளப்பட்டதாக இந்தப் பாடசாலை மாணவர்கள் தெரிவித்தனர்.
மன்னாரில் இருந்து காலை 7.20 மணிக்கு மடு நோக்கி புறப்படும் குறித்த தனியார் பஸ் உயிலங்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலைக்கு வருவதற்காக சிறுநாவற்குளம், கள்ளிக் கட்டைக்காடு, நொச்சிக்குளம் ஆகிய கிராமங்களில் பஸ்ஸுக்காக காத்து நிற்கும் மாணவர்களை ஏற்றாது கடந்த சில தினங்களாக சென்றுள்ளது.
இதனால் நூற்றுக்கணக்கான பாடசாலை மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதில் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வந்தனர்.




ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் உயிலங்குளம் றோ.க.த.க. பாடசாலை மாணவர்கள்

**உயிலங்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்கள் நூற்றுக் கணக்கில் குறித்த பஸ்ஸை உயிலங்குளம் சந்தியில் மறித்து ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டனர்.**

இந்த நிலையில் நேற்று வியாழக்கிழமை காலை 7.20 மணியளவில் மன்னாரில் இருந்து மடுவுக்கு குறித்த தனியார் பஸ் புறப்பட்ட போதும் மாணவர்களை ஏற்றாது சென்றுள்ளது.
இந்த நிலையில் உயிலங்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்கள் நூற்றுக்கணக்கில் குறித்த பஸ்ஸை உயிலங்குளம் சந்தியில் மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
சம்பவ இடத்துக்கு வந்த மன்னார் பொலிஸார் உரையாடியதுடன் மாணவர்களுடனும் ஆசிரியர்களுடனும் மாணவர்களைப் பாடசாலைக்கு அனுப்பியும் வைத்தனர். இதனால் சுமார் ஒரு மணித்தியாலத் தாமதத்தின் பின்பே குறித்த பஸ் மடுவைச் சென்றடைந்தது. (க-56)

## இறைவனிடம் அருள் கேட்கும் புனித நிகழ்வே நோன்பு

### இப்தார் நிகழ்வில் குருமுதல்வர் விக்டர் சோசை

மன்னார், ஜூலை 11
இறைவனிடம் அருளைக் கேட்கின்ற புனித நிகழ்வுதான் முஸ்லிம்களின் நோன்பு ஆகும். எல்லாம் இறைவனிடம் இருந்து தான் எமக்குக் கிட்டுகின்றன. அனைத்தும் இறைவனுக் கென்றே படைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு மன்னாரில் இடம் பெற்ற 'இப்தார்' நிகழ்வில் கலந்து கொண்ட மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் அ. விக்டர் சோசை தெரிவித்தார்.
அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்:-
சிறப்பாக நோன்பு நோக்கும் புனிதமான இந்த மாதம் முக்கியமான ஒரு மாதமாகத் திகழ்கின்றது. அந்த வகையிலே இந்த மாதத்தை இறைவனுக்கு ஏற்ற மாதமாக, இறைவனுடைய அருளை பெற்றுக் கொள்ளுகின்ற ஒரு மாதமாக எமது இஸ்லாமிய சகோதரர்கள் கருதுகின்றார்கள்.
அதனைக் 'கடைப்பிடிக்கின்றார்கள். முஸ்லிம் என்ற வார்த்தைக்குள்ளே கடவுளுக்குள்ளே தம்மை முழுமையாக அர்ப்பணித்தல் என்ற பொருள் பொதிந்திருக்கின்றது.
இறைவனிடம் இருந்து தான் எமக்கு எல்லாமே கிட்டுகின்றன. அனைத்தும் இறைவனுக்கென்றே படைக்கப்பட்டுள்ளன. இதில் வேற்றுக் கருத்துக்களுக்கு இடமில்லை. அந்த எல்லாம் வல்லவனிடம் அவருடைய அருளை நாங்கள் பல்வேறு வகையிலே இரந்து கேட்கின்றோம்.
அவருடைய அருள் இல்லாவிட்டால் நாம் இந்த உலகில் வாழ முடியாது. அத்தகைய ஓர் அருளைக் கேட்கின்ற புனித நிகழ்வு தான் நோன்பு நோற்று அதனைப் புனிதமாக கடைப்பிடிக்கின்ற இந்த நிகழ்வு.
இறைவன் தன்னுடைய ஆசீர்வாதத்தால் நம்மை நிரப்புகின்றான் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-56)

## கிளிநொச்சியில் பல இடங்களில் பெருகிக் காணப்படும் பாதீனியம்

கிளிநொச்சி, ஜூலை 11
கிளிநொச்சியில் பல்வேறு இடங்களிலும் பாதீனியச் செடிகள் அதிகளவில் காணப்படுகின்றன.
குறிப்பாக புதிய மாவட்டச் செயலகத்தை அண்மித்த பகுதி, பிரதேச சபை வளாகத்துக்கு அருகிலுள்ள இடங்கள், கரைச்சிப் பிரதேச செயலகம் அமைந்துள்ள பகுதியிலுள்ள இடங்களில் இந்தச் செடியின் வளர்ச்சி அதிகளவில் காணப்படுகின்றது. மேலும் கிளிநொச்சியின் ஏனைய பல்வேறு இடங்களிலும் இந்தச் செடிகள் செழித்து வளர்ந்திருப்பதைக் காணமுடிகின்றது.
இந்தச் செடிகளைக் கட்டுப்படுத்துவதற்கான செயற்றிட்டங்கள் இங்கு முன்னெடுக்கப்பட்ட போதிலும் இவற்றை முழுமையாகக் கட்டுப்படுத்த முடியவில்லை.



பல்கிப் பெருகியிருக்கும் பாதீனியம்


இதேவேளை வடமாகாண விவசாய அமைச்சு பாதீனியச் செடிகளை அழிப்பதற்கான விசேட திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றது. மாரிகாலம் ஆரம்பிக்குமாயின் இந்தச் செடிகள் பல்கிப் பெருகுவதற்கான சாத்தியங்கள் அதிக முள்ளன. எனவே மாரிகாலம் ஆரம்பமாகும் முன்னர் பாதீனியச் செடிகளைக் கிளிநொச்சி பகுதியிலிருந்து முற்றாக ஒழித்து விட வேண்டுமென சமூக ஆர்வலர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-55)

## அதிகரித்து செல்லும் சைக்கிள் திருட்டு

முருங்கன், ஜூலை 11
மன்னார் நகரப் பகுதியில் சைக்கிள் திருட்டு அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
மன்னார் சாவற்கட்டுப் பகுதியிலுள்ள சைக்கிள் திருத்தும் கடை ஒன்றில் தமது சைக்கிளைத் திருத்துவதற்கென விட்டுச் சென்றவர் அதனைப் பறி கொடுத்துள்ளார்.
இந்தச் சம்பவம் கடந்த 7 ஆம் திகதி திங்கட்கிழமை இடம் பெற்றது. சைக்கிள் திருத்துநர் வேறொரு சைக்கிளைத் திருத்தும் வேளையில் ஈடுபட்டிருந்த போது இந்தச் சைக்கிள் திருடப்பட்டது. இவ்வாறு இங்கு அடிக்கடி சைக்கிள் திருட்டுக்கள் இடம் பெற்று வருவதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது. (க-415)

## அடிப்படை வசதிகள் இல்லாமல் வவுனியா கணேசபுரம் கிராமம்

வவுனியா, ஜூன் 11
வவுனியா கன்னாட்டி கணேசபுரம் மக்கள் அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாத நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.
மிகவும் பழைமை வாய்ந்த இந்தக் கிராம மக்கள் போரின் போது பல்வேறு இடங்களுக்கும் இடம்பெயர்ந்து மீண்டும் 2010 ஆம் ஆண்டு இங்கு மீள்குடியமர்ந்துள்ளனர்.
ஆனால் இதுவரை வீட்டுத் திட்டங்கள் எவையும் இந்த மக்களுக்கு வழங்கப்படவில்லை.
மேலும் மின்சார வசதியும் இல்லாததால் இங்குள்ள மாணவர்கள் குப்பி விளக்குகளில் தமது கல்வியைத் தொடர்கின்றனர்.



கணேசபுரத்தின் அவலநிலை

இதேவேளைகளில் இங்குள்ள வீடுகள் இருளில் மூழ்கியிருப்பதையும் அவதானிக்க முடிகின்றது. யானைகளின் தொல்லைகளாலும் இந்தக் கிராம மக்கள் அச்சமடைந்த நிலையில் உள்ளனர்.
இங்கு வரும் யானைகள் வீடுகள், விவசாய நிலங்கள், பயன் தரும் மரங்கள் ஆகியவற்றை நாசம் செய்கின்றனர்.
இவை தொடர்பாக வன இலாகினருடன் தொடர்பு கொண்ட போதிலும் பயன் கிடைக்கவில்லையென மக்கள் தெரிவிக்கின்றனர்.
மேலும் கிராம வீதிகள் மோசமான நிலையில் காணப்படுவதால் மழைகாலங்களில் வெள்ளநீர் தேங்கி நின்று போக்குவரத்துச் சிரமங்களை ஏற்படுத்துகின்றது.
எனவே தமக்குத் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருமாறும் அதிகாரிகளிடம் இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-402)

# பொன்விழா மண்டபம் ஜூலை 19 இல் திறப்பு



தென்மராட்சி, ஜூலை 11
சாவகச்சேரி நகரசபை வளாகத்தில் 74 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள நகர சபையின் 50 ஆவது ஆண்டை நினைவு கூரும் பொன்விழா மண்டபம் எதிர்வரும் 19 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு வடமாகாண சபை முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா ஆகியோர் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு மண்டபத்தை திறந்து வைக்கவுள்ளனர்.

உள்ளூராட்சி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 54 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட இரண்டு மாடிக் கட்டடம் நகர சபையிடம் கையளிக்கப்பட்டிருந்தது.

இந்தக்கட்டடத்தின்சிலவேலைத் திட்டங்கள் பூர்த்தியடையாத நிலையில் காணப்பட்டதால் சபை நிதியிலிருந்து 20 மில்லியன் ரூபா செலவில் சகல வசதிகளுடன் கூடிய நிலையில் மண்டபம் பூர்த்தி செய்யப்பட்டது. கட்டடம் தொடர்பான சமயச் சடங்குகள் கடந்த வாரம் நடத்தப்பட்டன.

குறித்த மண்டபம் திருமணம் உட்பட மங்கல நிகழ்வுகளை நடத்தவும் மற்றும் பொது நிகழ்வுகள், கூட்டங்கள், கருத்தரங்குகள் போன்றவற்றை நடத்தவும் வாடகைக்கு வழங்கப்படவுள்ளதாக தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார். (வ-9)

# ஆழிப் பேரலையால் ஆபத்தை எதிர்நோக்கும் 69 கிராமங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 11
யாழ்.மாவட்டத்தில் 69 இற்கு மேற்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகள் ஆழிப்பேரலை ஆபத்துக் கிராமங்களாக இனங் காணப்பட்டுள்ளன.

இருப்பினும் அந்தக் கிராமங்களில் இடர் வேளைகளில் வெளியேற்றும் பாதைகளுக்கான அடையாளமிடல் (இவாக்குவேசன் பார்த்) நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.மாவட்டத்தில் 69 இற்கு மேற்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகள் ஆழிப்பேரலையால் பாதிப்படையக் கூடிய பிரதேசங்கள் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. இந்தக் கிராமங்கள் சூறாவளி, உயர் அலை, கடல் உள்வருகை போன்றவற்றாலும் கடுமையான பாதிப்புக்களை எதிர்கொள்கின்றவையாகவே உள்ளன.

இவ்வாறான கிராம சேவையாளர் பிரிவுகளில், இடர் வேளைகளின்போது வெளியேற்றுப் பாதைகளுக்கான அடையாளமிடுதல், வெளியேற்றும் நிலையங்கள் போன்றன தீர்மானிக்கப்பட்டு அவை சகல மக்களுக்கும் தெளிவுபடுத்துவதுடன் அவற்றுக்கான குறியீடுகளையும் அமைப்பது அவசியமாகின்றது.

இவ்வாறான குறியீடுகள், யாழ்.மாவட்டம் தவிர்ந்த ஏனைய ஆழிப்பேரலை பாதிப்பு மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளன. எனினும் யாழ்.மாவட்டத்தில் இன்னமும் அமைக்கப்படவில்லை. மேற்படி ஆழிப் பேரலை பாதிப்பு கிராம சேவையாளர் பிரிவுகளிலுள்ள சமூகமட்ட அமைப்புக்கள் மற்றும் இடர்முகாமைத்துவ அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைய உருவாக் கப்பட்ட கிராம மட்ட இடர் முகாமைத்துவ அமைப்புகளும் இவ்வாறான குறியீடுகளை அடையாளப்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (வ-5)



ஊர்காவற்றுறை தம்பாட்டிப் பகுதியில் நண்டு பதனிடும் நிலையமொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாதன் நண்டு பதனிடும் நிலையத்துக்கான அடிக்கல்லை கடந்த வாரம் நட்டார். (வ-7)

# எழுவைதீவு பாலத்தை புனரமைக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 10
நீண்ட காலமாக உடைந்து பெரிதும் பாதிக்கப்பட்ட நிலையில் மக்கள் போக்குவரத்துக்கு இடையூறாக உள்ள எழுவை தீவு பாலத்தை விரைவில் புனரமைத்துத் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எழுவை தீவு மக்களும் படகு ஓட்டுநர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

படகில் ஏறுவதோ, படகில் இருந்து இறங்குவதோ உயிராபத்தை ஏற்படுத்தும் வகையில் பாலத்தின் முக்கிய பகுதிகள் சேதமடைந்துள்ளன.

இதனால் சிறுபிள்ளைகள் உட்பட பயணிகள் தவறி பாலத்தின் கீழ் உள்ள நீரில் விழக் கூடிய அபாயம் உள்ளது என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

அபாயம் மிக்க துறைமுகமாக உள்ளதால் இதனைத் திருத்தியமைத்துத் தருமாறு பல தடவைகள் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் தெரிவிக்கப்பட்டு வந்தும் எந்தவித பயனும் இல்லை என்றும் கூறப்படுகின்றது.

வடக்கு மாகாண சபையாவது இதற்கான நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்றும் அந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ-7)

# பொருள்களின் லேபிள் ஆங்கிலத்தில் மட்டும்

## சந்தைவாய்ப்பில் வீழ்ச்சி என்கின்றனர் வர்த்தகர்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 11
தென்னிலங்கையில் இருந்து குடாநாட்டுக்குக் கொண்டு வரப்படும் அத்தியாவசிய உணவுப்பொருள்களின் லேபிள்களில் ஆங்கில மொழியில் மட்டும் விவரங்கள் அச்சடிக்கப்பட்டு வருவதால் நுகர்வோர் மத்தியில் சந்தை வாய்ப்புக் குறைவடைந்துள்ளது என்று வர்த்தகர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அத்தியாவசிய உணவுப் பொருள்களில் கட்டாயம் இரு மொழிகள் அச்சடிக்கப்பட வேண்டியது அவசியமாகவுள்ள நிலையில் தற்போது தென்னிலங்கை முகவர்களால் குடா நாட்டுக்குள் கொண்டுவரப்படும் பொருள்களில் ஒரு மொழியில் மட்டுமே லேபிள் காணப்படுகிறது.

முகவர்கள் இது தொடர்பில் தம்மால் எதுவும் கூறமுடியாது. நிறுவனங்களால் அனுப்பப்படுகின்ற பொருள்களையே நாம் விற்பனை செய்கின்றோம் எனத் தெரிவிக்கின்றனர். குடாநாட்டில் விற்கப்படும் பொருள் களில் முக்கியமாக தமிழ் மொழி இடம்பெற வேண்டியது அவசியமாகும். ஆனால் ஆங்கில மொழியில் மட்டும் லேபிள்களில் அச்சடிக் கப்பட்டு வருகிறது. இதனால் நுகர்வோர் மத்தி யில் சந்தைவாய்ப்பு வெகு வாகக் குறைந்துள்ளது. இது தொடர்பில் முகவர்களுக்கு தெரியப்படுத்தியும் மாற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்றும் வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர். (வ-14)

# வலி.வடக்கு பிரதேச சபையில் 21 பேருக்கு நிரந்தர நியமனம்



வலி.வடக்குப் பிரதேச சபையால் நேற்றைய தினம் 21 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது. பிரதேச சபையின் பல்வேறு துறைகளுக்கும் உரிய நியமனங்களே, சபையின் அங்கீகாரத்துடன் வழங்கப்பட்டுள்ளன.

புதிய ஆளணி வெற்றிடத்தின் பிரகாரம், கடந்த ஏப்ரல் மாதம் 7ஆம், 8ஆம், 9ஆம் திகதிகளில் பிரதேச சபையால் நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டிருந்தது. இதில் சித்தியடைந்த 21பேரின் பெயர்கள் ஆளுநரின் அனுமதிக்காக அனுப்பப்பட்டிருந்தது. இந்த நியமனங்களை வழங்குவதற்கான அனுமதியை ஆளுநர் கடந்த 5 ஆம் திகதி வழங்கியிருந்தார். அதனடிப்படையில், நேற்றுக் காலை 9 மணிக்கு பிரதேச சபையின் விசேட கூட்டம் சபை மண்டபத்தில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் இந்த 21 பேரின் நியமனக்கடிதங்களையும்வழங்குவதற்கான அங்கீகாரத்தை தவிசாளர் சபையிடம் வேண்டியிருந்தார். அதற்கான அங்கீகாரத்தை உறுப்பினர் சி. ஹரிகரன் முன்மொழிய பொ.தங்கராசா வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதன்பின்னர் 21பேருக்குமான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு நேற்றுக் முற்பகல் 10 மணிக்கு தவிசாளர் சோ.சுகிர்தன் தலைமையில் சபை மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

சுகாதாரத் தொழிலாளர்களாக ந.உதயரூபன், திருமதி கௌரி பாரதிதாசன், கு.யுவர்ணன், இ.பகீரதன், க.கபில், அ.பிரதீபன் ஆகியோரும் வெளிக்களத் தொழிலாளர்களாக - மு.தர்சன், மு.ஜெயரத்தினம், செ.துஷ்யந்தன், ச.கணேசகுமாரன், ம.பிரதீபன் ஆகியோரும் காரியாலய காரியசகாவாக - பி.இயூஜின் வலன்ரைன், சி.சிவகுமார், க.அரவிந்தன் ஆகியோரும் நூலக பரிசாரகராக செல்வி இ.சுபேதாவும், சாரதிகளாக - தெ.ஜெயரூபன், சு.சுஜிந்தன், பா.பாலராஜ் ஆகியோரும், மயானத் தொழிலாளியாக - இ.பிரசண்ணாவும், ஆயுர்வேத மருந்தாளராக செல்வி சி.தர்சினியும், மின்னியலாளாராக பா.சொஜிந்தன் ஆகியோர் நியமனம் பெற்றவர்களாவர். (வ-5-86)

# ஓட்டோ சாரதிகளுக்கு இறப்புக்கான இழப்பீடு

**பதிவுசெய்யப்பட்ட**

யாழ்.மாவட்ட ஓட்டோ சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட ஓட்டோக்களின் சாரதிகளுக்கு இறப்புக்கான இழப்பீட்டுக் காப்புறுதி கொடுப்பனவு வழங்கும் ஆரம்ப நிகழ்வு எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல்10 மணிக்கு யாழ். நீராவியடி இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. ஓட்டோச் சங்கத்தால் ஏற்கனவே ஒரு இலட்சம் ரூபா இழப்பீட்டுத் தொகை வழங் கப்பட்டு வரும் நிலையில் மேலதிகமாக அதிகரித்த இழப்பீட்டு தொகை இனிவருங் காலங்களில் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-14)

# குருநகர் யுவதியின் இறப்பு விசாரணை ஒத்திவைப்பு

**யாழ்.போதனா மருத்துவமனையின் சட்ட வைத்திய திகாரி சிவரூபன் சாட்சியமளித்த நிலையில் தீர்ப்பு எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.**

வலி.வடக்கு, ஜூலை 11
யாழ்.நகரில் குருநகர் பகுதியில் உள்ள சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கு அருகில் உள்ள கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்ட செல்வி கொன் சலிற்றாவின் இறப்பு தொடர்பான வழக்கு எதிர்வரும் 24 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்றுக் காலையில் நீதிபதி சிவகுமார் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. யாழ்.போதனா மருத்துவமனையின் சட்ட வைத்திய அதிகாரி சிவரூபன் சாட்சியமளித்த நிலையில் தீர்ப்பு எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளது. குறித்த இளம் பெண் மறைக் கல்வி நிலையத்தில் கல்வி கற்கச் சென்றதாகவும் அங்குள்ள அருட்தந்தையர்கள் இருவர் அவருடன் பாலியல் ரீதியான துன்புறுத்தல் நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும் அந்தப் பெண்ணின் தாயாரால் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டைத் தொடர்ந்து இந்த விசாரணை நீதிமன்றினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (வ-86)

# 4 பிரதேச சபைகளுக்கு தலா ஒரு மில்லியன்

வலி. வடக்கு, ஜூலை 11
பிரதேச சபைகளை வலுவூட்டும் ஜனாதிபதியின் செயற்றிட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 4 பிரதேச சபைகளுக்கு தலா ஒரு மில்லியன் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பில் உள்ள உள்ளூராட்சி அமைச்சில் வைத்து உள்ளூராட்சி அமைச்சரால் கடந்த புதன்கிழமை இந்த நிதி பிரதேச சபைகளின் தவிசாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த வலி.தெற்கு, உடுவில், தென்மராட்சி, சாவகச்சேரி வலி. தென்மேற்கு, சண்டிலிப்பாய் மற்றும் நல்லூர் பிரதேச சபைகளுக்கே இந்த நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. (வ-86)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தென்னாபிரிக்காவின் அனுசரணை சாத்தியமா?

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் போர்க்குற்ற விசாரணை, சர்வதேச அழுத்தங்கள் என்பவற்றால் இலங்கையில் அமைதிப் பேச்சுக்கள் விரைவில் மீண்டும் ஆரம்பிக்கும் என்ற எதிர்பார்ப்பு உடனடியாக நிறைவேறும் சாத்தியங்கள் தென்படவில்லை.

தென்னாபிரிக்க துணை ஜனாதிபதியும் இலங்கைக்கான சிறப்புப் பிரதிநிதியுமான சிறில் ரமபோஷவின் வருகையுடன் அமைதிப் பேச்சுக்களுக்கான வலுவான அடித்தளம் ஒன்று ஏற்படுத்தப்படும் என்றே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அது அவ்விதம் அமையவில்லை.

சர்வதேச அழுத்தங்களின் காரணமாக அரசு அமைதிப் பேச்சுக்கு வரக்கூடும் என்ற எதிர்பார்ப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன்கூடக் கொண்டிருந்தார். ஊடகங்களிடம் பேசியபோது அவர் அந்த எதிர்பார்ப்பை வெளிப்படுத்தியிருந்தார். ஆனால், ரமபோஷவின் வருகையையொட்டி மகிழ்ச்சியான செய்தி எதுவும் வெளியாகவில்லை என்பது வருத்தத்துக்குரியதே.

இலங்கை அரசு அழைத்தமைக்கு ஏற்பவே ரமபோஷ இலங்கைக்கு வருகை தந்திருந்தார். பல இன, மத, மொழி பேதங்களுடன் வெள்ளை, கறுப்பு என்ற நிற பேதங்களையும் கொண்ட ஒரு நாட்டை, போருக்குப் பின்னர் எப்படி அனைத்து மக்களும் ஒன்றிணைந்து கட்டியெழுப்பி நிரந்தர அமைதியை உருவாக்கினார்கள் என்ற தென்னாபிரிக்காவின் அனுபவத்தை இலங்கையின் இரு பகுதியினருடனும் பகிர்ந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டதன் அடிப்படையில் அவரது வருகை அமைந்திருந்தது என்று விளக்கமளிக்கப்பட்டது.


இருந்தபோதும், வெளிநாடு ஒன்றின் அனுசரணையின்றி அரசுடன் பேச்சு நடத்துவது இனிச் சாத்தியமில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தி வந்த நிலையில், தென்னாபிரிக்காவின் வருகை அனுசரணைப் பணிக்கானதாகவே மதிப்பிடப்பட்டது. அரசும் நெருக்கடிகளுக்குள் சிக்கிக் கொண்டுள்ளதால் அமைதிப் பேச்சு ஒன்று விரைவாகத் தொடங்கப்படுவதற்கான சாத்தியங்கள் உருவாகி உள்ளதான தோற்றம் ஏற்பட்டது. ஆனால் அப்படியான மகிழ்ச்சியான செய்தி எதுவும் ரமபோஷவின் பயண முடிவில் வெளியாகவில்லை.

அதேநேரத்தில், தென்னாபிரிக்காவை அரசே உள்ளே அழைத்துவர, அரசின் பங்காளிக் கட்சிகளோ தென்னாபிரிக்காவின் பங்களிப்பைக் கடுமையாக விமர்சித்தன. பிள்ளையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டும் இத்தகைய போக்கிரித்தனங்களில் இந்த அரசுக்கு ஏற்கனவே நிறை அனுபவங்களுண்டு. அரசின் பங்காளிக்கட்சிகளின் நடத்தையால் மனவருத்தமடைந்த ரமபோஷ, தமது வருகை தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டுள்ளது என்றார்.

அமைதிப் பேச்சுக்கான அனுசரணை முயற்சிகள் எதிலும் தென்னாபிரிக்கா ஈடுபட்டுவிடக்கூடாது என்ற முன்னெச்சரிக்கை காரணமாகவும், அரசின் பங்காளிக் கட்சிகள் தூண்டிவிடப்பட்டிருக்கக்கூடும் என்று ஐயப்படுவதற்கும் இடமுண்டு. எனவே அத்தகைய மகிழ்ச்சிகரமான செய்திகள் எதுவும் இன்றியே ரமபோஷவின் பயணம் முடிந்துவிட் டது.

தென்னாபிரிக்காவில் ஒடுக்கப்பட்டவர்கள் வெற்றிபெற்று ஒடுக்கியவர்களுடன் சமரசம் செய்து கொண்ட நிலையுடன் ஒப்பிடும்போது இலங்கையில் நிலைமை தலைகீழானது என்பதால், அதனுடைய அனுபவம் இங்கு பொருந்தாது என்று தமிழர்களில் ஒரு தரப்பினராலும் ஏற்கனவே விமர்சனங்கள் வைக்கப்பட்டிருந்தன. இந்த நிலையில், ரமபோஷவின் வருகை பற்றிய சாதகமான கருத்துக்களையும், அவரது வருகையின் பயன் பற்றியும் அரசும்கூட மூச்சுவிடவில்லை. விரைவில் ஏதாவதொரு தேர்தல் நடக்கலாம் என்று எதிர்வுகூறப்படுவதால், அமைதிப் பேச்சுக்களை ஆரம்பித்து தனது வெற்றி வாய்ப்புக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்திவிடக்கூடாது என்று அரசு சிந்தித்ததன் விளைவாகக்கூட ரமபோஷவின் வருகை வெற்றிகரமானதாக, மகிழ்ச்சியான செய்தியை அறிவிக்கும் வருகையாக அமையவில்லை எனலாம்.

இந்த நிலையில் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையில் அமைதிப் பேச்சு ஒன்றை ஏற்படுத்தும் அனுசரணை ஏற்பாட்டைச் செய்வதற்கான அனுசரணைப் பணி தென் னாபிரிக்காவுக்குச் சாத்தியம்தானா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.



# ஈராக் படைகளும் கிளர்ச்சியாளர்களும்

■ ராஜ்

ஈராக் மீண்டும் ஊடகங்களின் தலைப்புச் செய்தி யாகிவிட்டது. கடந்த ஜனவரியில் பலுஜாவைக் கைப்பற்றிய சன்னி முஸ்லிம் தீவிரவாதக் குழுவினர், இப்போது திக்ரித்தையும், ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரமான மொசூலையும் கைப்பற்றியுள்ளனர்.

ஐ.எஸ்.ஐ.எல். என்று தங்களை அழைத்துக் கொள்ளும், அல் கொய்தாவிலிருந்து பிரிந்து வந்த இந்தக் கிளர்ச்சிக் குழுவினரின் குறிக்கோள், சன்னி முஸ்லிம் பிரிவினர் அதிகமாக வாழும் கிழக்கு சிரியாவும் மேற்கு ஈராக்கும் இணைந்த 'ஈராக் லெவான்ட்' என்கிற இஸ்லாமிய நாட்டை உருவாக்குவது.

அடுத்த சில மாதங்களில் அல்லது வருடங்களில், ஈராக்கின் வரைபடம் இப்போது இருப்பதுபோல காணப்படுமா என்பது சந்தேகமே. சிரியாவில், எப்படி தலைநகரையும், அதைச் சுற்றியுள்ள சிறிய பகுதியில் மட்டும் சிரிய அரசின் ஆதிக்கம் இருக்கிறதோ, அதேபோல, ஈராக்கிலும் பெரும்பான்மைப் பகுதிகள் பல்வேறு கிளர்ச்சிக் குழுக்களின் அதிகாரத்துக்கு உட்பட்டவையாக மாறிவிடக்கூடும்.

இன்றைய ஈராக் என்பது வடக்கில் துருக்கி, கிழக்கில் ஈரான், தென் கிழக்கில் குவைத், தெற்கில் சவூதி அரேபியா, தென் மேற்கில் ஜோர்தான், மேற்கில் சிரியா ஆகிய நாடுகளால் சூழப்பட்ட, பாரசீக வளைகுடாவில் வெறும் 58 கி.மீ. நீளம் மட்டுமே உள்ள கடற்கரையைக் கொண்ட ஒரு மத்திய ஆசிய நாடு. வடமேற்கிலிருந்து தென் கிழக்காக ஓடும் டைக்கிரிஸ், யூப்பிரட்டீஸ் நதிகள், பாலைவனத்தால் சூழப்பட்ட ஏனைய மத்திய, மேற்காசிய நாடுகளுக்கு மத்தியில் ஈராக்கைப் பசுமை நிறைந்த வளமான விவசாய பூமியாக்குகின்றன.

ஈராக், ஷியா முஸ்லிம் பிரிவினர் அதிகமாக வாழும் நாடு. குர்த் மற்றும் சன்னி முஸ்லிம்கள் இங்கே சிறுபான்மையினர். சதாம் ஹூசைனின் ஆட்சியில் சிறுபான்மையினரான சன்னி முஸ்லிம்களின் ஆதிக்கத்தில் பெருமளவான ஷியா முஸ்லிம் பிரிவினர் இரண்டாந்தரக் குடிமக்களாக நடத்தப்பட்டனர். இப்போது ஷியா பிரிவினரின் ஆட்சியில் நிலைமை தலைகீழாகி இருக்கிறது.

ஈராக், சிரியா, லெபனான் ஆகிய நாடுகளின் துணையோடு மேற்காசியாவில் ஷியா ஆதிக்கத்தை ஈரான் நிறுவத் துடிக்கிறது என்பது சவூதி அரேபிய நாடுகளின் தலைமையிலான சன்னி முஸ்லிம் அரசுகளின் கருத்து. நஜப், சர்பாவா என்கிற ஷியா முஸ்லிம் பிரிவினரின் இரண்டு முக்கியமான புனிதத் தலங்கள் ஈராக்கில் இருப்பதால், அதைத் தங்களது ஆதிக்கத்திலிருந்து விட்டுவிட ஷியா பிரிவினர் தயாராக இல்லை. மீண்டும் ஈராக்கில் சன்னி முஸ்லிம்களின் ஆட்சி அமைந்து விடக்கூடாது என்பதில் ஷியா பிரிவினரின் ஆளுமையிலுள்ள ஈரானும் குறியாக இருக்கிறது.

ஈராக்கின் தற்போதைய அதிபர் நௌரி அல் மாலிக்கி, முந்தைய சதாம் ஹூசைன் ஆதரவாளர்களையும், சன்னி முஸ்லிம் பிரிவினரையும் பழி வாங்கும் முயற்சியில் ஈடுபட்டதும், அவர்களை அரவணைத்துச் செல்லாததும் தான் இப்போதைய பிரச்சினைக்கே காரணம். சன்னி முஸ்லிம் தீவிரவாதக் குழுவான ஐ.எஸ்.ஐ.எல்லுடன் ஈராக் ராணுவத்தில் இருக்கும் சன்னி முஸ்லிம் பிரிவைச் சேர்ந்த வீரர்களும், தளபதிகளும் இணை து போராடுகிறார்கள். மனம் தளர்ந்த நிலையில் ஈராக் அரசின் படைகளும், சதாம் ஹூசைன் ராணுவத் தளபதிகளின் வழிகாட்டுதலில் ஐ.எஸ்.ஐ.எல். வீரர்களும் போரிடுவதால்தான் அவர்களால் இந்த அளவுக்கு முன்னேற முடிந்திருக்கிறது.

இதில் வேடிக்கை என்னவெனில், ஈராக் பிரச்சினையில் அமெரிக்காவும், ஈரானும் இணைந்திருப்பது தான். தார்மீக ஆதரவு ஈராக்குக்கு இருந்தாலும், ஆயுத உதவிகள் செய்வதில் அமெரிக்கா தயக்கம் காட்டுகிறது. தனது ஆயுத உதவி கிளர்ச்சியாளர்களான எதிரிகளின் கையில் சேர்ந்து விடுமோ என்று அமெரிக்கா அஞ்சுகிறது. சவூதி அரேபியா போன்ற சன்னி முஸ்லிம் நாடுகள் ஐ.எஸ்.ஐ.எல்லின் வெற்றியை மனதிற்குள் நினைத்து மகிழ்ந்தாலும், அதுபோன்ற கிளர்ச்சிக் குழுக்களின் வளர்ச்சி மத்திய கிழக்கு ஆசியாவின் அமைதியைக் குலைத்துவிடும் என்று பயப்படுகின்றன.

ஐ.எஸ்.ஐ.எல். தீவிரவாதிகளால் பக்தாதைக் கைப்பற்ற முடியாமல் போனாலும் ஈராக்கைக் கூறு போடலாம். அதன் மூலம் மத்திய ஆசியாவில் நிரந்தரமாக குழப்பம் நிலவக் கூடும். கிளர்ச்சிக் குழுக் களின் நடவடிக்கைகள் அதிகரிக்கக் கூடும். உலக அமைதியை அது பாதிக்கவும் செய் யும்.

இந்தியாவைப் பொறுத்தவரை, ஈராக்கில் பணிபுரியும் இந்தியர்களின் பாதுகாப்பு கவலை அளிக்கிறது. தீவிரவாதம் அதிகரித்தால் அதன் பாதிப்பும் நமக்குத்தான். நாம் மத்திய கிழக்கு, மேற்காசிய நாடுகளைத் தான் நமது பெற்றோலிய எண்ணெய்த் தேவைக்கு நம்பியிருக்கிறோம். பெற்றோலியம் எண்ணெய் விலை அதிகரிப்பு இந்தியாவில் விலைவாசி அதிகரிப்புக்கு வழிகோலும். (த)

> ஈராக்கின் தற்போதைய அதிபர் நௌரி அல் மாலிக்கி, முந்தைய சதாம் ஹூசைன் ஆதரவாளர்களையும், சன்னி முஸ்லிம் பிரிவினரையும் பழி வாங்கும் முயற்சியில் ஈடுபட்டதும், அவர்களை அரவணைத்துச் செல்லாததும் தான் இப்போதைய பிரச்சினைக்கே காரணம். சன்னி முஸ்லிம் தீவிரவாதக் குழுவான ஐ.எஸ்.ஐ.எல் லுடன் ஈராக் ராணுவத்தில் இருக்கும் சன்னி முஸ் லிம் பிரிவைச் சேர்ந்த வீரர்களும், தளபதி களும் இணைந்து போராடுகிறார்கள்.

# தேரில் பவனி வருகின்றாள் அன்னை நாகபூஷணி

நயினை நா.க.குமாரசூரியர்



அலைகடல் நடுவே வீற்றிருந்து அருளாட்சி செய்கின்ற அன்னை பராசக்தி கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் பதி நயினையம்பதியாகும். சப்த தீவுகளில் ஒன்றாகப் புகழ்பூத்து நிற்பது இந்தப் பதியாகும். 'மணிமேகலா' தெய்வம் இந்தப் பதிக்கு வந்து சென்றதால் 'மணிபல்லவம்' என்ற சிறப்புப் பெயர் பெற்றதும் இந்தப் பதியே. அறுபத்து நான்கு சக்தி பீடங்களுள் ஒன்றான 'புவனேஸ்வரி பீடம்' என்று அழைக்கப்படுவதும் அன்னையின் ஆலயமாகும். அன்னையவளின் ஆலயம் கிழக்கு நோக்கிய 108 அடி உயரமான கோபுரவாசல், அலைகடலில் நீந்தி அருட்கடலை நாடிவரும் அடியவர்களைத் தாங்குகின்ற இயற்கைத் தத்துவத்தை வலியுறுத்துகின்றது. அடியார்கள் 'அரோகரா' என்று வந்து கால்பதிக்கின்ற இறங்குதுறை நயினையம்பதிக்கே இயற்கையால் கொடுக்கப்பட்ட நற்றவத்தோற்றமாகும்.

காசியில் விசாலாட்சியாகவும், காஞ்சியில் காமாட்சியாகவும் மதுரையில் மீனாட்சியாகவும் திருநாமங்கள் கொண்ட சக்தியானவள் நயினாதீவில் புவனேஸ்வரி பீடத்தை அலங்கரித்துக்கொண்டு நாகாச்சியாகவும் உலகில் உள்ள உயிர்கள் உய்யும் வண்ணம் அருளாட்சி செய்து வருகின்றாள். அழுக்கொருவரும் ஒவ்வாத ஆனந்தவல்லியாக, அன்பர் என்பவர்க்கு நல்லன எல்லாம் தருபவளாக, அன்னை பராசக்தி விளங்குகின்றாள். அடியவர்களின் துன்ப துயரங்களையெல்லாம் சூரியனைக் கண்ட பனி போல் மறைந்திட அருள்பாலிக்கின்றாள். நாகபூஷணியாக, நாகராணியாக எழுந்தருளியிருந்து நாகதோஷத்தை நிவர்த்தி செய்கின்றாள்.

காலாதிகாலமாக முழு நம்பிக்கையோடு அம்பாளை வழிபட்டு நல்லருளைப் பெற்றவர்கள் பலர். நற்பேறு அடைந்த அடியார்கள் அநேகர். தன்னை வந்து தரிசிக்கும்படி அடியார்களுக்கு கனவிலும், நனவிலும் நாகபாம்பாகத் தோன்றி அவர்களைத் தன்வசம் ஈர்க்கின்ற அம்பாளின் அற்புதங்கள் பலப் பல. அம்பாள் உலகிலுள்ள அனைத்து உயிர்களுக்கும் தாயானவள்.

நெடுங்காலம் பிள்ளைப் பாக்கியம் இல்லாதிருப்போர் நாகபூஷணியை வழிபட்டு நாகப் பிரதிஷ்டை, நாகசாந்தி செய்தால் பலன் கிடைக்கும் என்ற நம்பிக்கை அடியார்கள் மத்தியில் இன்றும் காணப்படுகின்றது.

இன்று அம்பாளின் தேர்த்திருவிழா நடைபெறுகிறது. ஆனிமாதம் பிறந்துவிட்டால் அம்பாளின் உற்சவ நினைப்பு சைவ நன் மக்களுக்கு வந்துவிடும்.

மண்ணில் நல்ல வண்ணம் வாழ நல்லருள் தரும் அம்பிகையின் இந்தவருட மஹோற்சவம் காண வாருங்கள். வருகை தந்து அம்பிகையின் அழகுத் திருக்கோலத்தைக் கண்டு அருளமுதைப்பெற்றுக் கொள்ளுங்கள்.

> காலாதிகாலமாக முழு நம்பிக்கையோடு அம்பாளை வழிபட்டு நல்லருளைப் பெற்றவர்கள் பலர். நற்பேறு அடைந்த அடியார்கள் அநேகர். தன்னை வந்து தரிசிக்கும் படி அடியார்களுக்கு கனவிலும், நனவிலும் நாகபாம்பாகத் தோன்றி அவர்களைத் தன்வசம் ஈர்க்கின்ற அம்பாளின் அற்புதங்கள் பலப் பல.

---

**இன்று உலக சனத்தொகை தினம்**

# பாதிப்புக்களை ஏற்படுத்தும் சனத்தொகை அதிகரிப்பு

இ.தர்மேந்திரா, மந்துவில்

இன்று உலக சனத்தொகை தினமாக ஐ.நா.சபையால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. சனத்தொகை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 11ஆம் திகதி உலக சனத்தொகை தினமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

இன்று உலக சனத்தொகை 7 பில்லியனைக் கடந்துவிட்டது. சில நாடுகள் கடைப்பிடிக்கும்



சனத்தொகை தொடர்பான கொள்கைகள் சனத்தொகை தொடர்பாக ஏற்பட்ட விழிப்புணர்வு நடவடிக்கைகள் மற்றும் மக்களின் கல்வி அறிவில் ஏற்பட்ட விருத்தி போன்றவற்றால் சனத்தொகை வளர்ச்சி வீதம் இன்று குறைவடைந்துவிட்டது. இருப்பினும் வளர்முக நாடுகளில் இன்றும் சனத்தொகை வேகமாக அதிகரிக்கச் செய்வது மிகவும் கவலை தரும் விடயமே.

உலகில் அபிவிருத்தி அடைந்த நாடுகள் சனத்தொகை அதிகரிப்பை இயன்றளவு கட்டுப் படுத்தி உள்ள போதும் அபிவிருத்தி குன்றிய நாடுகள் சனத்தொகை அதிகரிப்பை கட்டுப்படுத்தத் தவறி உள்ளன. இதனால் இந்த நாடுகளின் சனத்தொகை வேகமாக உயர்வடைந்து வருகின்றது.

உலக சனத்தொகை வளர்ச்சி வேகத்தை நோக்கும்போது பிறப்பின் வேகமானது பின் வருமாறு காணப்படுவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

நிமிடம் ஒன்றுக்கு -150
மணித்தியாலம் ஒன்றுக்கு - 9,000
ஒரு நாளைக்கு - 2,16,000
ஒரு மாதத்துக்கு - 6,480,000
ஒரு வருடத்துக்கு - 78,840,000

உலக சனத்தொகையை அதிகம் கொண்ட கண்டமாக ஆசியாவும் உலகில் அதிக மக்கள் வசிக்கும் நாடாக சீனாவும் உலகில் அதிக

> உலகில் அதிகளவு மக்கள் வாழும் நகரங்களில் அதிகளவான நகரங்கள் ஆசியாக் கண்டத்தில் உள்ளன. குறிப்பாக டோக்கியோ, சென்னை, மும்பாய், சியோல், கல்கத்தா, ஷங்காய் போன்ற நகரங்களை குறிப்பிடலாம்.

மக்கள் வாழும் நகரமாக டோக்கியோவும் காணப்படுகின்றன. உலக மக்களில் அரைவாசிக்கு மேற்பட்ட மக்கள் ஆசியாக் கண்டத்தில்தான் வாழ்கின்றனர். உலகில் அதிகளவு மக்கள் வாழும் நகரங்களில் அதிகளவான நகரங்கள் ஆசியாக் கண்டத்தில் உள்ளன. குறிப்பாக டோக்கியோ, சென்னை, மும்பாய், சியோல், கல்கத்தா, ஷங்காய் போன்ற நகரங்களைக் குறிப்பிடலாம்.

ஓர் இடத்தில் மக்கள் தொகை அதிகமாக இருக்கும்போது இட நெருக்கடி ஏற்படுவதுடன் அந்த இடங்களில் சமூக விரோத செயல்கள் மற்றும் சேரிப்புறங்கள் உருவாகின்றது. அதிகளவு சூழல் மாசடைவதற்கும் முக்கிய அடிப்படைக் காரணி சனத்தொகை பெருக்கமே. பெருமளவு இயற்கை வளங்கள் சனத்தொகை அதிகரிப்பால் அழிக்கப்படுகின்றது.

உலகில் காணப்படும் நகரங்களின் எல்லைகள் அதிகரிக்கப்படுவதுடன் புதிய நகரங்களும் தோற்றம் பெறுகின்றன. இதன் காரணமாக நகர வெப்ப தீவுகள் தோற்றம் பெறுகின்றன. உலகில் காணப்படும் இயற்கைத் தாவரங்கள் அழிக்கப்பட்டு அந்த இடங்களில் குடியிருப்புக்கள் அமைக்கப்படுகின்றன.

சனத்தொகை அதிகரிப்பானது ஒட்டுமொத்த உலகத்தையே பாதிப்படையச் செய்யும் ஒன்றாக இருந்த போதிலும் அதிகளவில் வளர்முக நாடுகளே பாதிப்புகளை எதிர்கொள்கின்றன. சனத்தொகை அதிகரிப்பால் ஏற்படும் ஆபத்துக்களில் இருந்து விடுபட ஒவ்வொரு மனிதனும் விழிப்புடன் செயற்பட இன்றைய சனத்தொகை தினத்தில் உறுதி எடுத்துக் கொள்வோம்.

---

**வாசகர் திருமுகம்**

# ஏன் இந்த அநியாயம்?

மருந்துப் பொருள்கள் யாழ்.மாநகர எல்லைக்குள் அமைந்திருக்கும் கடைகளில் வேறுபட்ட விலைகளில் விற்பனை செய்யப்படுவதால் நோயாளர்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

யாழ்.மருத்துவமனைக்கு முன்னால் அமைந்துள்ள மருந்துக்கடையொன்றில் 100 மெற்போமின் குளிசைகள் 310 ரூபாவாக விற்பனை செய்யப்படும் அதேவேளை, திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்திக்கு அருகில் அமைந்துள்ள மருத்துவமனைக்கு முன்பாக உள்ள மருந்தகத்தில் 375 ரூபாவாக விற்பனையாகின்றது. இதைப்போன்று Bco குளிசையும் 17 ரூபா அதிகரித்த விலையில் விற்பனையாகின்றது.

நோயாளர்களின் அவசிய தேவைக்குப் பயன்படும் மருந்து வகைகளை இவ்வாறு அதிகரித்த விலையில் விற்பனை செய்வது அநியாயமாகும். விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகளின் கவனத்துக்கு இது சமர்ப்பணம்.

*பொ.மாதவன், சுன்னாகம்.*



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: அலைச்சலும் வேலைப்பளுவும் ஓரளவு இருக்கத்தான் செய்யும். அதே வேளையில் நீங்கள் செல்லும் இடமெல்லாம் அனுகூலம் ஏற்படும். ஏற்கனவே இருந்து வந்த பிரச்சினைகளில் இருந்து விடுபடுவீர்கள். நீண்ட நாள்களாக வராமல் இருந்த பணம் வரும்.

**இடபம்**:நினைத்ததை நிறைவேற்றிக் கொள்ள வாய்ப்புகள் உண்டு. உங்கள் சொல்லுக்கு பிறர் கட்டுப்படும் நிலையும் உருவாகும். கடந்த சில மாதங்களாக இருந்து வந்த மந்தநிலை அடியோடு மாறும். வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கான காரியங்களை இப்போது தொடங்கலாம்.

**மிதுனம்**: பொருளாதார வளம் சீராக இருக்கும். அதே வேளையில் செலவும் அதிகரிக்கலாம். சிக்கனம் தேவை. மனைவி வழியில் சிற்சில கருத்துவேறுபாடுகள் வரலாம். ஆனாலும் அது நொடிப் பொழுதில் சரியாகி விடும்.

**கடகம்**: மனதில் நிம்மதியும் ஆனந்தமும் ஏற்படும். அயலில் உள்ளோருடன் இருந்து வந்த கசப்புணர்ச்சி நீங்கும். புதிய வீடு மனை வாங்கத் தடைகள் ஏற்படலாம். உத்தியோகத்தர்கள் அதிக வேலைப் பளுவைச் சுமந்தாலும் அனைத்தையும் சுலபமாகச் செய்வீர்கள்.

**சிங்கம்**:சிலருக்கு விரும்பிய இடமாற்றம் கிடைக்கும். கோரிக்கைகள் நிறைவேறும். சக ஊழியர்கள் உதவிகள் செய்து அனுசரணையாக இருப்பார்கள். உங்களிடம் கொடுக்கப்பட்டுள்ள பொறுப்புகளை நீங்கள் திறமையாகச் செய்வீர்கள்.

**கன்னி**:சிறிது முயற்சி எடுத்தால் வாய்ப்புகள் வந்து குவியும். புதிய ஒப்பந்தங்களைத் துணிந்து ஏற்றுக் கொள்ளலாம். எதிர்பார்த்த புகழ், பாராட்டுக் கிடைக்கும். மாணவர்கள் சிறிது சிரத்தை எடுத்தல் அவசியம். உடல் நலம் சிறப்படையும்.

**துலாம்**: உங்களுக்கு முன்னேற்றங்களைத் தரும். எதிர்பார்த்த தகவல்கள் நல்ல தகவல்களாக வந்து சேரும். நன்மைகள் அதிகம் கிடைக்கும். எடுத்த காரியம் அனைத்தும் வெற்றிகரமாக முடியும். மதிப்பு மரியாதை சிறப்படையும்.

**விருச்சிகம்**: செல்வாக்கு ஓங்கும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகள் நடந்தேறும். நீண்ட நாள்களாக எதிர்பார்த்திருந்தவர்களுக்கு சந்தான பாக்கியம் கிட்டும்.

**தனுசு**:புதிய சொத்து வாங்கலாம். தொழில் சிறக்கும். பிள்ளைகளால் பெருமை ஏற்படும். விருந்து விழாவுக்காக செலவுகள் செய்வீர்கள். வீட்டுக்குத் தேவையான ஆடம்பரப் பொருள்களை வாங்கும் போது கவனம் தேவை.

**மகரம்**: உத்தியோகம் பார்ப்பவர்கள் உன்னத நிலையை அடையலாம். பதவி உயர்வு, சம்பள உயர்வு போன்றவை இருக்கும். மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். சக ஊழியர்களின் உதவி கிடைக்கும். சிலர் அதிகாரி அந்தஸ்துக்கு உயர்த்தப்படுவர்.

**கும்பம்**: வியாபாரிகள் தாம் செய்து வரும் தொழிலில் சிறப்பான பலன்களைக் காணலாம். தொழில் நிமித்தமாக சிலர் தூர தேச பயணம் மேற்கொள்ள வேண்டி வரலாம். இந்த வேளையில் யாரிடமும் சற்றுக் கவனத்துடன் பார்த்து பழக வேண்டியது அவசியமாகிறது.

**மீனம்**: தங்குதடையின்றி புதிய வாய்ப்புகளைப் பெறலாம். புகழ் பாராட்டு வந்து சேரும். எதிர்பார்த்த பதவிகள் வந்து சேரும். மாணவர்கள் நல்ல நிலைக்கு உயர்த்தப்படுவீர்கள். மனதில் இருந்து வந்த இனம்புரியாத வேதனை மறையும்.

## நாளை

**ஆனி-28 சனிக்கிழமை | 12.07.2014**

திதி: பூரணை மாலை 05.44 வரை
நட்சத்திரம்: பூராடம் மு.இ.07.20 வரை

சுபநேரம்: 02.59-04.29 வரை
இராகுகாலம்: 08.59-10.29 வரை

**பூரணை விரதம்**

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### விதியை வகுப்பவன் மனிதனே

தென்னிந்தியாவில் ஆற்றல் மிக்கக் குலம் ஒன்று இருந்தது. அந்தக் குலத்தவர்கள் அவ்வப்போது வாழ்ந்த சிறந்த மனிதர்களின் ஜாதகங்களை எல்லாம் கணித்து, அவற்றைத் திரட்டி வைப்பது என்ற விதியை ஏற்படுத்திக்கொண்டார்கள். அதன்படி அவர்களின் வாழ் நாளில் என்னென்ன நிகழ்ச் சிகள் முக்கியமாக நிகழும் என்று சோதிடர்கள் எழுதி வைத்திருந்த குறிப்புகளுடன், வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகளை ஒப்பிட்டுப் பார்த்தார்கள். இப்படியே ஓர் ஆயிரம் ஆண்டு காலம்செய்து வந்தார்கள். அதன் பிறகு சில ஒற்றுமைகளைக் கண்டார்கள். அந்த ஒற்றுமைகளைக் கொண்டு, பொதுவிதிகளை வகுத்துக் கொண்டார்கள். அவற்றை எல்லாம் ஒரு பெரிய புத்தகமாகச் செய்து கொண்டார்கள். இவ்வாறு செய்து வந்த குலம் அழிந்து போயிற்று. என்றாலும் சோதிடர்களின் குடும்பம் வாழ்ந்து வந்தது. அந்தப் புத்தகமும் அவர்களிடமே இருந்தது. சோதிடம் இவ்வாறே தோன்றியிருக்கலாம். சோதிடத்தின் சிறு சிறு அம்சங்களுக்கும் அளவு கடந்த முக்கியத்துவம் கொடுத்தல், இந்துக்கலளை மிகவும் கெடுத்து வரும் மூடப்பழக்கங்களுள் ஒன்றாகும்.

கிரேக்கரே முதன் முதலில் சோதிடத்தை இந்தியாவுக்கு அளித்தனர். இந்துக்களிடமிருந்து வான இயலை எடுத்து ஐரோப்பாவுக்கும் அளித்தனர். இது என் கருத்து. இந்தியாவில் பழைய பலிபீடங்கள் ஒரு குறிப்பிட்ட ஷேத்திரக் கணிதப் படம் போலக் கட்டப்பட்டு இருப்பதைக் காணலாம். மேலும் வானத்தில் விண்மீன்கள் குறிப்பிட்ட இடங்களில் இருக்கும்போது, சில செயல்களைச் செய்தாக வேண்டும். ஆகவே, கிரேக்கர் இந்துக்களுக்குச் சோதிடத்தைத் தந்தனர் என்றும், இந்துக்கள் அவர்களுக்கு வான இயலைத் தந்தார்கள் என்றும் நான் கருதுகிறேன்.

நிகழ்பவற்றை வியப்புறும்படி முன்னரே சொன்ன சில சோதிடர்களை நான் பார்த்திருக்கிறேன். விண்மீன்களைக் கொண்டு மட்டும் அல்லது அவை போன்றவற்றைக் கொண்டு மட்டும் அவர்கள் அந்த நிகழ்ச்சிகளை முற்கூட்டியே சொன்னார்கள் என்று நான் நம்பவில்லை. வந்தவர்களின் முகக் குறிப்பைக் கொண்டே அவர்களின் மனத்தில் இருப்பவற்றுள் பலவற்றைக் கூறினார்கள். சில வேளைகளில் வியப்புறும் வண்ணம் அவர்கள் சோதிடம் கூறினார்கள். எனினும் பெரும்பாலான சமயங்களில் அவர்கள் கூற்று பொய்யாகி விடுகிறது.

## முப்பரிமாண கமராக்களுடன் அதிநவீன ரோபோ



இந்த ரோபோ முப்பரிமாண கமராக்கள் மற்றும் சென் சார்களை அடிப்படையாகக் கொண்டு செயற்பட வல்லது. அதாவது பொருள்களைப் பார்க்கும் ஆற்றலையும் அவற்றைத் தொட்டு உணரும் ஆற்றலையும் கொண்டுள்ளது.

பிரிட்டனைத் தளமாகக் கொண்டு இயங்கும் Shadow எனப்படும் ரோபோ உற்பத்தி நிறுவனம் அதிநவீன ரோபோ ஒன்றை உருவாக்கியுள்ளது. இந்த ரோபோ முப்பரிமாண கமராக்கள் மற்றும் சென்சார்களை அடிப்படையாகக் கொண்டு செயற்படவல்லது. அதாவது பொருள்களைப் பார்க்கும் ஆற்றலையும் அவற்றைத் தொட்டு உணரும் ஆற்றலையும் கொண்டுள்ளது. இதனால் இந்த ரோபோ மென்மையான பொருள்களையும் கையாளக்கூடியதாகக் காணப்படுகின்றது.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 1 | | | 5 | 6 | |
| | 1 | 9 | | 5 | | | | |
| 8 | | 5 | 7 | | | | 4 | 1 |
| 7 | 4 | | | | 5 | 6 | | |
| | 9 | 2 | | | | 8 | 1 | |
| | | 1 | 6 | | | | 7 | 2 |
| 5 | 2 | | | | 3 | 1 | | 4 |
| | | | | 6 | | 2 | 3 | |
| | 7 | 3 | | | 2 | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 1 | 4 | 9 | 2 | 3 | 5 | 6 | 8 |
| 2 | 5 | 6 | 7 | 8 | 1 | 3 | 9 | 4 |
| 9 | 3 | 8 | 5 | 6 | 4 | 2 | 7 | 1 |
| 4 | 8 | 7 | 3 | 5 | 6 | 1 | 2 | 9 |
| 3 | 6 | 9 | 8 | 1 | 2 | 4 | 5 | 7 |
| 1 | 2 | 5 | 4 | 7 | 9 | 6 | 8 | 3 |
| 5 | 9 | 3 | 2 | 4 | 7 | 8 | 1 | 6 |
| 6 | 4 | 2 | 1 | 9 | 8 | 7 | 3 | 5 |
| 8 | 7 | 1 | 6 | 3 | 5 | 9 | 4 | 2 |




பெரியகடை ஸ்டார் ஈகிள் விளையாட்டுக்கழகம் நான்காவது வருடமாக நடத்திய மன்னார் பிறிமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் 2ஆம் இடத்தைப் பெற்ற மன்னார் பெரியகடை ஸ்டார் ஈகிள் அணியினர் விருத்தினர்களுடன். (த-23)

# வசந்தஸ்ரீ, சீமா அணிகள் அரையிறுதிக்கு முன்னேறின

யாழ்ப்பாணம், ஜூலை 11
மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் மின்னொளியில் நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் பேட்டித் தொடரின் ஆட்டங்கள் மோகனதாஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் புதன் கிழமை இடம்பெற்ற 'பீ' பிரீவு அணிகளுக்கு இடையிலான காலிறுதியாட்டத்தில் முதளாவது ஆட்டத்தில் கலைமதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் வசந்த ஸ்ரீ விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் சண்டிலிப்பாய் வசந்த ஸ்ரீ விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதி யாட்டத்துக்குத் தகுதி பெற்றது.



இரண்டாவது ஆட்டத்தில் அச்சுவேலி கலைமகள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மீசாலை சீமா விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் அச்சுவேலி கலைமகள் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதி யாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (த-23)

## அணித் தெரிவு ஞாயிறன்று

சார்க் நாடுகளுக்கு இடையிலான 19 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டி இடம்பெறவுள்ளது.

இதற்காக இலங்கை அணியைத் தெரிவு செய்வதற்கான முதற்கட்டத் தெரிவு எதிர்வரும் 13ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

மேற்படி தெரிவில் 01.01.1997 அன்றும், அதன் பின்னரும் பிறந்தவர்கள் கலந்து கொள்ள முடியும் என இணைப்பாளர் தெரி வித்துள்ளார். (த-23)

## நாச்சிக்குடா மேரிஸ், பல்கலை அணிகள் ஆட்டங்களில் அசத்தல்

யாழ்ப்பாணம், ஜூலை 11
குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகத்தின் பொன் விழாவை முன்னிட்டு வடமாகாண ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் புதன் கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:-

ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணிக்கும் நாச்சிக்

**நாச்சிக் குடா சென்.மேரிஸ் விளையாட் டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற் றது.**

குடா சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் நாச்சிக்குடா சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

யாழ்.பல்கலைக்கழக அணிக்கும் குருநகர் சென்.றோக்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் எதுவித கோல்களையும் பெறாமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வியைக் காண்பதற்காகச் சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் யாழ்.பல்கலைக்கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

# ஆட்டங்களில் வென்ற அணிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 11
கனகபுரம் விளையாட்டுக் கழகம் கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் நடத்தும் 9 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் கனகபுரம் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் புதன் கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:-

உருத்திரபுரம் விளையாட்டுக்கழக 'ஏ' அணிக்கும் பூநகரி ஜயனார் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் உருத்திரபுரம் விளையாட்டுக்கழக 'ஏ' அணி 7:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

திருநகர் விளையாட்டுக்கழக 'ஏ' அணிக்கும் கோணாவில் யங் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் திருநகர் விளையாட்டுக்கழக 'ஏ' அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

ஜெயந்திநகர் விளையாட்டுக் கழக 'ஏ' அணிக்கும் கல்மடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் ஜெயந்தி நகர் விளையாட்டுக்கழக 'ஏ' அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

**புதிய பாரதி விளையாட் டுக் கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.**

ஜெயந்திநகர் விளையாட்டுக் கழக 'பி' அணிக்கும் பூநகரி அண்ணா விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் பூநகரி அண்ணா விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

புதிய பாரதி விளையாட்டுக் கழக அணிக்கும் ஸ்கந்த விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் எதுவித கோல்களையும் பெறாமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. ஆட்டம் வெற்றி தோல்வியைக்காண்பதற்காக சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப் பட்டன. இதில் புதிய பாரதி விளையாட்டுக் கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## இன்றைய ஆட்டங்கள்



யாழ்ப்பாணம், ஜூலை 11
மோகனதாஸ் விளையாட்டுக்கழகம் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் மின்னொ ளியில் நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் மோகனதாஸ் விளையாட்டுக் கழக மைதா னத்தில் இடம் பெற்று வருகின்றன.

இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் 'பி' பிரிவு அணிகளுக்கான காலிறுதியாட்டத்தில் இளவாலை மத்திய விளையாட்டுக்கழ்க அணியை எதிர்த்து நாயன் மார்கட்டு பாரதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மேற்படி போட்டியில் வெற்றி பெறும் அணி இரவு 9 மணிக்கு இடம் பெறும் அரையிறுதியாட்டத்தில் மட்டுவில் ஜங்கரன் விளையாட்டுக்கழக அணியுடன் மோதவுள்ளது.

இரவு 8 மணிக்கு இடம்பெறும் 'ஏ' பிரிவு அணிகளுக் கான ஆட்டத்தில் ஆனைக்கோட்டை பிரதீப் விளை யாட்டுக்கழக அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

* * *

தும்பளை கருணையுள்ளம் விண்மீன் நற்பணி மன்றத்தின் அனுசரணையுடன் பலாலி வீண்மீன் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 7பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் றெஜின் போ விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்று ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சிவானந்தா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக 'ஏ' அணியை எதிர்த்து கரவைச் சுடர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 11
குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகத்தின் பொன் விழாவை முன்னிட்டு வடமாகாண ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 11
இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் 107 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பிரான்ஸ் பழைய மாணவர் சங்கம் இளவாலை யங்ஹென்றிஸ் விளை யாட்டுக்கழகத்துடன் இணைந்து யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 11 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் பகல், இரவு ஆட்டங்களாக இடம்பெற்று வருகின்றன.

இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக அணியை எதிர்த்து மனோகரா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளாது. (த-23)

* * *

கனகபுரம் விளையாட்டுக்கழகம் கிளிநொச்சி லீக்கின் அனுசரணையில் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியை மாவட்ட ரீதியில் நடத்தி வருகின்றது.

அணிக்கு 9 பேர் கொண்ட இந்தச் சுற்றுப் போட்டியில் 40 அணிகள் விளையாடுகின்றன. இதில் இன்று வெள்ளிக் கிழமை காலை 8.30 மணி தொடக்கம் இடம்பெறும் ஆட்டங்களின் விவரங்கள் வருமாறு:-

ஸ்கந்தா 'ஏ' எதிர் உருத்திரபுரம் (பச்சை)
கலைஒளி 'ஏ' எதிர் வேரவில் கலைமகள்
உழவர் ஒன்றியம் (மஞ்சள்) எதிர் செந்தாரகை 'ஏ'
திருநகர் (வெள்ளை) எதிர் லக்கிஸ்ரார்
உதயதாரகை 'ஏ' எதிர் ஜெயந்திநகர் 'ஏ'
வட்டக்கச்சி 'பி' எதிர் புதியதாரகை

இந்தச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை 3 மணிக்கு இடம்பெறவுள்ளது. இதில் முதலிடம் பெறும் அணிக்கு 20 ஆயிரம் ரூபா பணப்பரிசும் வெற்றிக் கேடயமும், இரண்டாம் இடம்பெறும் அணிக்கு 10 ஆயிரம் ரூபா பணப்பரிசும் வெற்றிக்கேடயமும் வழங்கப் படவுள்ளது. (த)

# கோல் காப்பாளர் றொமேரோ அபாரம் இறுதிப் போட்டியில் ஆர்ஜென்ரீனா



உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் பெனால்டி முறையில் 4-2 என்ற கோல் கணக்கில் ஆர்ஜென்ரீனா வெற்றி பெற்றது. நெதர்லாந்து வெளியேறியது.

ஆர்ஜென்ரீனா கோல் காப்பாளர் றொமேரோ, நெதர்லாந்து வீரர்களான விலார் மற்றும் ஸ்னைடர் ஆகியோர் அடித்த பெனால்டி உதைகளை கச்சிதமாகக் கணித்துக் கோலாகாமல் தடுத்தார். மாறாக ஆர்ஜென்ரீனா வீரர்கள் அடித்த 4 உதைகளும் கோலாக மாறின. நெதர்லாந்து கோல் காப்பாளர் ஜாஸ்பர் சிலீசன் ஒன்றைக்கூட தடுக்க முடியவில்லை.

அன்று கோஸ்டரிக்கா அணிக்கு எதிராக டிம் குரூல் என்ற உதவிக் கோல் காப்பாளரைப் பெனால்டிக்காக கொண்டு வந்தது நெதர்லாந்து. ஆனால் இந்த ஆட்டத்தில் நெதர்லாந்துப் பயிற்சியாளர் 3 உதவி வீரர்களையும் பயன்படுத்தி விட்டதால் டிம் குரூலை களமிறக்க முடியாமல் போனது.

லயோனல் மெஸ்ஸி தலைமையில் முதல் இறுதிப் போட்டியைக் காண்கிறது ஆர்ஜென்ரீனா. மேலும் 24 ஆண்டுகளுக்குப் பிறகு இறுதிப் போட்டிக்குள் நுழைந்துள்ளது.

120 நிமிட நேர ஆட்டம். இரு அணிகளின் இறுக்கமான தடுப்பரண்களால் கோல்களை அனுமதிக்கவில்லை. பெனால்டி முறைக்கு ஆட்டம் சென்றது. மெஸ்ஸி, இசகியல் காரே, செர்ஜியோ அகியுரோ மற்றும் மாக்ஸி றொட்ரிக்கஸ் ஆகியோர் கோல்களை அடித்தனர். நெதர்லாந்து கோல் காப்பாளர் சிலீசன் 16 முறை பெனால்டி உதைகளை கோட்டைவிட்டவர். இப்போது இந்த எண்ணிக்கை 20 ஆக அதிகரித்துள்ளது.

1990ஆம் ஆண்டு ஜேர்மனி அணிக்கு எதிராக இறுதிப் போட்டியில் ஆர்ஜென்ரீனா தோல்வி தழுவியது. அப்போது அணித் தலைவர் மரடோனா. 24 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது மீண்டும் பழி தீர்க்க வாய்ப்பு கிடைத்துள்ளது. ஆனால் அன்று பிரேசிலுக்கு நடந்தது ஆர்ஜென்ரீனாவுக்கு நடக்காமல் இருந்தால் சரி.

மெஸ்ஸியை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தது நெதர்லாந்து. குறிப்பாக அதன் ரான் விலார், மெஸ்ஸி இருமுறை சீறிப் பாய்ந்தபோது அடக்கினார். மேலும் அவருக்கு சுதந்திர வெளியை அனுமதிக்கவில்லை.

அதேபோல் நெதர்லாந்து வீரர் அர்ஜென் ராபின் 90 நிமிடங்களுக்குப் பிறகு முதன்முறையாக சுதந்திரம் பெற்றுப் பந்தை எடுத்துச் சென்று உதைக்க முன்னர் ஆர்ஜென்ரீனா வீரர் மஸ்செரானோ அபாரமாகத் தடுத்தார்.

இப்படியேதான் முதல் 90 நிமிட நேர ஆட்டமும் சென்றது. ஆர்ஜென்ரீனா, நெதர்லாந்து இரு அணிகளுமே ஒருவரையொருவர் கோல் அடிக்க விட்டுவிடக் கூடாது என்பதில் தெளிவாக இருந்தனர்.

இதனால் ஆட்டம் சில தருணங்களில் அரையிறுதிக்கான விறுவிறுப்பை இழந்தது. கூடுதல் நேரத்தில் சில முன்னேற்றங்களை இரு அணிகளும் செய்தாலும் அதனால் இரு அணிகளுக்குமே நன்மை கிட்டவில்லை.

பிரேசில் 1- 7 என்று தோல்வியடைந்த பிறகே இந்த இரு அணிகளும் எச்சரிக்கையின் உச்சக் கட்டத்தில் ஆடியதால் ஆட்டம் பெனால்டி முறைக்குச் சென்றது. நெதர்லாந்து அணியின் போராட்டக்குணம், ஆக்ரோஷம் இந்த ஆட்டத்தில் இல்லை. இதுவே அதன் வெளியேற்றத்திற்குக் காரணமாக அமைந்தது. (த)



## நெய்மருக்கு கேரளாவில் சிகிச்சை?



முதுகெலும்பு முறிவில் பாதிக்கப்பட்டுள்ள பிரேஸில் உதைபந்தாட்ட அணியின் நட்சத்திர வீரர் நெய்மருக்கு கேரளாவில் சிகிச்சை அளிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

உலகின் முன்னணி கால்பந்து வீரர்களில் ஒருவரான நெய்மர், கொலம்பியா அணிக்கு எதிரான உலகக் கிண்ணக் காலிறுதி ஆட்டத்தில், ஜுவான் சுனிகாவுடன மோதியதில் நெய்மருக்கு முதுகெலும்பு முறிவு ஏற்பட்டது.

இந்நிலையில், நெய்மர் உலகக் கிண்ண போட்டிகளில் இருந்து விலகிக் கொண்டார். இந்த முதுகெலும்பு முறிவை சரி செய்வதற்காகவே நெய்மர் கேரளா வரவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக பிரேஸில் உதைபந்தாட்ட சங்கத்தின் பொறுப்பாளர்கள் கேரள மாநில முதல்வருடன் கலந்துரையாடியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் இந்தக் கூற்றை மறுத்த அவர் கேரளாவில் உள்ள உதைபந்து ரசிகர்கள் நெய்மருக்கு சிகிச்சை அளிக்க வேண்டும் என்று விரும்புகின்றனர். அவர்களின் விருப்பத்தை ஏற்று சுகாதார துறை அமைச்சர் நெய்மரின் காயம் குறித்து அறிந்து அவருக்கு எவ்வாறான சிகிச்சை அளிக்கலாம் என ஆராயுமாறு கூறியுள்ளதாக கூறினார்.

நெய்மர் விரும்பினால் அவருக்கு சிகிச்சை அளிக்க கேரள அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என அவர் மேலும் தெரிவித்தார். (த)

## ஜேர்மனியின் ஹிட்லர் தாக்குதல் டுவிட்டினால் வெடித்தது சர்ச்சை



ஜேர்மனி அணியின் வெற்றியை ஹிட்லரை ஒப்பிட்டு மலேசிய நாடாளுமன்ற உறுப்பினர் தனது கருத்தை வெளியிட்டதால் பெரும் சர்ச்சை வெடித்துள்ளது.

அரையிறுதியில் பிரேசிலை 7-1 என்ற கோல் கணக்கில் ஜேர்மனி வீழ்த்தி வெற்றி பெற்றது. இதனால் பிரேசில் ரசிகர்கள் பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாகினர்.

அதேவேளையில் ஜேர்மனிய ரசிகர்கள் தங்கள் வரலாற்று வெற்றியைச் சிறப்பாக கொண்டாடினர்.

இந்நிலையில் ஜேர்மனி அணிக்கு வாழ்த்து தெரிவிக்கும் விதமாக மலேசிய நாடாளுமன்ற உறுப்பினர் பங் என்பவர் தனது டுவிட்டர் பக்கத்தில் அசத்திட்டிங்க&சூப்பர்&.ஹிட்லர் வாழ்க எனக் குறிப்பிட்டிருந்தார்.

இந்தக் கருத்துக்கு பலரும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். இது பிரேசில் மக்களின் உணர்ச்சிகளைக் கேலி செய்யும் விதமாக உள்ளது என பலரும் தங்களின் கருத்துக்களைப் பதிவு செய்து வருகின்றனர். இது பற்றி பங் கூறுகையில், ஹிட்லர் வரலாற்றில் இடம்பெற்ற ஒரு மனிதர். ஜேர்மனியின் ஆட்டம், ஹிட்லரின் தோரணையில் இருந்தது. அதனால் தான் நான் அப்படி கூறினேன் என்று கூறியுள்ளார். (த)

**உதயன்**
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## தேவை

100 அடி பந்தல் 01 மாதத்துக்கு வாடகைக்குத் தேவை.

077 180 7672 (49854) (10)

# அச்செழு வளர்மதி வீழ்ந்தது மோரிஸிடம்

பொற்பதி விளையாட்டுக்கழகம் நடத்தும் சிவகுரு ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித்தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் புதன் கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மோரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அச்செழு வளர்மதி விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.இதில் நாவாந்துறை சென். மோரிஸ் விளையாட்டுக்கழக அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

(த-23)

# கலைமதி வென்றது

யாழ்ப்பாணம், ஜூலை 11



மோகனதாஸ் விளையாட்டுக்கழகம் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் மின்னொளியில் நடத்தும் கரப்பந் தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் மோகனதாஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் புதன்கிழமை இடம் பெற்ற 'ஏ' பிரிவு அணி களுக்கான ஆட்டத்தில் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கலைமதி விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.அதில் கலைமதி விளையாட்டுக்கழக அணி 2:1என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது.

(த-23)

# மரண அறிவித்தல்



## திருமதி கந்தசாமி தியாகேஸ்வரி

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட கந்தசாமி தியாகேஸ்வரி (09.07.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் தங்கச்சியம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கந்தசாமியின் அன்பு மனைவியும், மோகனாம்பிகை, றதனி (நெதர்லாந்து), திருவானந்தன், றஞ்சலா (ஜேர்மனி), காலஞ்சென்ற சிவானந்தன் மற்றும் நிரஞ்சலா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற தர்மகுணசிங்கம் மற்றும் ஆனந்தகுமார், யோகதேவகணேசன், அமிர்தலிங்கம் ஆகியோரின் பாசமிகு மாமியும், பாக்கியம், விமலா, கமலா, காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் தேவராசா (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற முத்துலிங்கம் மற்றும் அம்பிகாவதி, பாலசுப்பிரமணியம், கனகலிங்கம் ஆகியோரின் அன்பு அண்ணியும், செல்லத்துரை, நாகராசா, சாந்தி, தம்பிராசா, ராசமணி ஆகியோரின் அன்பு மைத்துனியும், லிஷாந்தன், துஷாந்தன், திவ்யா, பிரவீண், லவீனா, கபிலன், ஜெயனீ, றஞ்சிதன், ஹம்சனா, கீர்த்திகன், றவீனா ஆகியோரின் அன்பு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.07.2014) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிப்பிலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உச்சிபோடை லேன்,
மானிப்பாய் வடக்கு, மானிப்பாய். (49855)(10)

தகவல்: பிள்ளைகள்
(குடும்பத்தினர்)
077 272 0101

# மரண அறிவித்தல்



## அவுறாம்பிள்ளை ஜோன் இராசையா

இந்தியாவில் மதுரையைப் பிறப்பிடமாகவும், மருதடி லேன் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட அவுறாம்பிள்ளை ஜோன் இராசையா (09.07.2014) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற யோகம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற அலெக்ஸ் சாந்தராஜன் மற்றும் லூர்த்தம்மா (ரதி), கிரிஜா, காலஞ்சென்ற ரவீந்திரன் மற்றும் யோகநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பீற்றர் செலஸ்ரின்துரை, காலஞ்சென்ற நோயல் மற்றும் ரஞ்சினி தேவியின் பாசமிகு மாமனாரும், யூலியன்-சுதாமதி (பிரான்ஸ்), ஜெகன்-நீறா (லண்டன்), சங்கீதா-டயன்சன் (இத்தாலி), நிசாந்தன்-சுவிந்தினி, ராஜ்மோகன் (பிரான்ஸ்), சுரேஸ்குமார்-டென்சியா, சசிகுமார்-சுபா (பிரான்ஸ்), விஜயகுமார்-ரதினி (இத்தாலி), ஷிரோமி, கபிலன் (பிரான்ஸ்), பிரசாந், பிரியங்கா மற்றும் சாரங்கா ஆகியோரின் பாசமிகு பேரனும், யதுஷா, தாட்சாயினி, திவ்யா, திபிஷா, டஸ்வின், அட்சயா, ஷெபான், ஷர்வின், வர்ஷன், டில்ஷான், ஜெனிபர், ஆன்ரூஸ் ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (11.07.2014) வெள்ளிக்கிழமை முப. 10 மணியளவில் றக்கா வீதியில் உள்ள புனித திரேசாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(49856)(10)

தகவல்: இ. யோகநாதன் (மகன்)
கட்டப்பிராய் - (077 103 2663)

# குறித்தொதுக்கப்பட்ட மாகாண நன்கொடை (PSDG)-2014

## கேள்வி அறிவித்தல்-2014

### வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை, வடமாகாணம்.

கொல்களம் அமைத்தல் சூடுவெந்தபுலவு ஒப்பந்த இல - VCKPS/DA/PSDG/W01/2014

01. தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, **வெங்கலச்செட்டிகுளம் பிரதேசசபை, வடமாகாணம்,** தகுதி வாய்ந்த ஒப்பந்த காரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.

02. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

03. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் கட்டட **அமைப்புக்கான** இக்ராட் (ICTAD) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

04. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தவிசாளர், வெங்கலச்செட்டிகுளம் பிரதேசசபை (தொலைபேசி **024-2260914, 0242260913** தொலைநகல் **024-2260913**,) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வி ஆவணம் ஒன்றை ஆங்கில மொழியில் தவிசாளர், பிரதேச சபை, வெங்கலச்செட்டிகுளம் எனும் இடத்திலிருந்து 11.07.2014 ஆம் திகதியிலிருந்து 25.07.2014ஆம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் மாலை 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000/= செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

06. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து ஒரு பிரதி தவிசாளர், வெங்கலச்செட்டிகுளம் பிரதேசசபை எனும் முகவரிக்கும், இரண்டாவது பிரதியினை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்,பூங்காவீதி வவுனியா எனும் முகவரிக்கும் 25.07.2014ஆம் திகதி பிற்பகல் 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது. கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர், அல்லது கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

07. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித்திகதியில் இருந்து 77 (எழுபத்து ஏழு 10.10.2014) நாள்கள் வரையும் செல்லுபடியாகும்

08. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி எண் | வேலை விவரம் | மதிப்பீட்டு தொகை (Mn) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| VCKPS/DA/PSDG/W01/2014 | கொல்களம் அமைத்தல் சூடுவெந்தபுலவு | 2.6 | 2 மாதம் | C8ற்கும் அதற்கு மேல் | 52,300.00 | 07.11.2014 |

தலைவர், உள்ளூர் அதிகார பெறுகைச்சபை,
வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை, வெங்கலச்செட்டிகுளம்.
வடக்கு மாகாணம்.
10.07.2014

(C/14962)(10.6.3)

## ஜோதிடர் வருகை

ஜாதகம், திருமணப் பொருத்தம், கிரக பெயர்ச்சி பலன்கள், தொழில் விருத்தி, திருமணத் தடை போன்ற பிரச்சினைகளுக்கு கேரள முறைப்படி தீர்வு காணல்.

ரிஷிகேஷ் சுவாமிகள்
075 546 2855 (49851) (10)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



## திருமதி உதயராணி முனீஸ்வரன்

SLEAS II
(வலயக் கல்விப் பணிப்பாளர் - முல்லைத்தீவு)

முல்லைத்தாயின் கல்வித்துறையின் முதற் பெண்மணியாம் திருமதி உதயராணி முனீஸ்வரன் அவர்கள் வலயக்கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வுபெற்றதையிட்டு மனமகிழ்வதோடு, அவர் பணிசிறக்கவும், அதனூடாக முல்லைக் கல்வி வலயம் மேலும் மேலும் வளர்ச்சி அடையவும் வாழ்த்துகின்றோம்,

Congratulation

அதிபர், ஆசிரியர்கள்,
(49852)(10) மு/உடையார்க்கட்டு அ.த.க. பாடசாலை

# கண்ணீர் அஞ்சலி

## இந்திராணி சண்முகலிங்கம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/கொக்குவில் இந்துக் கல்லூரி)



வைரவர் கடாட்சம், பலாலி வீதி,
திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.

எமது பாடசாலையில் கல்வி கற்பிக்கும் இணைந்த கணித ஆசிரியை திருமதி சந்திரசேகரம் தர்சினி அவர்களின் அன்புத் தாய் காலமானதையிட்டு எமது பாடசாலை ஆசிரியர் குழாமின் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலை சமூகம் (49858) (10)
யா/தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி.

# மரண அறிவித்தல்

## திருமதி இராஜவள்ளி சிங்கமுத்து



இல. 283, ஜெயந்தி நகரை நிரந்தர வதிவிடமாகவும், இல.866, திருநகர் வடக்கில் தற்போது வசித்து வந்தவருமாகிய இராஜவள்ளி சிங்கமுத்து நேற்று (10.07.2014) வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிங்கமுத்துவின் அன்பு மனைவியும், இந்திராணி, பத்மாவதி, காலஞ்சென்ற சந்திரசேகரன் மற்றும் இராஜதுரை, ஜெயசேகரன், திலகேஸ்வரி, காலஞ்சென்ற இரவீந்திரகுமார் மற்றும் சிவகுமார் ஆகியோரின் அன்புத் தாயும், செல்வநாயகம், (ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்), அன்ரனி, சுமதி, யசோதினி, நித்தியா, அசோக்குமார், சுபாசினி ஆகியோரின் அன்பு மாமியும், ஜெயரஞ்சன், காயத்திரி, கிருஷாந்தன், கார்த்திகா, கோகுலன், யதார்த்தன், ஹஸ்யந்தன், கௌசல்யா, விரோசிதா, நிரோஷ், சுகிர்தரன் காவியன், துவிகரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அருணிகா, கம் ஷணா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (11.07.2014) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரின் திருநகர் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநகர் இந்து பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(41316)(10)

தகவல்:
குடும்பத்தினர்.

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
021 567 11 11
advt@uthayan.com

**வீடு வாடகைக்கு**

யாழ்ப்பாணம் பிறவுண் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய பல அறைகளைக் கொண்ட மாடி வீடு வாடகைக்கு உண்டு. (நிறுவனப் பாவனைக்கு உகந்தது)

தொடர்பு : 077 773 7072 (49839)(7.6.3)

**உடன் விற்பனைக்கு**

Net Caffe உரிய பொருள்கள் மலிவு விலையில் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 076 548 2676

**புலமைச்சுடர் நடத்தும்**

**இலவசக் கருத்தரங்கு - தரம் 5**

**இடம் : யாழ் / இணுவில் இந்துக் கல்லூரி**

திகதி : நாளை, 12 / 07 / 2014 (சனிக்கிழமை),
காலை 08.30 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணி வரை

வளவாளர்கள் : பீ. பத்மநேசன் (யாழ்ப்பாணம்),
ரீ. திலீப்குமார் (கொழும்பு)

அனுசரணை :
**இணுவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்**

அனைத்து மாணவர்களும் பங்குபற்றி பயன் பெறுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு
தொ. பே - 077 3821399 / 078 2825009

## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதி சண்முகநாதன்



பன்னாலை, அம்பனை, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், வவுனியா, வைரவபுளியங்குளம், மாடசாமி கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி சண்முகநாதன் 09.07.2014 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-மூத்ததங்கம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான அருணாசலம்-தையல் நாயகி தம்பதியரின் அன்பு மருமகளும், நாவற்குழியைச் சேர்ந்த காலஞ்சென்ற C.A சண்முகநாதனின் (முன்னாள் சுகாதார திணைக்கள பிரதம லிகிதர்) அன்பு மனைவியும், அருணாதேவி (இளைப்பாறிய மருந்தாளர்-வவுனியா மெடிக்கல்ஸ்), தர்மபூபதி (முன்னாள் பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்), சிறிஸ்கந்தராசா (கனடா), விஜயராணி (வவுனியா மெடிக்கல்ஸ்), Dr.சிறிபவானந்தராசா (பிரதிப் பணிப்பாளர்-யாழ்.போதனா வைத்தியசாலை), சிறிபாஸ்கரராசா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற கனகசபாபதி (மருந்தாளர்) மற்றும் குகதாசன் (ஓய்வுபெற்ற கணக்காய்வு அத்தியட்சகர்), ரோகிணி (கனடா), ஓங்கார வடிவேல், சிவரஞ்சினி, சத்தியா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவசாந்தி-Dr.K.பிரதீபன் (VOG ஆஸ்திரேலியா), Dr.K.செல்வஸ்கந்தன் (வைத்தியர்-யாழ் போதனா வைத்தியசாலை), சாரூஜா (விவசாயபீட விரிவுரையாளர்-யாழ் பல்கலைக்கழகம்), துவாகரன்- கலைவாணி (UK), கோகுலன் (முகாமையாளர்-சம்பத் வங்கி, மன்னார்), வேதசாருணி- ஜெயசீலன் (UK), உமாராணி (கனடா), உமாரமணன் (கனடா), இஷானி, லக்ஷன், கேசிகன், கீர்த்தனா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கௌசிகன், கேசன்யா, ரோஷன், அனுருத்தன் ஆகியோரின் அன்புப் பூட்டியும், காலஞ்சென் றவர்களான பாலசுப்பிரமணியம், மகேஸ்வரி மற்றும் பரமேஸ்வரி, விநாயகமூர்த்தி, அன்னலட்சுமி, மனோன்மணி, காலஞ்சென்ற விஜயரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (13.07.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தட்சணாங்குளம் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

23/27, குளக்கட்டு வீதி,
(மாடசாமி கோயிலடி),
வைரவ புளியங்குளம்,
வவுனியா.
T.P :024 222 0305

தகவல்:
Dr.S.சிறிபவானந்தராசா (மகன்)
யாழ்.போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்
அம்பனை, பன்னாலை,
தெல்லிப்பழை
T.P : 077 757 0161

(43375)(7.6.3)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 11
ஆசிரியர் பி.இரட்ணராஜ் எழுதிய 'அறிவுச்சாரல்' நூல் வெளியீட்டுவிழா நாளை சனிக்கிழமை யாழ்.புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தில் காலை 9.30 மணிக்கு நடைபெறும்.

புனித பொஸ்கோ வித்தியாலய அதிபர் அருட் சகோதரி ம.ஜீவந்தி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரீனும், கௌரவ விருந்தினராக ஆளுநர் செயலக உதவிச் செயலாளர் ஜே.எக்ஸ். செல்வநாயகமும், சிறப்பு விருந்தினர்களாக மாகாண கல்வித் திணைக்கள பிரதிக்கல்விப் பணிப்பாளர் க.ஜெ.பிரட்லி, அருட்திரு பி.ஜேக்கப் யோகராஜ் ஆகியோர் கலந்து கொள்வர். (வ-7)

## அலங்காரத் திருவிழா

கொழும்புத்துறை, ஜூலை 11
ஈச்சமோட்டை கலட்டிப்புலம் ஸ்ரீஞான வைரவர் தேவஸ்தான அலங்காரத்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகி 15 தினங்கள் நடைபெறவுள்ளது.

தினமும் மாலை 5 மணிக்கு திருவிழா நடைபெற்று உள்வீதியுலா நடைபெறும். எதிர்வரும் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அபிஷேகமும் மகேசுர பூசையும் நடைபெற்று, மாலை 5 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் வெளிவீதியுலாவும் இடம்பெறும். (வ-135)

## கும்பாபிஷேகத்தில் தங்கச் சங்கிலிகள் திருட்டு

தென்மராட்சி, ஜூலை 11
வரணி, சிட்டிவேரம் கண்ணகை அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகத்தின்போது இரண்டு தங்கச் சங்கிலிகள் திருட்டுப்போயுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கும்பபூஜை நடைபெற்றுக் கொண்டிருந்தவேளையில் அடியார்களின் நெருக்கடியைப் பயன்படுத்தி இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. நேற்றுமுன்தினம் புதன்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (வ-9)

## போதையில் வாகனம் செலுத்திய இருவருக்கு ரூ.22,500 அபராதம்

தென்மராட்சி, ஜூலை 11
மதுபோதையில் விபத்தை ஏற்படுத்தும் வகையில் வாகனங்களைச் செலுத்திய இருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை அபராதம் விதிக்கப்பட்டது.

பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த நீதிவான் ஒருவருக்கு 13 ஆயிரத்து 500 ரூபாவும் மற்றவருக்கு 9ஆயிரம் ரூபாவும் அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார். (ஓ-9)

## வகுப்பறை கட்டடத்துக்கு இன்று அடிக்கல்

நெல்லியடி, ஜூலை 11
வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் புதிதாக அமையவிருக்கும் வகுப்பறைக் கட்டடத்துக்கான அடிக்கல்நடும்நிகழ்வுஇன்று வெள்ளிக்கிழமை கல்லூரி அதிபர் தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின்செயலாளர் சி.சத்தியசீலன் கலந்துகொண்டு அடிக்கல்லை நட்டு வைப்பார். (ஓ-109)







## மரண அறிவித்தல்

### சிவகுமாரி (சிவா) நற்குணசிங்கம்

**[4ஆம் வட்டாரம், புங்குடுதீவு]**



புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி, பரவைக்குளம்-அளுத்மாவத்தை, கொழும்பு ஆகிய இடங்களில் வசித்தவருமாகிய சிவகுமாரி நற்குணசிங்கம் 08.07.2014 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரது பூதவுடல் இன்று (11.07.2014) வெள்ளிக்கிழமை விளையாட்டரங்க வீதி, கோப்பாய் தெற்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கும்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

விளையாட்டரங்க வீதி,
கோப்பாய் தெற்கு. (49835)(7.6.3)

தகவல்: குடும்பத்தினர்

## அறிவித்தல்

மானிப்பாய் கிராம உப அலுவலகம், ஆனைக்கோட்டை
வட்டாரம் :- 07
ஆதன இலக்கம் :- 64/30
வட்டுக்கோட்டை வீதி.

வட்டாரம் 07 ஆதன இலக்கம் 64/30 இல் அமைந்துள்ள (உறுதிப்படி வட மாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப்பகுதி மானிப்பாய் கோவில் பற்று நவாலி இறை ''பறையன் பனை வளவு'' என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 01 கொண்ட இவ்வாதனமானது மானிப்பாயைச் சேர்ந்த சுகன்யா வாகீஸ்வரன் ஆகிய இவர்களால் அறுதி உறுதி மூலம் ஆனைக் கோட்டையைச் சேர்ந்த அப்பரும் பெண் புவனேஸ்வரி என்பவருக்கு குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் திரு.சி. வீரகத்திப்பிள்ளை முகதாவில் நிறைவேறிய 14475 ஆம் இலக்க 04.06.2014 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் தமக்கு சொந்தம் எனத் தெரியப்படுத்தி எமது மானிப் பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார் ''பறையன் பனை வளவு'' நிலப்பரப்பு 01 கொண்ட இவ்வாதனத்துக்கு உரிமை கோருபவர் கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாள்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வுரிமையும் கோரப்படாத விடத்து இவ்வாதனம் அப்பரும் பெண் புவனேஸ்வரி என்பர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

**தவிசாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,**
**மானிப்பாய்.**

(49842)(10)

## காணிகளைச் செப்பனிட அனுமதி தர வேண்டும்

களுவாஞ்சிக்குடி, ஜூலை 11
தமிழினம் ஆதியும் அந்தமும் இல்லாத காலத்தில் உருவாக்கம் அடைந்த ஓர் இனமாகும். அந்த இனத்துக்கு இன்று இருப்பதற்கு ஒரு நாடில்லை. கடந்த காலத்தில் இருந்து செயற்பட்டு வந்த தமிழ் தலைவர்களின் காலத்திலிருந்து இற்றைவரையில் எமது தமிழினத்திற்கு பாதுகாப்பு என்பது இல்லாதிருக்கின்றது. - இவ்வாறு தெரிவித்துள்ளார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தற்போதைய கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான ஞானமுத்து கிருஷ்ணபிள்ளை.

மட்டக்களப்பு, களுமுந்தன்வெளி விநாயகர் கலைக் கழகம் நடத்திய வருடாந்த சாதனையாளர் பாராட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

"இந்த அரசு மட்டுமல்லாமல் கடந்த காலங்களிலிருந்த அரசுகளும் எமது இனத்தின் வாழ்விடங்கள், கல்வி, கலை கலாசார அம்சங்களோடு சேர்த்து எமது இனத்தையும் அழித்தார்கள். இவைகளனைத்துக்கும் முகம் கொடுத்து பல சவால்களையும் எதிர் கொண்டு தற்போதைய நிலையில் எம்மினம் வாழ்ந்து வருகின்றது.

எமது மக்களின் அனைத்து விடயங்களும் அழிக்கப்பட்டுள்ள நிலையில் மிஞ்சியிருப்பது எமது கல்வி மாத்திரம் தான். அவற்றை நாம் பேணிப் பாதுகாக்க வேண்டும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

## போசாக்கு விழிப்புணர்வு ஊர்வலம் ஏறாவூரில்

ஏறாவூர், ஜூலை 11
தேசிய போசாக்கு விழிப்புணர்வு மாதத்தை முன்னிட்டு ஏறாவூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை போசாக்கு விழிப்புணர்வு வீதி ஊர்வலம் ஏறாவூரில் நடைபெற்றது.

ஏறாவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் ஏறாவூர் கல்வி அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன் ஏற்பாடு செய்திருந்த இந்த போஷாக்கு விழிப்புணரவூட்டல் ஊர்வலத்தில் பாடசாலை மாணவர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இரும்புச் சத்து மூலமான போசாக்கு மனித வாழ்வுக்கு இன்றியமையாதது எனும் இந்த ஆண்டின் தொனிப் பொருளை மையமாகக் கொண்டு இந்த விழிப்புணர்வு ஊர்வலம் நடத்தப்பட்டது. இரும்புச் சத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தும் பதாதைகளைத் தாங்கிய வண்ணம் ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலய மாணவர்கள் போஷாக்கு ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

ஊர்வலத்தின் இறுதியில் உரையாற்றிய ஏறாவூர் சுகாதார வைத்திய அதிகாரி கலையரசி துரைராஜசிங்கம்,


"கருவில் தொடங்கி மரணிக்கும் வரை ஒரு மனிதரின் ஆயுள் காலத்தில் இரும்புச் சத்து இன்றியமையாததாகி விடுகின்றது. உயிர் வாழ்வதற்கு இரும்புச் சத்து முக்கியம். பிள்ளைகள் சுறுசுறுப்பாக இயங்குவதற்கு இரும்புச் சத்தை விட முக்கியமானது வேறொன்றுமில்லை. கரும்பச்சை நிறக் கீரைகள், முட்டை மஞ்சள்கரு, மீன், இறைச்சி, கருவாடு, அவரை வகைகள் போன்றவற்றில் இரும்புச் சத்துக்கள் தாராளமாகக் கிடைக்கின்றன. அவற்றை தேடிப்பிடித்து விரும்பிய விதத்தில் உண்ண வேண்டும்"- என்று தெரிவித்தார். (ற)



## பொத்துவில் பிரதேசத்துக்கு தனியான உபகல்வி வலயம்

### அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பை தெரிவிப்பு

பொத்துவில், ஜூலை 11
பொத்துவில் பிரதேசத்துக்கான தனியான உப கல்வி வலயமானது எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 7ஆம் திகதி முதல் இயங்கவுள்ளது என்று கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசன அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பை தெரிவித்துள்ளார்.



உதுமாலெப்பை

இது தொடர்பான உயர்மட்டக் கூட்டம் பொத்துவில் அல்-பஹ்றியா வித்தியாலத்தில் கடந்த புதன்கிழமை பிரதேச சுதந்திரக் கட்சி அமைப்பாளர் ஏ.எம்.அப்துல் மஜீட் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் மாகாண கல்வி அமைச்சர் விமல வீர திஸாநாயக்க, மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பை, மாகாண கல்விப்பணிப்பாளர் எம்.ரீ.நிஸாம், கல்வி அமைச்சின் செயலாளர் என்.ஏ.ஏ. புஸ்பகுமார உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தின்போது பொத்துவில் பிரதேசத்தில் இயங்கி வரும் பிரதேச கல்வி காரியாலயம் புனரமைக்கபட்டு எதிர்வரும் 7ஆம் திகதி முதல் உப கல்வி வலயமாக இயங்குவது என தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

ஆசிரியர்களின் சம்பளம், வருடாந்த சம்பள படியேற்றம், இடமாற்றம் போன்ற நடவடிக்கைகளை இந்த உபவலயம் மேற்கொள்ளவுள்ளது என்றும், இதற்கான ஆளணிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன என்றும் அமைச்சர் அங்கு மேலும் தெரிவித்தார். (ற)



## போரதீவுபற்று பிரதேசத்தில் நீருக்குப் பெரும் தட்டுப்பாடு

களுவாஞ்சிக்குடி, ஜூலை 11
மட்டக்களப்பு மாவட்டம், போரதீவுப்பற்று பிரதேச சபை பிரிவில் கடும் வறட்சியால் பொது மக்கள் நீரைப் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

அதையடுத்து போரதீவுபற்று பிரதேச சபை தும்பங்கேணி, இளைஞர் விவசாயத் திட்டம், சுரவணையடியுற்று, களுமுந்தன்வெள, பிலாலிவேம்பு, காந்திபுரம், விவேகானந்தபுரம், வீரங்சேனை, மாவேற்குடா போன்ற பல கிராமங்களுக்கு பவுசர் மூலம் நீரை விநியோகித்து வருகின்றது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த போரதீவுப்பற்று பிரதேச சபையின் செயலாளர் சி.குபேரன்,

"பல பாடசாலைகளிலும் குடி நீருக்கான தட்டுப்பாடு நிலவுகின்றது.

அவற்றையும் இயன் ற வரை பூர்த்தி செய்வதற்கான வேலைத் திட்டங்களை பிரதேச சபை மேற்கொண்டு வருகின்றது.

வறட்சி நிலமை மேலும் தொடருமாயின் மேலதிக வேலைத் திட்டங்களை மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்படும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

## இனந்தெரியாதவர்களின் தாக்குதலில் ஒருவர் காயம்

### நாவலடியில் சம்பவம்

மட்டக்களப்பு, ஜூலை. 11
மட்டக்களப்பு, வாழைச் சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாவலடி சந்தியில் இடம் பெற்ற தாக்குதல் சம்பவத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை இரவு நடைபெற்றுள்ளது என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். பிறைந்துரைச்சேனை, பது ரியா பள்ளி வீதியைச் சேர்ந்த கபீப்லெப்பை நவாஸ் என்பவரே இவ்வாறு தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார். குறித்த நபர்



நாவலடிச் சந்தியில் உள்ள உறவினரின் வீடொன்றுக்குச் சென்று திரும்பும் போதே அவரை வழிமறித்து சந்தேக நபர்கள் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது. தாக்குதலில் படுகாயமடைந்த நிலையில் வாழைச் சேனை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட குறித்த நபர் தற்போது மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு பொது வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-10)


## மரண அறிவித்தல்



### நவமலர் இராசலிங்கம்

ஏழலை தெற்கு மயிலங்காட்டைப் பிறப்பிடமாகவும் மாதகலை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட நவமலர் இராசலிங்கம் நேற்று (10.07.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா -தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பையா - நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், கிருஷ்ணர், காலஞ்சென்றவர்களான தவமணி, கனகமணி, சின்னத்துரை ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம், பரமலிங்கம் மற்றும் மகாலிங்கம், தர்மலிங்கம், சிவலிங்கம் ஆகியோரின் மைத்துனியும், கவிதா, கஜேந்திரன் ஆகியோரின் அன்புத் தாயும், ஜெகதீஸ்வரனின் அன்பு மாமியும், ஜனோஸ்ரன், ஜனோஜா, ஜனுஸ்ரன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.07.2014) வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கு மாதகல் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மாதகல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாதகல்

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### மடுத்தீன் போர்விலியப்பர்

3 ஆம் வட்டாரம் மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மடுத்தீன் போர்விலியப்பர் நேற்று (10.07.2014) வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மடுத்தீன் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அருஸ்தின் - செல்வநேசம் தம்பதியரின் மருமகனும், லூர்துமற்றினா (வில்வராணி) யின் அன்புக் கணவரும், அன்ரனி ஜெயநேசன் (றொயன்) அன்ரனி பியூட்சன், மேரி விஜயராணி, அன்ரனி போல்சன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயசீலி, கோப்பெரும் செல்வி, டைமன் ஜெயசீலன், டொறன்சினா (கனடா) ஆகியோரின் மாமனாரும், றெஜி, றெஜின்ரன், விதுஷா, வினோத் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க திருப்பலி (12.07.2014) சனிக்கிழமை காலை 9 மணிக்கு மண்டைதீவு புனித பேதுருவானர் ஆலயத்தில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3 ஆம் வட்டாரம்,
மண்டைதீவு
077 9796578

தகவல்:
லூர்து மற்றினா (மனைவி)
பிள்ளைகள்

## மரண அறிவித்தல்



### செல்வராசா அஜித்

சந்தையடி ஒழுங்கை தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், பொன்னாலை வீதி, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராசா அஜித் நேற்று (10.07.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வராசா மற்றும் திலகமலர் தம்பதியரின் அன்புப் புதல்வனும், சுதர்சன் (பிரான்ஸ்), டினோஸ் (லண்டன்), நிஷாந்தன் (RDC), பிரதாப் ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்வி (பிரான்ஸ்) யின் அன்பு மைத்துனரும், திஷானின் (பிரான்ஸ்), அன்புச் சித்தப்பாவும், காலஞ்சென்றவர்களான இளையவி -தெய்வானை, கதிரவேலு மற்றும், சீதையம்மாவின் அன்புப் பேரனும், சற்குணராசா, இறஞ்சிதமலர், யோகமலர், சொர்ணமலர் (டென்மார்க்), ஜீவமலர் ஆகியோரின் பெறாமகனும், இரத்தினம், செல்லமணி, இராசமணி, தங்கமணி காலஞ்சென்ற மோகனராசா மற்றும் ராசன் (பிரான்ஸ்), பிரகாஷ் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.07.2014) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொன்னாலை வீதி, மானிப்பாய்

தகவல்: குடும்பத்தினர்.

## தொடர்ச்சிகள்

### மஹிந்தவின்

ஆஸ்திரேலியா நோக்கிப் பயணிக்கின்றனர். ஆனால், புதன்கிழமை யாழ்ப்பாணத்திற்கு இரகசியப்பயணம் மேற்கொண்டு சென்ற ஆஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் ஸ்கொட் மொரிசன் அங்கு மக்கள் பிரதிநிதிகள் எவரையும் சந்தித்து அகதிகள் விடயம் தொடர்பில் கலந்துரையாடவில்லை."

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் குற்றம்சாட்டியுள்ளார்.

மஹிந்த அரசின் காட்டாட்சிக்கு ஆஸ்திரேலிய அரசும் ஒத்துழைக்கின்றதா என்றும் அவர் சீற்றத்துடன் கேள்வியெழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கொழும்புக்கு நேற்றுமுன்தினம் விஜயம் செய்த ஆஸ்திரேலிய குடிவரவு மற்றும் எல்லைப் பாதுகாப்பு அமைச்சர் ஸ்கொட் மொரிசன் அன்று மாலை யாழ்ப்பாணத்துக்கும் சென்று திரும்பியுள்ளார். யாழ். விஜயத்தின் போது அங்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனையோ, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்களையோ அல்லது புத்திஜீவிகள், பொது மக்களையோ சந்திக்கவில்லை. முன்னாள் இராணுவ அதிகாரியும் தற்போதைய வடக்கு மாகாண ஆளுநருமான ஜி.ஏ.சந்திரசிறியை மாத்திரம் அவர் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார். இவரின் யாழ். விஜயம் இரகசியமாக இடம்பெற்றுள்ளது.

புதன்கிழமை இந்த விஜயத்துக்கு முன்பதாக அவர் ஆஸ்திரேலியாவின் நன்கொடையாக இரண்டு கரையோர ரோந்துப் படகுகளை கொழும்பில் வைத்து இலங்கை ஜனாதிபதி மஹிந்தவிடம் கையளித்துள்ளார். அகதிகளின் சட்ட விரோத கடல் பயணம் மற்றும் கரையோர பாதுகாப்புக்காக இந்தப் படகுகளை அவர் இலங்கை ஜனாதிபதியிடம் உத்தியோகபூர்வமாகக் கையளித்துள்ளார்.

உண்மையில் அவர் தனது யாழ். விஜயத்தின்போது மக்கள் ஏன் உயிரைப் பணயம் வைத்து படகுகளில் சட்ட விரோதமாக ஆஸ்திரேலியா வருகின்றார்கள் என்பதனை மக்கள் பிரதிநிதிகளிடம் கேட்டிருக்கவேண்டும். ஆனால், அவர் அவ்வாறு செய்ய வில்லை.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசினதும், அதன் படைகளினதும் அட்டூழியங்களினால் தான் உயிருக்குப்பயந்து இலங்கையிலிருந்து ஆஸ்திரேலியாவுக்கு படகுகள் மூலம் அகதிகளாக மக்கள் செல் கின்றனர்.

அதிகளவான மக்கள் யாழ். மாவட்டத்திலிருந்தே இவ்வாறு ஆஸ்திரேலியா நோக்கிப் பயணிக்கின்றனர். ஆனால், புதன்கிழமை யாழ்ப்பாணத்திற்கு இரகசியப் பயணம் மேற்கொண்டு சென்ற ஆஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் ஸ்கொட் மொரி சன் அங்கு மக்கள் பிரதிநிதிகள் எவரையும் சந்தித்து அகதிகள் விடயம் தொடர்பில் கலந்துரையாடவில்லை.

மஹிந்த அரசின் காட்டாட்சிக்கு ஆஸ்திரேலிய அரசும் ஒத்துழைக்கின்றதா என்ற கேள்வி அந்நாட்டு குடிவரவு அமைச்சரின் யாழ். இரகசியப் பயணத்தின் பின்னர் எழுந்துள்ளது" - என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ்பிரேமச்சந்திரன் கூறினார்.

### டெங்கு

யாழ்.மாவட்டத்தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பிலான முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடல் யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று மாலை இடம்பெற்றது.

யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம்அருமைநாயகம்தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில், யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சிமன்றங்களின் தவிசாளர்கள், பிரதேச சபைச் செயலாளர்கள், சுகாதார வைத்திய அதிகாரி, பொதுச்சுகாதார பரிசோதகர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது டெங்கு ஒழிப்பு வாரத்தில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயப்பட்டது. யாழ். மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கால்வாய்கள் துப்புரவு செய்யப்படாமல் இருப்பது தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டது. தொழிலாளர்கள் விடுமுறையில் செல்வதனாலேயே அவற்றைத் துப்பரவு செய்வதில் தாமதமான நிலைமை இருப்பதாக, சுகாதார வைத்திய அதிகாரியினால் பதிலளிக்கப்பட்டுள்ளது. ஆனால் யாழ்.மாநகர சபை முதல்வரோ அல்லது ஆணையாளரோ கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

மேலும் கரவெட்டி, பருத்தித்துறை பிரதேசங்களிலேயே அதிகளவு டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும், அதற்கு அடுத்தபடியாக தற்போது சாவகச்சேரி, உடுவில் பிரதேச செயலாளர் பிரிவிலேயே அதிகளவு டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பிரதேசங்களில் விரைவாக, டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

### இராணுவ

கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

பாதுகாப்பு அமைச்சும், இராணுவமும் பொதுமக்களின்வாழ்க்கையின் எல்லா பகுதிகளிலும் தலையிட்டு கொண்டிருக்கின்றன. இந்த நிலைமை தெற்குக்கும் வரும் என்று நாம் எச்சரிக்கை விடுத்தோம். ஆனால் அதை எவரும் பொருட்டாக எடுக்கவில்லை. இப்போது முழு அளவில் எல்லா இடங்களிலும் இராணுவபிரசன்னம் வந்து விட்டது. கழிவகற்றல் சீராக இடம்பெறுகிறதா, வீதி சரியாக திருத்தப்படுகின்றதா, இந்த இடத்தில் யார் வாழ்கின்றார்கள்? போன்ற எல்லா விடயங்களையும் ஆராயும் நபர்களாக இராணுவத்தினர் இருக்கின்றனர். நான் சொன்ன இராணுவ ஆக்கிரமிப்புகள் விசேடமாக வடக்கில் இருக்கின்றன. கிழக்கிலும் இந்த நிலைமை தொடர்கிறது. ஆகவே அப்படியான சூழ் நிலையில் இருந்து மக்கள் தப்பியோட நினைப்பது ஒரு விசித்திரமான விடயம் அல்ல. அதனால் தான் மக்கள் நாட்டை விட்டு ஓடுகின்றனர் - என்றார். (ஐ-5)

### முல்லை

ளர் இல்லாத நிலையில் துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர்திருமதி வெளிற்றன் மாலினி பதில் கடமையாற்றிவந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-102)

### பாடசாலை

லட்சம் ரூபா பெறுமதியான 3 ஆள்பிணையில் விடுவித்தது. வழக்கு ஓகஸ்ட் மாதம் 21 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

கடந்த மாதம் 26 ஆம் திகதி குறித்த கல்லூரி முன்பாக வரையப்பட்ட மஞ்சள் கோட்டை அண்மித்து மாணவன்மீது பஸ் மோதியது. தலையில் படுகாயமடைந்து வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட சிறிது நேரத்தில் மாணவன் உயிரிழந்தான். சுன்னாகம் சுப்பிரமணியம் வீதியைச் சேர்ந்த அலோசியஸ் வின்சன் மனோராஸ் அன்ரன் (வயது-16) என்ற மாணவனே உயிரிழந்தான் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

### ஹன்ரர்

வாகனம் ஒன்று வாங்கித் தருமாறு குறித்த இளைஞன் தனது தாயாரிடம் கேட்டுள்ளார். தாயார் அதனை வாங்கிக் கொடுக்கவில்லை.

இந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை காலை வீட்டை விட்டுப் புறப்பட்ட அவர் அன்று பிற்பகல் வீட்டுக்குச் சென்று அங்கிருந்த மண்ணெண்ணையை எடுத்து தனக்குத் தானே ஊற்றி தீ மூட்டியுள்ளார்.

தீக்காயங்களுக்கு உள்ளான அவரை மீட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர் உறவினர்கள். எனினும் சிகிச்சை பயனளிக்காது நேற்றுமுன்தினம் பிற்பகல் அவர் உயிரிழந்தார். விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணை மேற்கொண்டார். (ஐ-4)

### யாழில்

பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

முதற்கட்டமாக ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த நடைமுறை ஏனைய தனியார் பஸ்களிலும் விரை வில் அறிமுகப்படுத்தப்படும் என்று தனியார் பஸ்சங்கத் தலைவர் பொ.கெங்காதரன் தெரிவித்துள்ளார். (ஐ-14)

### மட்டு

தற்போது இங்கு நிலவும் கடும் வெப்பம் காரணமாக நீர் நிலைகளைத் தேடி காட்டு யானைகள் கிராமங்களுக்குள் படையெடுத்து வருகின்றன. முன்னர் இரவு வேளைகளில் மட்டும் வரும் காட்டு யானைகள் தற்போது பகல் நேரங்களிலும் கிராமங்களுக்குள் நுழைகின்றன.

குறிப்பாக பாடசாலை நேரத்தில் பாடசாலை வளாகங்களுக்குள்ளும் கூட்டமாக நுழைகின்றன. அதனால் மாணவர்களது கல்வி பாதிப்படைந்துள்ளது. அடுத்த மாதம் க.பொ.த உயர்தரப்பரீட்சை, ஐந்தாம் தர புலமைப்பரீட்சை என்பவற்றுக்கு முகங்கொடுக்கவுள்ள மாணவர்களும் காட்டு யானைகளின் அட்டகாசத்தால் பரீட்சைக்குத் தயாராக முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் - என்று அவர்கள் தெரிவித்தனர். (ஐ-10)

### வடக்கின்

13.6 கிலோமீற்றர், நாவற்குழி - கேரதீவு - மன்னார் பிரதான வீதியில் 90.6 கிலோமீற்றர், புத்தளம் - மறிச்சுக்கட்டி - மன்னார் பிரதான வீதியில் 122 கிலோமீற்றர், பரந்தன் - கரைச்சி - முல்லைத்தீவு பிரதான வீதியில் 52.1 கிலோ மீற்றர், புளியங்குளம் - நெடுங்கேணி - ஒட்டுசுட்டான் - புதுக்குடியிருப்பு பிரதான வீதியில் 50 கிலோ மீற்றர்,

மானிப்பாய் - கைதடி பிரதான வீதியில் 13.6 கிலோமீற்றர், பரந்தன் - பூநகரி பிரதான வீதியல் 25.9 கிலோமீற்றர், நாவற்குழி - சங்குப்பிட்டி வீதியில் 17.2 கிலோமீற்றர், மாங்குளம் - வெள்ளாங்குளம் - முல்லைத்தீவு பிரதான வீதியில் 50 கிலோமீற்றர், வல்லை - தெல்லிப்பழை - அராலி பிரதான வீதியில்27 கிலோமீற்றர், முல்லைத்தீவு - புல்மோட்டை வீதியில் 42.4 கிலோமீற்றர் உள்ளடங்கலாக 707.9 கிலோ மீற்றர் வீதிகள் புனரமைக்கப்பட்டு, பணிகள் யாவும் முடிவுறுத்தப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் - பண்ணை - ஊர்காவற்றுறைவீதியில் 20.3 கிலோமீற்றர் வரையான பகுதியில் தற்போது புனரமைப்பு பணிகள் இடம்பெற்று வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-5)

### தென்னாபிரிக்க

யின் தலைவருமான அநுர குமார திஸாநாயக்க கேள்விகளை எழுப்பினார்.

இவற்றுக்குப் பதிலளிக்கையிலேயே வெளிவிவகாரப் பிரதியமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்கஎழுப்பியவினாக்களும் அவற்றுக்குப் பிரதி வெளி விவகார அமைச்சர் நியோமல் பெரேரா வழங்கிய பதில்களும் வருமாறு:-

கே: இலங்கையில் தேசியப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வதற்கான சர்வதேச மத்தியஸ்தராக ரமபோஷவையோ அல்லது தென்னாபிரிக்க அரசையோ ஈடுபடுத்திக் கொள்ள அரசு எதிர்பார்க்கிறதா?

ப: இல்லை.

கே: இவ்விஜயத்தின்போது அவர் சந்தித்த நபர்கள் மற்றும் அமைப்புகள்?

ப: ஜனாதிபதி, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, எதிர்க்கட் சித் தலைவர், சம்பந்தன் உள்ளிட்ட கூட்டமைப்புப் பிரதி நிதிகள், வடக்கு முதல்வர், வடக்கு ஆளுநர் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

கே: அரசின் அழைப்பின் பிரகாரமா தென்னாபிரிக்க உப ஜனாதிபதி சிறில் ரமபோஷ இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டார்?

ப: ஆம்.

2013ஆம் ஆண்டு நவம்பரில் நடைபெற்ற பொதுநல வாய மாநாட்டில் பங்கேற்க வந்திருந்த தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜேக்கப் சூமோவுக்கும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குமிடையில் சந்திப்பொன்று நடைபெற்றது.

இதன்போது தென்னாபிரிக்காவின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு (TRC) நடவடிக்கையிலிருந்து இலங்கை கற்றுக்கொள்ளக்கூடிய பாடங்களை அறிந்துகொள்வதில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆர்வத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

அதன்பின்னரே, உண்மை மற்றும்நல்லிணக்க ஆணைக்குழுநடவடிக்கையில் தென்னாபிரிக்காவின் அனுபவத்தைப் பகிர்ந்துகொள்வதற்கு இலங்கைக்கான சிறப்புத் தூதுவராக தென்னாபிரிக்காவின் ஜனாதிபதியால் உப ஜனாதிபதி சிறில் ரமபோஷ நியமிக்கப்பட்டார். எனவே, நாட்டின் சமூக மற்றும் கலாசார விடயங்களைக் கருத்திற் கொண்டு தென்னாபிரிக்காவின் ஆணைக்குழுவை (TRC) ஒத்ததொரு பொறிமுறையை பின்பற்றுவதற்கான சாத்தியங்களை ஆராயும் பொருட்டு நல்லிணக்க ஆணைக்குழுவின் அபிப்பிராயங்களைப் பகிர்வதற்காகவே அவர் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டார். அவ்வாறானதொரு உள்நாட்டு நல்லிணக்க செயன்முறையின் வெற்றிக்கு அனைத்துத் தரப்பினரும் பங்கேற்க வேண்டியது அவசியம். (ற-சி)

### அரசிடம்

கள் தொடர்பில் அரசியல் தீர்வு ஒன்றை அடைவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கின்றது. ஆனால் அதனை விடப் பெரும் பொறுப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இருக்கின்றது. எனவே தீர்வு விடயத்தில் கூட்டமைப்பே தனது நிலைப்பாட்டிலிருந்து இறங்கி வரவேண்டியுள்ளது.

கூட்டமைப்பே தனது நிலைப்பாட்டிலிருந்து இறங்கிவர முடியாது என்று கூறிக்கொண்டிருக்கையில் அனைத்து இன மக்கள் குறித்தும் பொறுப்புக் கூறக்கூடிய அரசு எவ்வாறு இறங்கிச் செல்வது?" என்று ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் கேள்வியெழுப்பியிருந்தார்.

இது தொடர்பில் வினவிய போதே சுரேஷ் பிரேமச்சந்திரன் மேற்கண்டவாறு காட்டமாகத் தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது,

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவுக் குழுவில் பங்கெடுக்காது என்று ஒரு போதும் சொல்லவில்லை. 31 பேரைக் கொண்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் 3 பேரைக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் என்ன செய்யமுடியும். அதிலும்ஆளுங் கட்சியைச் சேர்ந்த 19 பேர் இருக்கின்றார்கள். அவர்களில் பலர் சிங்கள இனவாதிகளாக இருக்கின்றனர். இப்படியிருக்கையில் நாம் எவ்வாறு தெரிவுக்குழுவில் பங்கெடுக்க முடியும்.

இலங்கை அரசுடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சு நடத்தத் தயாராக இருக்கின்றது. இந்தப் பேச்சில் இரு தரப்பும் எட்டும் முடிவை, நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் வைத்துப் பேசலாம். அதற்கு இந்த அரசு பயப்படுகின்றது. இவ்வாறு செய்தால் நியாயமான அரசியல் தீர்வு எட்டப்பட்டு விடும் என்று அஞ்சுகின்றது. எனவேதான் எங்களுடனான பேச்சுக்கு அரசு பின்னடித்து. நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்கெடுக்கவைத்து எம்மை தோற்கடிக்கப் பார்க்கின்றது.

எமக்குப் பிரச்சினையாக இருப்பதே சிங்களப் பெரும்பான்மையினவாதம்தான். அதே பிரச்சினைதான் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிலும் இருக்கின்றது. நாட்டின் இனப் பிரச்சினையைத்தீர்க்க வேண்டிய முழுப் பொறுப்பும் அந்த அரசுக்கு உரியது.

நாங்கள் இந்த அரசிடம் பிச்சை கேட்கவில்லை. எமது தனித்துவமான தேசிய இனத்துக்குரிய நிரந்தர அரசியல் தீர்வையே கோரி நிற்கின்றோம். அதனைக் கூட தீர்த்துவைக்க தகுதியற்ற அரசாகவே உள்ளது"- என்று தெரிவித்தார். (ற-5)

### வட மாகாண

அவரது பதவிக் காலம் நாளையுடன் முடிவடைகின்றது.

இந்தநிலையில் புதிய ஆளுநர் ஒருவர் தற்போதைக்கு நியமிக்கப்பட மாட்டார் என்றும், ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியே பதவியில் தொடர்வார் என்றும் தெரியவருகின்றது. ஆயினும் தற்போதைய ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி மீண்டும் 5 வருடங்கள் ஆளுநராகப் பதவியில் நீடிக்க மாட்டார் என்றும் ஆகக் குறைந்தது 6 மாதங்களே அவருக்குப் பதவி நீடிப்பு வழங்கப்படும் என்றும் கூறப்படுகின்றது.

அதேவேளை, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுக்கும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையே கடந்த ஜனவரி மாதம் 2 ஆம் திகதி நடைபெற்ற சந்திப்பில், முன்னாள் இராணுவ அதிகாரியான ஜி.ஏ.சந்திரசிறியின் பதவிக் காலம் முடிவடைந்ததும், அவருக்கு எதுவித பதவி நீடிப்பும் வழங்கப்பட மாட்டாது என்றும், சிவில் ஆளுநர் ஒருவர் நியமிக்கப்படுவார் என்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, முதலமைச்சரிடம் உறுதிமொழி வழங்கியிருந்தார். ஆனால் தற்போது அந்த உறுதிமொழியைப் புறந்தள்ளி ஆளுநரின் பதவிக்காலத்தை நீடிக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. (ற-5)

### குறிகாட்டுவானில்

நயினாதீவு விகாரைக்குச் சொந்தமான படகு விதிமுறைகளை மீறிப் பயணிகளை ஏற்றியது என்று குற்றஞ்சாட்டியே படகு உரிமையாளர்கள் இந்தப் புறக்கணிப்பை மேற்கொண்டனர்.

இதனால் நயினாதீவுக்கு செல்வதற்கு வந்த மூவாயிரத்துக்கு மேற்பட்ட பயணிகள், மூன்று மணிநேரமாக பெருஞ் சிரமங்களை எதிர் கொண்டனர்.

சம்பவம் அறிந்து அவ்விடத்துக்குச் சென்ற வேலணைப் பிரதேச சபைத் தலைவர், இரு தரப்பினருடனும் கலந்துரையாடினார். இதன்போது, ஆறு படகுகள் சேவையில் ஈடுபட்ட பின்னர், விகாரைக்குச் சொந்தமான படகை சேவையில் ஈடுபடுத்தலாம் என்றும், இது சுழற்சிமுறையில்நடைமுறைப் படுத்தப்படும் என்றும் அதில் முடிவெடுக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து படகுச் சேவைகள் வழமைக்கு வந்தன. (ஐ-86-7)

### இந்தியாவுக்கும்

றும், அதற்குப் பதிலளிக்கும் போதே ரமபோஷ மேற்கண்டவாறு தெரிவித்தார் என்றும் தெரியவருகின்றது. பேச்சின் முன்னேற்றங்கள் குறித்து, இந்தியாவுக்குத் தகவல்கள் தெரிவிக்கப்படும் என்று, தென்னாபிரிக்கத் துணை ஜனாதிபதி சிறில் ரமபோஷ உறுதி அளித்துள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

இந்தச் சந்திப்புகளின்போது, இந்தியாவும், மேற்குலகமும், முன்னெடுக்கும் முயற்சிகளுக்கு தென்னாபிரிக்காவின் முயற்சிகள் பாதிப்பை ஏற்படுத்தக் கூடாது என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றிடமும், இந்திய ஊடகம் ஒன்றிடமும் உறுதிப்படுத்தியுள்ளார். (ற-5)

## மலேசியாவில் கைதாகிய நால்வர் நாடு கடத்தப்படும் அபாயத்தில்

கோலாலம்பூர், ஜூலை11

மலேசியாவில் அண்மையில் கைது செய்யப்பட்ட நான்கு இலங்கையர்கள், இலங்கைக்கு நாடுகடத்தப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

மலேசியாவில் இயங்கும் மனித உரிமைகள் அமைப்பான சுூரம் ரக்யார்ட் மலேசியாவின் அறிக்கை ஒன்றில் இந்த தகவல் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஏற்கனவே கடந்த மே மாதம் கைது செய்யப்பட்ட மூன்று இலங்கையர்கள் உடனடியாக இலங்கைக்கு நாடு கடத்தப் பட்டிருந்தனர்.

அதேபோன்ற நிலைமையே தற்போது கைதாகியுள்ள 4 பேருக்கும் ஏற்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப் புடன் தொடர்பு கொண் டிருந் ததாக தெரிவித்து குறித்த நான்கு பேரும் கடந்த 4 ஆம் திகதி கைது செய்யப்பட் டனர். (வ)

## வெடி விபத்தில் ஒருவர் காயம்

கொழும்பு, ஜூலை 11

மீரிகம பொலிஸ் நிலையத்திற்குள் பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் வசமிருந்த துப்பாக்கி தவறுதலாக வெடித்ததால் ஒருவர் காயமடைந்துள்ளார்.

துப்பாக்கியின் ரவைகளை சோதனையிட முற்பட்ட சந்தர்ப்பத்தில் இவ்வாறு இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன தெரிவித்தார். (ற)



யாழ்ப்பாணத்துக்கு மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள ரயில் சேவைக்கான வீதிப் போக்குவரத்து ஏற்பாடுகளில் தற்போது வீதி தடைப் போக்குவரத்து கருவிகள் அமைக்கும் பணிகள் துரிதமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. (வ-21)

## ஆசிரியர் பயிற்சிக்கு 2 ஆம் கட்டமாக 590 பேர்

### கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக்கு தெரிவு

அச்சுவேலி, ஜூலை 11

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் 2014-2015 கல்வி ஆண்டின் இரண்டாம் கட்ட ஆசிரியர் பயிற்சிக்கு 590 ஆசிரியர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கான பயிற்சிகள் எதிர்வரும் 15 ஆம் திகதி ஆரம்பமாகின்றன. அனுமதி தொடர்பான அழைப்புக் கடிதங்கள் சம்பந்தப்பட்டவர்களின் முகவரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் கட்ட ஆசிரியர் பயிற்சிக்கு அனுமதிக்கப்பட்ட ஆசிரியர்கள் மற்றும் பாடநெறிகளின் விவரம் வருமாறு:-

ஆரம்பக்கல்வி பாட நெறிக்கு 286 ஆசிரியர்களும், உடற்கல்வி பாடநெறிக்கு 116 ஆசிரியர்களும், தமிழ்மொழி பாடநெறிக்கு 40 ஆசிரியர்களும், வர்த்தக பாடநெறிக்கு 35 ஆசிரியர்களும், சமூகவியல் பாடநெறிக்கு 35 ஆசிரியர்களும், றோமன் கத்தோலிக்க சமயம் பாடநெறிக்கு 24 ஆசிரியர்களும், இந்து சமய பாடநெறிக்கு 14 ஆசிரியர்களும், கணித பாடநெறிக்கு 11 ஆசிரியர்களும், விஞ்ஞான பாடநெறிக்கு 09 ஆசிரியர்களும், சங்கீதம், நடனம் பாடநெறிகளுக்கு தலா 07 ஆசிரியர்களும், சித்திர பாடநெறிக்கு 03 ஆசிரியர்களும் மனைப்பொருளியல் பாடநெறிக்கு ஒருவரும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் பயிற்சி பெறுவதற்கு விண்ணப்பித்த 640

**தகுதிகாண் ஆசிரியர்களாக நிரந்தர நியமனம் பெற்று இலங்கை ஆசிரியர் சேவை 3 : II இல் உள்ளீர்ப்புச் செய்யப்பட்டவர்களும் இதில் அடங்குவர்.**

ஆசிரியர்களில், ஆங்கில பாடநெறிக்கு அனுமதி பெறும் 50 ஆசிரியர்களும், மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையில் இணைத்துக் கொள்ளப் படவுள்ளனர். ஏனைய 590 பேரும் கோப்பாயில் அனுமதி பெற்றுள்ளனர்.

அனுமதிக்கப்பட்டவர்களில் 450 க்கும் மேற்பட்டவர்கள் வன்னிப் பெருநிலப் பரப்பு பாடசாலைகளில் ஆசிரியர் உதவியாளர்களாகக் கடமை புரிந்து வந்தவர்கள். ஏனையோர் தகுதிகாண் ஆசிரியர்களாக நிரந்தர நியமனம் பெற்று இலங்கை ஆசிரியர் சேவை 3: II இல் உள்ளீர்ப்புச் செய்யப் பட்டவர்கள். இவர்களுக்கான ஆசிரியர் பயிற்சி இரண்டு வருடங்களைக் கொண்டது. ஆசிரியர் உதவியாளர்களாக நியமிக்கப்பட்டவர்கள் ஆசிரியர் பயிற்சி நிறைவு பெற்ற பின்னர்தான் ஆசிரியர் சேவையில் உள்ளீர்ப்புச் செய்யப்பட்டு நிரந்தர நியமனம் பெறவுள்ளனர். (வ-11)

## கடித்த பாம்புடன் சென்றார் இளைஞன்



யாழ்ப்பாணம், ஜூலை 11

புடையன் பாம்பால் கடியுண்ட இளைஞன் தன்னைத் தீண்டிய பாம்பையும் பிடித்துக் கொண்டு மருத்துவமனைக்குச் சென்றார். மேலதிக சிகிச்சைக்காக அவர் யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

வரணி வடக்கில் நேற்றுக் காலை 6 மணியளவில் சம்பவம் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த இராசேந்திரன் விஜிதரன் (வயது-23) என்பவரே பாம்பினால் கடியுண்டவராவார். வீட்டிலிருந்து வெளியே வந்தபோது வீட்டு வளவினுள் இருந்த கண்ணாடிப் புடையன் பாம்பு அவரது காலில் கடித்துள்ளது.

அதனையடுத்து குறித்த பாம்பையும் பிடித்துக் கொண்டு சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்குச் சிகிச்சைக்காகச் சென்றார். (வ-4-9-106)

# ஆழ்கடல் திருட்டுகளில் ஈடுபடுகிறதாம் ஆஸி.

### *குற்றஞ்சாட்டுகிறார் அந்நாட்டின் முன்னாள் பிரதமர்*

இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்கள் 150 இற்கும் மேற்பட்டோரை ஆஸ்திரேலியா கடலில் தடுத்து வைத்துள்ளமையானது, ஆழ்கடலில் திருட்டுக்கள் என்று வகைப் படுத்தப்படும் என்கிறார் லிபரல் கட்சியைச் சேர்ந்த ஆஸ்திரேலியாவின் முன்னாள் பிரதமர் மெல்க்கு லோம் பிரேஸர்.

சர்வதேசக் கடலில் பயணித்தவர்களை ஆஸ்திரேலியாவின் சுங்கக் கப்பலுக்கு மாற்றியமை சர்வதேசச் சட்டத்தை மீறும்செயல். அதனைத் திருட்டு என்றே விவரிக்க முடியும்

**அண்மையில் ஆஸ்திரேலியாவுக்குச் சென்ற மேலும் 41 பயணிகள் அங்கிருந்து திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் நாட்டில் இருந்து சட்டவிரோதமாக வெளியேறியமைக்காக தண்டிக்கப்பட வேண்டும்**

என்றும் அவர் கூறியுள்ளார்.

சிட்னியில் உள்ள சர்வதேச கொள்கைகளுக்கான லோய் நிறுவனத்தில் உரையாற்றிய போதே ஆஸ்திரேலிய முன்னாள் பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் ஆஸ்திரேலியாவுக்குச் சென்ற மேலும் 41 பயணிகள் அங்கிருந்து திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் நாட்டில் இருந்து சட்டவிரோதமாக வெளியேறியமைக்காக தண்டிக்கப்பட வேண்டும் என்றும் இலங்கை பொலிஸ் மா அதிபர் கூறியுள்ளார்.

இலங்கையின் பொலிஸ் மா அதிபர், அவர்கள் அனைவரும் மேம்பட்ட சிறைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

மேம்பட்ட சிறை என்றால் என்ன, சித்திரவதைகளுக்கு புதிய பெயர் இருக்கின்றதா?. இந்த வார்த்தை இனிப்பது போல் இருக்கும் என்றும் பிரேஸர் குறிப்பிட்டுள்ளார்.

ஆஸ்திரேலியாவின் அபோட் அரசாங்கம் கடலில் வைத்து பிடித்த 153 பேர் தற்போது எங்கு உள்ளனர் என்பதை வெளியிடவில்லை. மேல் நீதி மன்றத்தின் தீர்ப்புக்காக அரசு காத்திருப்பதாகக் கூறப்படுகிறது. (வ)

# பிரிட்டனின் அகதித் தஞ்சப் பரிசீலிப்பு முறை தவறு

### அந்த நாட்டு நீதிமன்றம் தீர்ப்பு

லண்டன், ஜூலை.11

பிரிட்டனுக்கு அகதிகளாக வருவோரை தடுத்து வைத்து அவசரமாக அடைக்கலக் கோரிக்கையைப் பரிசீலிக்கும் முறையானது சட்டரீதியற்றது என்று பிரிட்டிஷ் மேல் நீதிமன்றம் ஒன்று தீர்ப்பளித் துள்ளது.

இந்தத் தீர்ப்பு நேற்று முன்தினம் அளிக்கப்பட்டதாக இணையத்தளம் ஒன்று குறிப்பிட்டுள்ளது.

இந்த நடை முறைக்கு எதிராக அமைப்பு ஒன்று மனுவொன்றை தாக்கல் செய்திருந்தது.

இந்த நடைமுறையின்மூலம்

**தடுத்து வைத்து அகதிக் கோரிக்கையை பரிசீலிக் கும் முறையானது, ஒரு நீதிமன்ற விசாரணையைப் போன்று அமைந்துள்ளது**

அடைக்கலம் தேடிவரும் பல அகதிகள் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் அவர்களின் சொந்த நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுவதாக மனுதாரர் தரப்பு வாதிட்டது.

பிரிட்டன் அரசு பல வருடங்களாக இந்த நடைமுறையைப் பின்பற்றி வருகிறது.

இதன்காரணமாக சொந்த நாடுகளுக்கு திருப்பியனுப்பப் படும் அகதிகள் அந்த நாடுகளில் சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்படுவதாக மனுதாரர் தரப்பு சுட்டிக் காட்டியது.

அதனையடுத்து தீர்ப்பை வழங்கிய நீதிபதி ஓசெலி, குறித்த நடைமுறை நியாயமற்றது என்று குறிப்பிட்டார்.

இதேவேளை தடுத்து வைத்து அகதிக் கோரிக்கையைப் பரிசீலிக்கும் முறையானது, ஒரு நீதிமன்ற விசாரணையை போன்று அமைந்துள்ளது என்று குறித்த நடைமுறைக்குள் இருந்து விடுதலை செய்யப்பட்ட இலங்கையின் ராஜ் என்ற அகதி குறிப்பிட்டதாக அந்த இணையத் தளம் குறிப்பிட்டுள்ளது. (வ)

# அரச சார்பற்ற அமைப்புக்கள் பாதுகாப்பு அமைச்சில் பதிவு

### *கட்டாயம் என அறிவிப்பு*

அரச சார்பற்ற அமைப்புக்களை பாது காப்பு அமைச்சின் கீழ் பதிவுசெய்வதை கட்டாயமாக்கும் புதிய சட்டமூலத்தை கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளைஅரசுமேற்கொண்டுள்ளது. அரச சார்பற்ற அமைப்புக்களுக்கான தேசிய செயலகத்தின் இயக்குநர் சமன் தஸநாயக்க இதனை தெரிவித்துள்ளதுடன் இந்தப் புதிய சட்டத்தின் கீழ் பாது காப்பு அமைச்சின் கீழ் பதிவுசெய்யாத அனைத்து அரச சார்பற்ற அமைப்புக்களின் வங்கிக்கணக்குகளும் முடக்கப்படும். வெளிநாட்டு நிதியைப் பெற்றுக் கொள்வதும் தடைசெய்யப்படும் என தெரிவித்துள்ளார். அரச சார்பற்ற அமைப்புக்கள் செய்தியாளர் மாநாடு, செயலமர்வு போன்றவற்றை நடத்துவதற்கு தடைவிதிக்கப்பட்டதன் தொடர்ச்சியாக இந்த அறிவிப்பு வெளியாவது குறிப்பிடத்தக்கது.

**இந்திய சாஸ்திரியார் வருகை**

யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்

ஓம் சக்தி அருள்வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்

**S.N குமாரசாமி**

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத் தடை, கல்வித் தடையா, குழந்தைப் பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா ? தொழில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா, வெளிநாடு செல்லத் தடையா? மன உளைச்சலா ?

எந்தப் பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்

(காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை)

இல. 296/7, கண்ணகி அம்மன் கோயில் ஒழுங்கை, கோப்பாய் வீதி, உரும்பிராய்,யாழ்ப்பாணம்.
(உரும்பிராய் சந்திக்கு அருகில்)

T.P 072 681 6681, 072 681 6691

NEW SCIENCE WORLD
Brown Road, Jaffna.

க.பொ.த (உ/த) முன்னோடிப் பரீட்சை-2014

**உயிரியல் I**

காலம்: 14.07.2014 திங்கட்கிழமை.
நேரம் : காலை 8.30 – 10.30மணி
❖ தொடர்ந்து கருத்தரங்கு இடம்பெறும்.

**உயிரியல் II**

காலம்: 15.07.2014 செவ்வாய்க்கிழமை.
நேரம் : காலை 8.30 – 11.30மணி
❖ தொடர்ந்து கருத்தரங்கு இடம்பெறும்.

ஆசிரியர்கள்
➢ S. பொன்திவாகரன்
➢ V. உமாசங்கர்

31 ஆம் நாள் நினைவலைகளும் நன்றி நவிலலும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 10.06.2014 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர் **தாமோதரம்பிள்ளை இராசேஸ்வரன்**

(B.Sc.Dip.inEd)

[இளைப்பாறிய விஞ்ஞான பட்டதாரி ஆசிரியரும் முன்னாள் இயக்குநர் சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனம் (INS-GD)

எமது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய குடும்பத் தலைவர் அமரர் தாமோதரம்பிள்ளை இராசேஸ்வரன் அவர்கள்

இவ்வுலகில் வாழ்ந்த போது அவரை அன்போடு நேசித்துப் பழகியோருக்கும், அவர் அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு உடனடியாக வந்து உரிய உதவிகள் செய்தவர்களுக்கும், அவரின் இறுதிக்கிரியைகளில் பெருந்திரளாகக் கலந்து கொண்டவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டோருக்கும், மலர் வளையங்கள் சாத்தியோருக்கும், தொடர்புச்சாதனங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்துத் துயர் பகிர்ந்தவர்களுக்கும், இறுதிக்கிரியைகளின் போது மயானம் வரை வந்து ஆறுதல் அளித்தோருக்கும் மற்றும் எல்லா வழிகளிலும் எல்லா உதவிகளும் புரிந்து எமக்கு அமைதியைத் தந்தவர்களுக்கும் நாம் எமது காலத்தால் அழியாத நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்த தகவலை வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ் கிடைக்கத் தவறிய அனைவரையும் அன்புடன் ஏற்று வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

வீட்டுக்கிருத்தியக்கிரியையும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையும் நாளை (12.07.2014) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையடி,
யாழ். - காரைநகர் பிரதான வீதி,
மூளாய், சுழிபுரம்.

இ.பொன்மலர் [மனைவி]
மற்றும் குடும்பத்தினர்.

# பொட்டம்மானின் சகாவுக்கு அ. அட்டை வழங்கிய ஐ.நாவை எப்படி நம்புவது?

### *சர்வதேச விசாரணை குறித்து பிரதமர் காட்டம்*

கொழும்பு, ஜூலை 11

பொட்டம்மானின் நெருங்கிய சகாவுக்கு தமது அடையாள அட்டையை வழங்கியுள்ள ஐ.நாவால் இலங்கையில் எப்படி நீதியான விசாரணையை நடத்தமுடியும் எனக் கேள்வி எழுப்பிய பிரதமர் டி.எம்.ஜயரட்ண, இலங்கை மீதான ஐ.நா. விசாரணை, அரசுக்கு எதிரான பெரும் சூழ்ச்சி என்றும் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற சட்டம் மற்றும் ஒழுங்கு தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றியபோது இதனைத் தெரிவித்த அவர், மேலும் தெரிவித்தவை வருமாறு:-

புலிகள் அமைப்பின் புலனாய்வுப் பிரிவுத் தலைவரான பொட்டம்மானின் நெருங்கிய சகா ஒருவருக்கு ஐ.நா. உயர்ஸ்தானிகர் காரியாலயத்தால் அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதே போன்று பல புலி உறுப்பினர்களுக்கும் ஐ.நாவால் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறு புலிகளுக்கு அடையாள அட்டை வழங்கிய ஐ.நாவை நாம் எப்படி நேர்மையானது என நம்பமுடியும்?

புலிகளின் தலைவர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் ஐ.நாவை இலங்கையில் விசாரணை நடத்த எப்படி அனுமதிக்கமுடியும்? அந்த விசாரணையில் எப்படி நீதி, நம்பகத்தன்மை இருக்கமுடியும்? ஐ.நா. விசாரணை எமக்கெதிரான சூழ்ச்சியாகும். இதை எதிர்க் கட்சிகள் புரிந்துகொள்ள வேண்டும். ஐ.நா. விசாரணையை அனுமதிக்கமுடியாது. பாகிஸ்தானில், ஈராக்கில், கொங்கோவில் கடந்த ஒரு வாரத்தில் மட்டும் எத்தனை பேர் கொல்லப் பட்டுள்ளனர். அந்த வகையில் பார்த்தால் இலங்கை மிகச் சிறப்பான இடத்தில்தான் உள்ளது - என்றார்.

(ற-சி)

# தமிழ் கூட்டமைப்புடன் பேச்சு நடத்தத் தயார்

### *அரசின் பங்காளி ஹெல உறுமய தெரிவிப்பு*

சிறுபான்மையினரின் பிரச்சினைகள் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் எதிர்காலத்தில் பேச்சு நடத்தத் தயார் என அரசின் பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமய நேற்று தெரிவித்தது.

சிறிகொத்தவில் அமைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் ஜாதிக ஹெல உறுமயவினருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியினருக்குமிடையில் நேற்று காலை பேச்சு நடைபெற்றது. சுமார் ஒன்றரை மணித்தியாலங்களுக்கும் மேலாக நடைபெற்ற இச்சந்திப்பில், ஐ.தே.கவின் தலைவர் ரணில் விக்கிரம சிங்க, தலைமைத்துவ சபையின் தலைவர் கரு ஜயசூரிய மற்றும் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான விஜயதாஸ ராஜபக்ஷ உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

ஹெல உறுமய சார்பாக அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான அத்துரலிய ரத்தின தேரர் கலந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இச்சந்திப்பின் இறுதியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அத்துரலிய ரத்தின தேரர்,

"நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையை ஒழிப்பது, அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக ஐக்கியத் தேசியக் கட்சியுடன் இன்று (நேற்று) நடத்திய பேச்சு சுமுகமான முறையில் முடிவடைந்துள்ளது.

ஆகவே, எதிர்காலத்தில் எமது இந்தத் தீர்மானங்கள் மற்றும் நாட்டிலுள்ள அடிப் படைப் பிரச்சினைகள் தொர்பாக ஜே.வி.பி உள்ளிட்ட எதிர்க்கட்சிகளுடன் பேசத்தயார் என அவர் தெரிவித்தார்.

இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் பேச்சு நடத்தப்படுமா? என வினவியமைக்கு,

"ஆம். தற்போதைய சூழ்நிலையில் சிறுபான்மையினரின் எதிர்காலம் குறித்து தீர்மானிக்க வேண்டிய கட்டாயத்திலேயே நாம் அனைவரும் காணப்படுகின்றோம்.

ஆகவே, அம்மக்களின் தீர்வு விடயம் குறித்து கூட்டமைப்பினருடன் எதிர்காலத்தில் நாம் கலந்தாலோசிக்க தயாராகவே உள்ளோம்.

அதேபோன்று, உள்நாட்டுப் பிரச்சினைகளை சர்வதேச மட்டத்தில் கொண்டு செல்லாது கூட்டமைப்பினரும் எம்முடன் பேச்சு நடத்த முன்வர வேண்டும்.

இவ்வாறுநாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பாட்டால் மாத்திரமே சிறுபான்மையினரின் பிரச்சினைகளை தீர்க்க முடியும்." என்றார்.

**SLAS வகுப்புக்கள்**

இலங்கையில் 4 இடங்களில் இப்பரீட்சைக்காக வழிகாட்டும் யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு விரிவுரையாளர்களினால்

**யாழ்ப்பாணத்தில்**

யாழ்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு (யாழ். ஆஸ்பத்திரி வீதி கொமர் ஷல் வங்கியருகில்)

பிரிவு I
சனி,ஞாயிறு 1.00-5.00 மணி வரை

பிரிவு II
ஞாயிறு 9.00- 4.00 மணி வரை
(தூர இட பரீட்சார்த்திகளுக்கு)

பிரிவு III
திங்கள் முதல் வியாழன் வரை பி.ப. 5.00-7.00 மணி வரை

**வவுனியாவில்**

ஆரம்பம்: சனி (12.07)
காலை 9.00 மணி
G.Study Center
வைரவப்புளியங்குளம்
T.P 0770742649

**மன்னாரில்**

BCS College
HNB வங்கி முன் வீதி
ஆரம்பம்: ஞாயிறு (13.07)
காலை 9.00 மணி
T.P 0787928900

**வெள்ளவத்தையில்**

ஆரம்பம்: சனி (19.07)
காலை 9.00 மணி
Valakam Institue
தமிழ்ச் சங்கம்
T.P 0113150268

மேலதிக விவரங்களுக்கு
T.P 0754164564

நீங்காத நினைவில் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

"சீவியத்தில் நேசித்தோம் மரணத்திலும் மறவோம்"



அமரர்
**வஸ்தியாம்பிள்ளை சிறில்**

இன்முகத்துடன் எல்லோருடனும் பழகி யாவரையும் கவர்ந்து அனைவரினதும் இதயத்திலும் நிறைந்த அன்புத் தந்தையின் ஆன்ம ஈடேற்றத்திற்காக இறைவனை இடைவிடாமல் இறைஞ்சுகின்றோம்.

குடும்பத்தினர்
மானிப்பாய்.

**Best Result! CIMA @ MCS**



நேற்று வெளியான பெறுபேறுகளில் எமது மாணவர்கள் சிறந்தபெறுபேறுகளை பெற்றுள்ளார்கள் என்பதை தெரிவிப்பதில் பெருமிதம் கொள்கிறோம். Nov பரீட்சைக்கான விசேட பிரிவுகள் ஆரம்பமாகின்றன. மீள்பரீட்சாத்திகளுக்கு சிறப்பு சலுகை. புலமைப்பரிசிலிற்கும் மேலதிக விபரங்களிற்கும்

Type CIMA <Name> & send to 772395895

**MCS** யாழ் பல்கலைக்கழகம் அருகில் Listed College & Exam centre

Have you been unsuccessful in May 2014 diet?
**Join us to be Successful.**

CIMA

Course highlights
*A Special Catch-up program for the **Classes** you have missed so far
*100% syllabus Coverage
*Revision programe
*Regular mock exams
*Flexible time table

Special Discounts for Repeaters

For more details please visit
**Spectra Skills**
19, Stanley Road,
Peoples Bank 2nd Floor,
Jaffna
Tel:- 212221422 / 212221423

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11 .07.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# கேட்டவரம் அருளும் நயினைத் தாய்



அலைகடல் நடுவே வீற்றிருக்கும் அன்னை நாகபூஷணி அம்பாள் ஆலயம், அறுபத்திநான்கு சக்தி பீடங்களில் புவனேஸ்வரி பீடம் எனப் போற்றி வழிபடும் ஆலயமாகும். நாட்டின் பல பாகங்களிலிருந்தும், பக்தர்களின் யாத்திரைத் தலமாகவும், சிங்கள, பௌத்த மக்கள் கூட வந்து பத்தினி அம்மன் என வழிபடுவதையும், நாம் காணக் கூடியதாக உள்ளது. நயினாதீவுக்கு சமீபமாக அனலைதீவு எனும் ஓர் அழகிய தீவு உண்டு. அதன் தெற்குப் பகுதியில் புளியந்தீவு எனும் சிறிய தீவு உண்டு. அதில் பண்டைய காலம் தொட்டு நாகதம்பிரான் ஆலயம் எனும் ஆலயம் உள்ளது. அந்த ஆலயப் பகுதியில் இருந்து நாக பாம்பு ஒன்று நயினாதீவுக்கு பூக்கொண்டு வந்து பூசித்ததாக வரலாறுகள் கூறுகின்றன. நாகம் பூசித்து வழிபட்டமையால் நாகபூஷணி எனப் பெயர் வரக் காரணமாயிற்று. இதன் அடையாளச் சின்னமாக ஆலய வடக்குக் கடல் பகுதியில் இரு பெரிய கற்கள் காணப்படுகின்றன. இதில் ஒரு கல் பாம்பு சுற்றிய கல் எனவும் மற்றைய கல் கருடன் கல் எனவும் குறிப்பிடப்படுகின்றன. நாகபாம்பு அம்பாளுக்கு பூக் கொண்டு வந்த வேளை கருடனொன்று பாம்பை வழிமறித்து கல்லில் அமர்ந்து கொண்டதாகவும், பாம்பு மற்றைய கல்லில் சுற்றிக் கொண்டு இருந்ததாகவும் கூறப்படுகிறது. அந்த வழியால் கடல்மார்க்கமாக வந்த வணிகச் செட்டியார் அம்மனை வேண்டி வழிபட்டதாகவும், கருடன் பின்னர் பறந்து சென்றதாகவும் பாம்பு பின்னர் பூக்கொண்டு சென்றதாகவும் அறியக் கூடியதாக உள்ளது. பாம்பு சுற்றிய கல், கருடன் கல் என்பவற்றுக்கு பதினொராம் திருவிழாவன்று அருட்சின்ன வழிபாடு எனக் காலை விஷேட அபிஷேகம் நடைபெற்று வருகிறது. அந்த வேளைகளில் அந்தப் பகுதியின் மேல்ாக கருடன் வட்டமிட்டு பறப்பதை, பக்தர்கள் பலரும் பல வ்ருடங்களாகக் கண்டு மெய்சிலிர்க்கிறார்கள். ஆனந்தக் கூத்தாடுகிறார்கள். கண்டு வணங்குகிறார்கள். ஆலயத்தில் பக்தர்கள் வந்து தங்கி நின்று நாக தோஷ நிவர்த்தி செய்து வருகிறார்கள். அம்பாள் அவர்களுக்கு கேட்ட வரங்களை அள்ளிக் கொடுக்கிறாள். மற்றும் பௌர்ணமி தினங்கள் ஸ்ரீ சக்கர பூசை மாதா, மாதம் நடக்கிறது. இதில் திருமணமாகாத பெண்கள் திருமண நல்வாழ்வு வேண்டியும், திருமணமான பெண்கள் தாலிப்பாக்கியம் நிலைக்க அம்பாளை வேண்டியும் வழிபடுகிறார்கள். ஆலய கல்யாண மண்டபத்தில், உற்சவ காலம் தவிர்ந்த ஏனைய நாள்களில் நித்திய அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது. இந்தக் கைங்கரியம் பல வருடங்களாக நடைபெற்று வருகிறது.

ஆலய அறங்காவலர் சபையின் செயற்பாடு போற்றுதற்குரியது. பிறந்தநாள், திருமண நாள், தந்தை தாயார் நினைவுதினம் போன்ற நிகழ்வுகளுக்கு ஒரு தடவை ஐயாயிரம் ரூபா ஆலயத்துக்குச் செலுத்தினால் அவர்கள் நினைவாக குறித்த தினத்தில் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படுவதுடன், வீபூதி பிரசாதம் வீட்டு முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும்.

ஆலய உற்சவம் இந்த மாதம் 28.06.2014 கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து இடம்பெற்று வருகிறது.. ஆலய திருவிழாவுக்கான அமுதசுரபி அன்னதான சபை இரவு, பகல் அன்னதான சேவை வழங்கி வருகிறது.. ஆலய தென்கிழக்கு பகுதியில் தம்பையா தாகசாந்தி நிலையம் தனது சேவையை வழமை போல ஆற்றி வருகிறது. ஆலய முன்வாயில் பகுதியில் அபிவி ருத்திச் சபையும் தாக சாந்தி வழங்கி வருகிற து.. சாரணர் படை தொண்டர் சபையினர் சென். ஜோன்ஸ் படை வழமை போல சேவை செய்து வருகின்றனர். கூடுதலான மோட்டார் படகுச் சேவையும் பாதுகாப்பு அங்கியுடன் சேவை இடம்பெற்று வருகிறது. எல்லோர்க்கும் அம்பாளின் நல் அருள் கிடைக்கப் பிரார்த்திப்போம்.


■ வி. இராசநாயகம். நயினை.






# தேரில் அம்பாள் ஆரோகணிக்கும் அற்புதக் காட்சி

உலகுயிர்கள் உய்யும் வண்ணம் எம்பிரானாகிய சிவபெருமான் தமது சக்தியைப் பதித்ததற்குரிய இடங்கள் அறுபத்து நான்காகும். இவை சக்தி பீடங்கள் எனப்படும். காஞ்சியிலே காமாட்சி எனவும், காசியிலே விசாலாட்சி எனவும் மதுரையிலே மீனாட்சி எனவும், தஞ்சையிலே முத்துமாரியெனவும், திருக்கடவூரிலே அபிராமியெனவும் பல பல திருநாமங்களைக் கொண்ட பேரருட் சக்தியானவள் நயினாதீவு எனப்படும் மணி பல்லவத்திலே புவனேஸ்வரி பீடத்தினை அலங்கரித்துக் கொண்டு நாகேஸ்வரி, நாகபூஷணி முதலாய திருநாமங்களுடன் எழுந்தருளி அருளாட்சி நடத்தி வருகின்றாள். நாகபூஷணிக்கு நாகேஸ்வரி என்ற திருநாமம் வழங்குவதை முன்னரே குறித்தோம். நாகம் வழிபட்டதனால், நாகத்தால் பூசிக்கப்பட்டதனால் அன்னைக்கு இந்தத் திருநாமம் அமைந்தது என்பர். நயினை ஆலயத்தின் கருவறையில் ஐந்து தலை நாகமும் அம்பாளும் இணைந்த விக்கிரகம் அருள்பொழிந்த வண்ணமாகவுள்ளது. இந்தியாவில் கூட நாக வழிபாட்டுக்கே பிரத்தியேகமாகவுள்ள இவ்வளவு புராதன கோயிலைக் காண்பதரிது. கலப்பற்ற தூய்மையான நாக வழிபாட்டுப் பண்பினை நயினாதீவில் காணலாம். இந்த நாகச்சிலை பதினான்காயிரம் வருடம் பழைமை வாய்ந்தது. இந்தியா, இலங்கை போன்ற இடங்களில் வேறு எங்கும் பார்க்க முடியாத பிரத்தியட்ச உருவமாக சர்ப்ப வழிபாட்டின் தொன்மைக் கருவூலமாக விளங்குகிறது. நாக வழிபாட்டிலே தொடங்கி காலப்போக்கிலே நாகபூஷணி வழிபாடாக வளர்ந்து, அந்த வழிபாட்டின் தொடர்ச்சியின் மகோன்னத நினைவுச் சின்னமாக நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயம் விளங்குகின்றது. நயினாதீவுக்கு இடப்பட்ட பழைய பெயர் நாகதீவு அல்லது நாகத்தீவு என்று கொள்ளப் பொருத்தமாகத் தெரிகிறது. இந்த மணித்தீவு நாகத்துவீபம் என வழங்குவதாலும் நாகம், நாகர் தொடர்புகளின் தொன்மை புலப்படுவதாலும் இலங்கை எங்கணுமுள்ள ஆலயங்கள் யாவிலும் மிகவும் பழைமை வாய்ந்தது நயினை நாகபூஷணி அம்மன் ஆலயமே.



"பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்த வண்ணம் காத்தவளே"என அபிராமிப்பட்டர் விதந்துரைத்துள்ளார். அம்பிகையான சர்வ உலக வியாபகத்தை பட்டர் அழகாக விவரித்திருக்கிறார். அந்த வியாபகம் எங்கள் தாயாக விளங்கும் நாகபூஷணி அம்பாளுக்கும் பொருந்துவதாகவே அமைகின்றது. நயினை வாழ் நல்லடியார்களுக்கு மட்டுமல்ல நாடளாவிய சைவர்கள், பௌத்தர் முதலாம் எல்லோருக்கும் பொதுவானவளாக அம்பாள் வணக்கத்துக்குரியவள் ஆகின்றாள்.

இத்தகு சரித்திர வரலாற்றுப் பெருமைகளை தன்னகத்தே கொண்டுள்ள அன்னை நாகம்பாளின் ஆலயம் தற்பொழுது பல்லவர், சோழர் கால அமைப்பினையொத்த வரிசையில் கலைத்திருக்கோயிலாக மாறி வருகின்றது. அழ்கிய 108 அடி உயரமான கம்பீரமான சக்தி மகத்துவங்களை எடுத்தியம்பும் வகையில் ஆலய வாயில் இராஜகோபுரம் அமைக்கப்பட்டு வருகின்றது. அதேபோல ஆலயதெற்குப் பிரகார இராஜகோபுரம் திருக்கயிலைக் காட்சியை விளங்கும் வகையில் அழகிய தீர்த்தத் தடாகம் இவ்வாறாக பல திருப்பணிகள் நிறைவேற்றப்படுகின்றன.

இத்தகைய பல்வகைச் சிறப்புக்கள்ளைக் கொண்ட நயினை நாகபூஷணி அம்பாளின் மஹோற்சவ பெருவிழாவின் 14ஆம் திருவிழாவான தேர்த்திருவிழா இன்று இடம்பெறுகின்றது. இலட்சோபலட்சம் மக்கள் மத்தியில் அன்னை நாகபூஷணி அழகிய சித்திரத் தேரில் ஆரோகணித்து வீதிவலம் வருகின்ற அற்புதக் காட்சி பூலோக இந்திர விழா போல அமைந்து விடுகின்றது. நாற்புறமும் அலைகடல் எழுந்து அன்னையின் தேர்த் திருவிழாக் காட்சிக்கு ஆசி கூறும் பக்தர்களின் அரோகரா கோஷத்துடன் அம்பாள் சங்காரத் தொழிலை நிறைவேற்றத் தேரேறி வருவாள். வேண்டுவார் வேண்டும் வரமெலாம் தரும் சக்தியை தொழுது நல்லவர்களாக வல்லவர்களாக வாழ்வோமாக.

காரை.எம்.பி. அருளானந்தன்



தேரேறி வந்து
காத்திடுவாய்
நயினைத் தாயே

உதயா
ஜுவல்லர்ஸ்

81, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
No.81, Kasthuriyar Road, Jaffna.
T.P: 021 222 4434



Uthayaa Jewellerss
For Modern & Distinctive

இணை நிறுவனம்:
நியூ உதயா ஜுவல்லர்ஸ்
91, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2031

தேரேறி வந்து காத்திடுவாய்
நயினை தாயே



அழகுக் கலைப் பயிற்சி




சுவீடன் நாட்டு ஒறிபிளேம் நிறுவனம்
இடம் மாறுவதை முன்னிட்டு

ஒரு மாதகால அழகுக்கலைப் பயிற்சி 590/= பதிவுக் கட்டணத்துடன் நிபந்தனைக்கமைவாக இலவசமாகவும், 3 மாதகால அழகுக்கலைப் பயிற்சிகள் மற்றும் Cake icing பயிற்சிகள் 25 வீத விலைக்கழிவிலும் ஆரம்பமாகவுள்ளன.

அவ்வகையில் Facial, Gold Facial, Fruit Facial, Eyebrow shape, Bridal Make up, Pedicure, Manicure, Mehindi, Nail Art, Hair style, Hair Cut, Hair straightening, perming,... என இன்னும் பல செய்முறை விளக்கத்துடன் இடம்பெற்று பயிற்சி முடிவில் சர்வதேச சான்றிதழ்கள் வழங்கப்படும்.

இணைய விரும்புவோர்:
15.07.2014 அன்று 10.00 மணிக்கு அறிமுக வகுப்பில் கலந்து மேலதிக விவரங்களைப் பெற்றுக்கொண்டு பதிவுகளை மேற்கொள்ளவும்.

ஒறிபிளேம்
616, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (வேம்படி சந்தி)
தொடர்புகளுக்கு: 077 228 8243 / 021 454 6026



# நயினையில் வடம் பிடிப்போம் வாரீர்...

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல ஆதிபராசக்தியான அம்பிகை உமையவள். நயினையம்பதியிலே ஸ்ரீ நாகபூஷணி என்ற நாமத்துடன் எழுந்தருளி வீற்றிருந்து, வழிபடும் அடியார்களின் குறை தீர்த்து திருவருள் பாலிக்கின்றாள்.

அந்த நயினை நாகபூஷணி இன்று தேரேறி வந்து அருட்காட்சி தருகின்றாள். அம்பிகையின் அருள் பெற்றுய்ய அடியார்கள் பலர் இன்று நயினாதீவுக்கு விரைகின்றார்கள். வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவியாகிய அம்பிகை நாகேஸ்வரி அலங்கார பூஜிதையாக இன்று தேரிலே ஆரோகணிக்கும் அற்புதத் திருக்காட்சியைக் காண்பதற்கு இரண்டு கண்கள் போதாது.

"சேலார் வயற்பொழிற் செங்கோடனைச் சென்று கண்டு தொழ நாலாயிரங்கண் படைத்திலனே அந்த நான்முகனே" என்று அருணகிரியார் கூறியது போல இங்கு நயினாதீவிலும் நாகபூஷணி தேரில் ஏறி வரும்காட்சியைக்காண நாங்கள்பூர்வஜென்ம புண்ணியஞ் செய்திருக்க வேண்டும்.

"தாயே சரணம்! நயினை நாகபூஷணியே சரணம்!" என்று கோஷம் எழுப்பியவாறு அன்பர்கள் ஊர்கூடித் தேர்இழுக்கும் பாங்கு பக்தி பூர்வமானது. "அரோஹரா! அம்பாளுக்கு அரோஹரா'!' என்றபடி திரும்பிய பக்கமெல்லாம் அடியார் கூட்டம் அலை மோதுகின்ற ஆனந்த அற்புதத் தெய்வீகக் காட்சி நெஞ்சை உருக்கும் காட்சியாகும்.

முதலிலே விநாயகப் பெருமான் தேரிலே வர, அடுத்து முருகப் பெருமான் தேரில் வர அதன் பின்னே அழகிய அற்புத சித்திரத் தேரிலே அம்பாள் வருவாள். நாகம் வழிபட்ட நாகபூஷணி எமது தோஷங்களையெல்லாம் நீக்கிப் பாவங்களை அழித்தொழிக்க இன்று தேரிலே ஆரோகணிக்கின்றாள். அடியார்கள் அனைவரும் அம்பிகையின் தேர் வடம்பிடிக்க நயினைக்கு வருகை தருமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றனர். ஆகவே, அம்பாளைத் தரிசித்து முத்திப் பேற்றுக்கு வழிகோலி அருள் பெற்றுய்வோமாக.

"கலாபூஷணம்"
இராசையா ஸ்ரீதரன்.











# நயினை நவமான்மியம்

ஆழி வெண்டிரை கரைசேர் நயினையம்பதியினில்
ஊழி செய் அன்பர்க்கு என்றுமில் இன்னல்
தானுரைத்திரு நால் வேதம் ஒலித்திட
தமிழ் சிவ நெறி தழைக்கும் அவனியே போற்றி

அண்டபிண்டங்கள் யாவும் உணர்ந்த மெய்யறிவுதனில்
தொண்டு செய் அடியார்க்கு என்றும் இன்னருளல்
ஆதிகுண்டலியாய்ச் சக்தியின் வடிவினை
ஓதி ஒழுகி வழிபடல் செய்தவமே போற்றி

பிரிந்துள தோற்றம் தன்னில் என்றும்
புரிந்து அருளும் அன்னை வாழ்வில்
கருதிடும் செயல்கள் யாவும் கதியினிலே
கரையேறிட அடியவர்க்கு அருளல் நற்கதியே போற்றி

தாங்கிய இடுக்கண் ஓங்கியே ஒழித்திடல்
சலங்கை அம்மையின் வலப்பாதத்தினின்று மணி பல்லவத்தில்
ஏற்ற வேத ஆகமங்கள் ஏழ்மினத்தினை
போற்றியே திழைத்திடஏற்றிடும் பூரணியே போற்றி



முன்னுள முடிவுக் கெல்லாம் முதலினில்
என்னுள்ளே காட்சி தரும் வைகல்
பீடுறும் முதல்வனுக்கு துணையாய் நின்றிட
கேடுறும் அடியார் தமைக்காக்கும் தகையே போற்றி

அனந்தனை ஆதிநாகராகி அருளிடும்
சினந்தனை மனதில் மதியினால் அகலல்
எழுதரு முறையும் கடந்து என்றுமே
வழுவற்று வாழும் செந்நெறி தரும் அருளே போற்றி

சீர்த்த பேரண்டத்தின் உண்மையினை உலகில்
பார்த்தவர்கள் பரவசப்படும் பாம்பினில் அ!ருளல்
போத நாயகியாக புவன நாயகியாக மாட்சியிலே
ஏதமில் வாழ்வில் எமக்கு என்றுமே உறுதுணை போற்றி

தரித்திடும் பிரம்மனுக்கு மெய்ப் பொருள் உணர்வில்
வரி கொள் தோல் போர்த்த நாயகன் துணையில்
வாய்த்த செந்திருவும் கலைகளும் நம் மண்ணிலே
ஓய்ந்து போகா திருக்க ஓர்மத்தை ஓதும் ஓங்காரமே போற்றி

வளைந்திடுமமரர் வாழ்த்தொலி இசைக்க மண்ணில்
முளைத்திடும் அறம் என்றுமே அவனியில் திழைத்தல்
சீரியர் சிறப்புடன் சிந்தித்தே போற்றிடவே
வீரிய வாழ்வு தரும் நயினை நாக நாயகியே போற்றி

ஈர்த்த கருணைக் கடலாய் கருடனிற்கு மரக்கலத்தில்
தோற்ற வாழ்விலும் போற்றிடும் அடியவர் அல்லல்
கண்ணுறு மக்கட் காட்சி காணிலி ஆயினுமே
விண்ணுறு வியன் மண்டலத் தீவதனில் மீட்சித்தாயே போற்றி

வெள்ளை உள்ளம் கொண்ட மக்களாய் என்றும்
கொள்ளை செய்யாது வாழ வழ நல்கும்
செறிந்திடும் இன்னல் வாழ்வதனை எளிதினிலே
எறிந்திட வண்மை தந்தருளும் நாக நாயகியே போற்றி

முந்நூறு நாகரியக்கர் தம்மை வணங்கி
வந்துற்ற தலத்தின் தாயே நாம் என்றும் போற்றும்
நாகரானவருக்கு அருளிய் தலத்தில் சுடர் ஏற்றியே
தாகமில்லாத் தண்ணளி அளிக்கும் மாட்சியே போற்றி

பற்பல திசையில் பராசக்தியின் பார்வையினில்
பொற்பலன் பெற்றிட பொங்கி அமுதுண்ணல்
ஒன்றொரு சக்தியாக கயிலைக் காட்சியினை நன்றே
வென்றவரும் மன்றியிடும் வண்ணம் செய்தனையே போற்றி

திகழ்ந்திடும் நின்வரம் வேண்டித்தினம்
புலர்ந்திடும் உதயம் தனில் கூப்பும் கரம்
மன்றுசீர் நயினையம் பதியில் அருள் சுரக்குமே
கன்று சேர் ஆவினைப் போல் நாக நாயகியே போற்றி

காட்சியில் கரையில் கடல் அருளே எம்மில்
மீட்சி தா என்றென்றும் ஏற்றத்தில்
பெற்றதா லென்னை கற்றதால் உன்னைப் பாடியே
முற்றற முதலாய் வேண்டும் நயினைநாக பூசணியே போற்றி

*மருத்துவர் சி.யமுனாநந்தா.*









உ
ஓம் மகா கணபதி துணை



# புன்னாலைக்கட்டுவன், ஆயாக்கடவை
# திருவருள் மிகு சித்திவிநாயகர் தேவஸ்தான
# தேர்த்திருவிழா சிறப்புமலர் - 11.07.2014

## ஆலய வரலாறு

சிவபூமி எனத் திருமூலரால் அழைக்கப்பட்ட ஈழ நாட்டின் வடபால் அமைந்த யாழ்ப்பாணத்தில் உள்ள புண்ணிய தலங்களில் புன்னைமாநகரிலே வீற்றிருக்கும் ஆயாக்கடவை ஐங்கரன் ஆலயமும் முக்கியமான இடத்தினைப் பெறுகிறது.

தமிழ் மன்னர்கள் ஆட்சிக் காலத்தில் பிரதானிகளாக முதலிமார் கள் விளங்கினார்கள். அக்காலத்தில் தெய்வேந்திரம் முதலியாரால் இவ்விடத்தில் ஆயம் வசூலிக்கப்பட்டு மன்னருக்கு வழங்கப்பட்ட மையால் ஆயக்கடவை என்றழைக்கப்பட்ட இவ்விடம் காலவோட் டத்தில் ஆயாக்கடவை என மருவிற்று.

இந்த ஆலயத்தின் தற்போது மூலஸ்தானம் இருக்குமிடத்தில் 1919ஆம் ஆண்டு மூலவிக்கிரகம் ஊர்மக்களால் பிரதிஸ்டை செய்யப்பட்டது. 1921இல் முதலாவது கும்பாபிஷேகமும்,1961இல் இரண்டாவது கும்பாபிஷேகமும்,1991இல் மூன்றாவது கும்பாபி ஷேகமும் நடைபெற்று சிறப்புப் பெற்ற ஆலயமாக மிளிர்கின்றது.

இந்த ஆலயத்தில் மஹோற்சவமானது ஆனிப் பூரணை தினத்தை தீர்த்தமாக வைத்து 11 தினங்கள் மஹோற்சவ காலமாக திகழ்கின்றது. இந்தத் தேர்த்திருவிழாவானது 44ஆவது தேர்த்திருவிழாவாக அமைகின்றது.

1936இல் கோயிலாரைத் தலைமையாகக் கொண்ட நிர்வாக சபை அமைக்கப்பட்டது. 1956இல் இளைய தம்பி உடையாரை தலைமையாகக் கொண்ட பரிபாலன சபை அமைக்கப்பட்டு இன்றுவரை ஆலயத்தின் வளர்ச்சிப் பணிகளையும் நிர்வாகப் பணிகளையும் காலங்காலமாக இப்பரிபாலன சபை ஆற்றி வருகின்றது.

ஆயாக்கடவை சித்தி விநாயகர் தேவஸ்தான பரிபாலன சபை.

### தேரேறும் பொலிவு காண்பீர்



நாத வடிவான சிவனும் விந்து வடிவான சக்தியும் சேர்ந்ததே விநாயக வடிவம். விநாயகர் நம் உடம்பில் உள்ள ஆறு ஆதாரத் தவங்களின் மூலாதாரமான ஆனந்தமய கோசத்தில் அமர்ந் திருப்பதாக நூல்கள் கூறுகின்றன.

எனவே நாம் விநாயகரை வழிபட்டால் வினை வேரோடு அறும். விநாயகர் மிக நுண்ணறிவும், புத்திக்கூர் மையும் தரவல்ல தெய்வம் .கல்விக்கு முதல்வர். எடுத்த காரியங்கள் யாவையும் வெற்றி பெற வைப்பவர் சித்தி விநாயகர். எம் ஊர் மக்கள் சித்தி விநயாகரைக் குலதெய் வமாகப் போற்றி வழிபட்டு நினைத்தவை யாவும் சித்திபெற விளைந்த மேன்மை மறக்கற் பாலது.

ஊர்கூடி வடம் பிடிக்க உலா வருகின்ற சித்தி விநாய கப் பெருமான் சகல யோகம் மிக்க வாழ்வை தன் மீளா அடியவர்க்கு என்றும் வழங்க வேண்டுமெனப் பிரார்த்திக் கின்றோம்.

கலாநிதி தியாக கெங்காதர குருக்கள்(J.P.)
மகோற்சவ காலக் குரு
ஆயாக்கடவை சித்திவிநாயகர் தேவஸ்தானம்
புன்னாலைக்கட்டுவன்.

### சித்திரத் தேரிலே தேரேறும் சித்தி விநாயகர்



புன்னாலை கட்டுவன் ஓர் அழகான அமைதி யான கிராமம். கற்றறிந்த சான்றோர் பலர் வாழ்ந்த வாழ்கின்ற இக்கிராமத்தின் மத்தியிலே ஆயாக் கடவை எனும் பதியினிலே வீற்றிருக்கும் விநாயகப் பெருமான் தேரேறி மக்களுக்கு அருள் பாலிக்கும் இந் நன்நாளில் அனைத்து மக்களும் அவர் அருளைப் பெற்றுய்ய வாழ்த்துகிறேன். இறை வனின் அருளைப் பெற்று மனச்சாந்தி, சந்தோஷம், இறையருள் என்பனவற்றை மக்கள் சமூகம் ஒருங்கே பெற இணையும் இடம் ஆலயம். கோயி லில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என ஆன்றோர் கூறுவர். அந்த வகையில் பழம் பெருமை வாய்ந்த இவ்வாலயம் புன்னாலைக்கட்டுவன் வாழ் மக்களின் வாழ்வோட்டத்துடன் கலந்து வியாபித்துள்ளது. அடியவர்களின் நற்பணிகளும் இறை தொண்டர்களின் திருப் பணிகளும் கோயிலை மேன்மேலும் சிறப்புறச் செய்துள்ளன. வேண்டுவோர் வேண்டுவதை அள்ளி வழங்கும் சித்தி விநாயகப் பெருமான் இயற்கை அழகு மிக்க பிரதான வீதியிலே அமர்ந்து தம்மிடம் நாடிவரும் பக்தர்களின் குறைகளைத் தீர்ப்பவர். அவர் தம் பாதாரவிந்தங்களைப் பணிந்து அவர் தேரேறி வரும் இந்நாளில் அவரருளை அனைவரும் பெற்றுய்ய இறைவனை வாழ்த்திப் பிரார்த்திக் கின்றேன்.

செ.கணேசமூர்த்தி
தலைவர், ஆயாக்கடவை சித்தி விநாயகர்,
தேவஸ்தான பரிபாலன சபை

### "பிள்ளையார் சுழி போட்டு நீ நல்லதைத் தொடங்கிவிடு"



பண்பாட்டின் சின்னமாக விளங்கும் யாழ்ப் பாணத்திலே கலையும் கலாசாரமும் சைவமும் தமிழும் பின்னிப்பிணைந்து கிராமப் புறங்களிலே மணங்கமழ் கின்றன. அந்த வகையில் விநாயக வழிபாட்டின் பெரு மையைப் புலப்படுத்தும் வகையில் புன்னாலைக் கட்டுவன் கிராமத்தில் அமைந்தது ஆயாக் கடவை சித்திவிநாயகர் ஆலயம். இவ் ஆலய வளர்ச்சியில் பரிபாலன சபையின் பங்கு மிகச்சிறப்பானது. இந்து சமய வழிபாட்டு மரபில் விநாயக வழிபாட்டுக்கு முக்கி யத்துவம் கொடுக்கப்பட்டிருப்பது யாவரும் அறிந்ததே.

பாதம் பணிந்து வேண்டுவோருக்கு பல கலையும் பின் முக்தியும் தந்தருளும் விநாயகரைச் சிந்தையில் வைத்துள்ள எம் மக்களின் கோயில் ஆயாக்கடவை சித்தி விநாயகராகும். பாவம் ஆகிய பிறவிப்பிணி நீங்கி மானுடர் வீடுபேறு அடைவதற்கு அஞ்ஞான இருள் நீங்கிட ஓங்கார வடிவாகிய விநாயகர்தேரேறி வரும் கண்கொள்ளாத் திருக்காட்சியைக் காணவரும் அடியவர்கள் அனைவருக்கும் திருவருள் கிடைக்க வேண்டுமென விநாயகப் பெருமானின் பொற்பாதங்களைப் போற்றித் துதித்து வாழ்த்து வதுடன் அனைத்து அடியார்களினதும் வாழ்வு சிறப்புற அமைய எனது வாழ்துக்கள் பறபல...

'விநாயகனே வெவ்வினையை
வேரறுக்க வல்லான்'

முத்துலிங்கம் நந்தகோபாலன்
பிரதேச செயலர், வலி.தெற்கு, உடுவில்.

### இந்து இளைஞர் சங்கம் வாழ்த்துகிறது



வட புலத்தின் தமிழ் சைவ வரலாற்றில் புன்னாலைக் கட்டுவன் கிராமம் ஓர் உன்னத இடத்தை வகிக்கின்றது. இங்கு நல்லாட்சி புரிபவர் ஆயாக்கடவை சித்தி விநாயகர் ஆவார். இவ்வாலயமானது சவுக்கு மரத்தடிப் பிள்ளையார் என்றும் அழைக்கப்படுகின்றது. இவ்வாலயமானது பலாலி வீதியில் அமைந்துள்ளது. இவ்வாலயத்தை சூழ சன சமூக நிலையம், முன்பள்ளி, பாடசாலை என கல்விச் சாலைகள் அமைந்துள்ளன.இவ் வரலாற்று சிறப்பு மிக்க ஆலயத்தில் நாற்பத்து நான்காவது (44ஆவது) தேர்த் திருவிழா வானது சிறப்பாக நடைபெறுவதை முன்னிட்டு புன்னாலைக் கட்டுவன் தெற்கு இந்து இளைஞர் சங்கத்தினராகிய நாம் அளப்பரிய மகிழ்ச்சி அடைவதுடன் வாழ்த்தி நிற்கின்றோம்.

சி.வக்சன், உபதலைவர் இந்து இளைஞர் சங்கம்,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு.

### புன்னை நகர் மன்னவனே தேரேறி வாராய்



44 ஆவது ஆண்டாக எம் மன்னவன் தேரேறி வந்து அடியார்களுக்கு வேண்டுவன ஈந்து அருளாட்சி செய்கின்ற இன்றைய தினத்தில் அடியவர்க்கு வேண்டுவன வழங்கி இவ்வூர் மக்களைச் செல்வச் செழிப்புடன் வாழ வைக் கிறார் ஆயாக்கடவையான். இவ்வூர் மக்களின் திருப்பணி வேலைகளால் சகல வளமும் கொண்ட ஆலய மாக இவ்வாலயம் மிளிர்கின்றது. இவ்வாலயத்தில் சீர்காழி கோ.விந்தராஜன், மதுரைச் சோமு போன்ற இசைத் துறை யைச் சேர்ந்தவர்கள் கச்சேரி நடத்தியுள்ளனர். இவ்வாலயத் தில் தேர்த்திரு விழாவிற்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பரிபாலன சபை செயலா ளர் என்ற வகையில் மிக்க மகிழ்ச்சி அடை கிறேன்.

ஆயாக்கடவையான் சேவையில்
ந.ஜெயகுமாரன் செயலாளர்,
ஆயாக்கடவை சித்தி விநாயகர்
தேவஸ்தான பரிபாலன சபை

### வினைகளையத் தேரேறுவாய்



ஆயாக்கடவையுறை அருள்சித்தி வீநாயகர்க்கு
அலங்காரத் திருவிழா அதன் உச்சம் அழகிய
தேர்த்திருவிழா
பாவம்கெட அருளும் பரமனின் பாலகர்க்கு
பல்வகையான பவனி
பக்தர்க்கருள் வழங்கும் பகமையாய் ரதபவனி
வேண்டுவார் வேண்டும்வகை ஈகின்ற வேழவர்க்கு விரிகின்ற
பெருவிழா
விண்ணாளும் தேவர்களும் வணங்குகின்ற தேர்விழா.
ஊண் அளிக்கும் தேவுக்கு உயிர்காக்கும்
கணபதிக்கு உல்லாசமாக ஊர்தி
உலகத்தை ரட்சிக்கத் தேரில் எழுவாய் நீ
ஆயிரம் அடியார்கள் அரோஹரா ஓசையிலே
அசைகின்ற தேரிலேறி
அன்பர்க்கருள் கொடுக்க அசைந்தாடி வா நீ
வாழ்வித்து வரமருள வருகின்ற கஜமுகனே
வரமருளும் நாமம் வாழ்த்தி
வணங்குகின்றோம் உன்பாதம் போற்றி

மஹோற்சவ கால சொற்பொழிவாளர்
ஆசிரியர் - ச.மார்க்கண்டு
(தென்மராட்சி இலக்கிய அணி)

★★★★★★பிரசுர அனுசரணையாளர்கள்★★★★★★

**சித்தி விநாயகர்**
ரெலிகொம்&ஸ்ரேசனறி
சுன்னாகம் வீதி,
புன்னாலைக் கட்டுவன்
தெற்கு சந்தி.
கே.கே. எஸ் வீதி,
சுன்னாகம்.

**தரன்**
போட்டோ &வீடியோ
புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
ஆயாக்கடவை.
உரிமையாளர்:
சண்முகலிங்கம் முரளி

**லக்சுமி**
ரேட் சென்ரர்
(பலசரக்கு வியாபாரம்)
இல.31, கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்.
தொ.பே.: 021 224 2080

**பாணு ஸ்ரோர்ஸ்**
(பல்பொருள் வாணிபம்)
ஸ்ரேசன் ரோட், ஊரெழு வடக்கு,
சுன்னாகம்.
உரிமையாளர்:தம்பன் கேந்தேஸ்வரன்

**லலிதா மெடிக்கல்**
பலாலி வீதி,
புன்னாலைக்கட்டுவன் சந்தி
உரிமையாளர்:
சி.கோபிகிருஸ்ணன்

**சித்தி விநாயகர்**
பல்பொருள் வாணிபம்
பலாலி வீதி,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு
உரிமையாளர்:ந.கண்ணன்

**பாபு வெதுப்பகம்**
சுன்னாகம் வீதி,
புன்னாலைக்கட்டுவன்
தெற்கு சந்தி.
தரமான பேக்கரி உணவுப் பொருள்களை ஒரே இடத்தில் பெற்றிடலாம்.

**கஜமுகன்**
ஸ்ரோர்ஸ்
புத்தூர் வீதி,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
உரிமையாளர்: சின்னத்தம்பி
சண்முகநாதன்

**நாராயணா**
பல்பொருள்
வாணிபம்
சுன்னாகம் வீதி,
புன்னாலைக்கட்டுவன்
தெற்கு சந்தி.

**விஸ்ணு**
ஹாட் வெயர்
பலாலி வீதி,
புன்னாலைக்கட்டுவன் சந்தி
பருத்தித்துறை வீதி,
ஆவரங்கால்.




# பொலிகண்டி கந்தவனம்

# திருவருள்மிகு கல்யாண வேலவ சுவாமி தேவஸ்தானம்

## தேர்த்திருவிழா சிறப்பு மலர் : 11.07.2014

**தேர்த்திருவிழா இன்று முற்பகல் 10.00 மணிக்கு**

### வரலாறும் கோயில் ஆதீனகர்த்தாவின் ஆசிச்செய்தியும்



தென்கைலாயம் எனும் இலங்காபுரியில் புராணகாலந்தொட்டு பல அருள் நிறைந்த திருக்கோயில்கள் இறைவனால் தோற்றுவிக்கப்பட்டு அதனூடு அடியவர்களிற்கு ஆன்ம ஈடேற்றம் நல்கி வருகின்றான். அவ்வாறான சிறப்பினால் இலங்காபுரி சிவபூமி எனும் சிறப்பையும் பெற்றது.

அவ்வண்ணம் யாழ்ப்பாணத்து வடமராட்சியின் பொலிகண்டியூரில் ஸ்கந்தாரண்யம், கந்தவனம், கந்தவனக்கடவை, பொலிகண்டிகந்தசுவாமி கோயில் எனப்பலபெயர்களால் விளங்கும் திருத்தலம். அருணகிரிநாதரால் திருப்புகழ்பாடப் பெற்ற உயர் தலம்.

யுகம்யுகமாய் அருள்விளங்கும் அற்புதத்திருத்தலம். கற்பூரம் விளைந்த பெருமையுடையதனால் இங்குள்ள இறைவன் கற்பூரக்கந்தன் எனும் சிறப்புநாமமும் பெற்றான். நறுநீர்ச்சுனையால் நோய்கள் நீங்கியும் காஞ்சிமாவினால் குழந்தை பாக்கியமும் ஒருங்கே அடியவர்க்கு நல்கி தனது பேரருளுடன் பேரழகினையும் மொத்த வடிவில் காட்ட விளைந்த தலமே கந்தவனம்.

வடமராட்சிப் பகுதியில் முதன்முதல் தோன்றிய தேர் எனும் பெருமையுடையது. பொலிகண்டியைச் சேர்ந்த நாகர்தம்பர் எனும் அடியவரின் தனி முயற்சியால் இன்றைக்கு 250 வருடங்களுக்கு முன் தோற்றம் பெற்றமகாதேர். இதன் சிறப்பினை

> தேவருங் காமுறுஞ் சித்திரத்தேரும்
> வானோரூர்த்து மறந்து விட்டதுவிது தானோ....

என உடுப்பிட்டி சிவசம்புப்புலவர் தமது நான்மணிமாலையில் புகழ்ந்து துரைக்கின்றார்.

இத்துணை சிறப்புடைய மகாதேரில் எங்குமில்லாத தனித்துவமுடைய ஆறுமுகநயினார் வள்ளி தெய்வானை சகிதம் இந்திர மயிலமர்ந்து விநாயகர் ஸ்ரீ முத்துக்குமார சுவாமி சண்டேசர் சகிதம் எழுந்தருள்வது கண்கொள்ளாக்காட்சி. இவ் ஆறு முகநயினாரை திருமுருக கிருபானந்தவாரியார் கண்ணுற்று தாம் எங்கும் இதுவரை இவரைப் போல் அழகு பொருத்தியதும் பெரியதுமான சண்முகரைக் காணவில்லை என உருகி வழிபட்டு பேறடைந்தார்.

இச்சண்முகப் பெருமான் தாமே விரும்பி இத்தலத்தில் எழுந்தருளியவர் எமது தந்தையாரின் திருநோக்கில் உதித்து வார்ப்பிக்கும் பேற்றை எமது தந்தையார் ஸ்ரீமான் திக்கம் செல்லையா பிள்ளைக்கு ஈந்தவர். இவரின் உற்பத்தியில் எத்தனையோ அடியவர்களின் ஆபரணங்களும் பல பெண்ணடியார்களின் திருமாங்கல்யங்களும் சேர்ந்த புனித வரலாறுகள் பலவுண்டு.

இந்த ஒளி பொருந்திய சண்முகரை நவாலியூர் சோமசுந்தரப் புலவர் கந்தவனத்தருகே ஆறுமுகப் பொன் மாலை என்று போற்றிப்பாடுகின்றார்.

இப்பேரழகன் பக்தர்களின் பெருமைதங்கிய தோள்களில் தவிழ்ந்து இம் மகாதேரிற்கு எழுந்தருளும் அழகைக் காணும் கண்களே கண்கள். ஆகவே மனிதர்களாகிய நாம் இன்று கந்தவனம் வந்து தரிசித்து பூர்வஜென்ம புண்ணியத்தைப் பெறுவோமாக!

திருமதி சிவயோகநாயகி இராமநாதன் (M.Sc)
அறங்காவலர்

### ஆசிச்செய்தி

சீரும் சிறப்பும் பொலிந்து விளங்கும் ஈழத்திருநாட்டின் வடபால் மகுடமென விளங்கும் யாழ்ப்பாணத்தின் வளம்பலபெருகும் வடமராட்சிப் பிரிவிலே சைவசீலரும், தானதருமமும் சிறந்த சிந்தனை கொண்ட மாந்தரை தொன்மையாகக் கொண்டு விளங்கும் நெய்தல் நிலப்பரப்பிலே அருணகிரிநாதரால் புகழ்ந்து திருப்புகழ் பாடப் பெற்றதும் யோகர்சுவாமி போன்ற தவசிரேட்டர்கள் வழிபாடு செய்யப் பெற்றதும் சிவசம்புப்புலவர், நவாலியூர் சோமசுந்தரப்புலவர் என்போரால் நான்மணிமாலை போன்ற நூல்களைப் பாடிப்பெருமை பெற்ற தலமும் தட்சிணகைலாயம் (தென்கைலாயபுராணம்) 9 ஆம் அத்தியாயத்தில் விதந்து கூறப்பட்டதுமாகிய கந்தவன ஷேத்திரத்திலே மனம், மொழி, மெய்யால் தன்னை வழிபாடாற்றும் அடியார்களின் துயர் களை நீக்கி அருளுகின்றவரும் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய முச்சிறப்புகளையும் ஒருங்கே அமையப்பெற்று அநாதியான பழைமை வாய்ந்த வன்னி மரத்தை தல விருட்சமாக கொண்டவரும் கந்தவனம், கந்தாரண்யம், கந்தசுவாமி கானகம் கந்தவனக்கடவை ஆகிய சிறப்பு நாமங்களையுடைய பதியிலே வள்ளிநாயகி தெய்வநாயகி சமேதரராக வீற்றிருந்து அருள்பாலிப்பவருமாகிய ஷண்முகப்பெருமானுக்கு இன்று தேர்த்திருவிழா கோலாகலமாக நடைபெறு வதையிட்டு நாமெல்லாம் மகிழ்ச்சி அடைகின்றோம்.

இறைவன் ஆன்மாக்களின் ஈடேற்றத்தின் பொருட்டு பஞ்ச கிருத்தியங்களை செய்கின்றான். அந்தவகையில் இன்று நடைபெறும் தேர்த்திருவிழாவானது அழித்தல் தொழிலை குறிக்கின்றது. அழித்தல் என்னும் சொல்லிற்கு இல்லாமற் செய்தல் அல்லது கொன்றொழித்தல் என்று பொருள் கொள்வது தவறாகும். அழித்தல் என்பது ஒடுக்குதல் என்னும் கருத்தில் அமையும். சம்காரம் என்னும் வடமொழிச்சொல் சம்பூகர என்று பிரித்து பொருள் கொள்ள வேண்டும். சம்-நன்றாக கர- ஒடுக்குதல் எனவே மும்மலங்களையும் ஒடுக்கி ஆன்மாக்களை உய்வித்தலே சங்காரம் அல்லது அழித்தல் அகும். எனவே அழித்தலின் பின்னே ஆன்மா இறையருள் பெறமுடியும். இதனாற் தேர்த்திருவிழாவின் மேன்மை நன்கு உணரலாம்.

இன்று நடைபெறும் தேர்த்திருவிழாவானது இவ்வூரில் உள்ள தீமைகளை அழித்து ஆன்ம ஈடேற்றத்திற்கு வழிவகுப்பதுடன் பக்தர்கள் அனைவருக்கும் கந்தப் பெருமானின் திருவருட் கடாட்சம் கிடைக்கப்பெற்று மண்ணில் நல்லவண்ணம் வாழப் பிரார்த்தித்து நல்லாசிகளை கூறிக்கொள்கின்றேன்.

சர்வே ஜனாகா சுகினோ பவந்து
சிவப்பிரம்மஸ்ரீ ச.வைத்தியநாதக்குருக்கள்
மஹோற்சவக்குரு கந்தவனம் தேவஸ்தானம், பொலிகண்டி.

### கந்தவனின் அருள் கிடைக்கட்டும்



பொலிகண்டி கந்தவனம் திருவருள் மிகு கல்யாண வேலவ சுவாமி தேவஸ்தான வருடாந்த மகோற்சவ விஞ்ஞாபனம் கிடைக்கப் பெற்றது மிக்க மகிழ்ச்சி. வேண்டுவார் வேண்டுவதை ஈயும் பொருட்டு கல்யாண வேலவ சுவாமியாக எழுந்தருளியிருந்து அருளாசி புரியும் முருகப் பெருமானுக்கு வருடாவருடம் மகோற்சவம் நடைபெறுவது அனைத்து சைவத் தமிழ் மக்களுக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. நடைபெறும் மஹோற்சவத்தை அனைவரும் தரிசனம் செய்து மண்ணில் நல்லவண்ணம் வாழ இறைவனுடைய அன்பு கிடைப்பதாக. தங்களுடைய பணிகள் தொடர்ந்து நடைபெற எமது வாழ்த்துக்கள்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

இரண்டாவது குருமஹா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.

☆☆☆☆☆ தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்: ☆☆☆☆☆

SRIMURUGAN MEDICAL STORES
Main Street
Nelliady
Karaveddy
T.P:021 373 5745

GANESAN HARDWARE
Gentral Hardware,
Paint, Pipe, Fitting Tools,
Bath rooms Fitting,
Wire & Building
Material Supplier
T.P: 021 226 3290
077 900 0399/0 77 721 4135
No. 106 Main Street
Neliady

தரமான புடைவைகளின் சாம்ராஜ்யம்
ஆடவர் நங்கையர் விரும்பும் நவநாகரிகத்திற்கு ஏற்ற நாளுக்கு நாள் மாறும் வண்ண வண்ணப் புடைவைகளை எண்ணம் போல் தெரிவுசெய்திட நெல்லை நகரில் ஏற்றதோர் வண்ணப் புடைவைப் பூஞ்சோலை.
ஹப்பி ரெக்ஸ்ரைல்
110, பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.
தொ.பே: 021 226 3287,
பக்ஸ்:021 226 3125

திருமணப்பட்டுப்
புடைவைகள் மற்றும்
சகலவிதமான
ஆடை வகைகளுக்கும்
யசோ ரெக்ஸ்
பிரதானவீதி,
நெல்லியடி, கரவெட்டி.
தொ.பே: 021 226 4997

Easy Soluctions Nelliady
www.easy solutions.lk
www.facebook.com / Easysolutions.lk
கணினி விற்பனை திருத்தம், லப்டொப் விற்பனை திருத்தம், இணைய தள வடிவமைப்பு இணைய விளம்பரம் டொமைன் சேவர் இடவசதி மென்பொருள் வடிவமைப்பு நெற்வேர்க்கிங் அன்ரிவைரஸ் தீர்வுகள் கணினி மற்றும் மடிக் கணினிகளுக்கு லீசிங் வசதிகள்
செய்து தரப்படும்.
MMV Road, Nelliady
T.P: 021 226 1120,
077 438 6599

P.ரவிச்சந்திரன்
வெற்றிலைக்
கடை
நெல்லியடி
மாக்கற்

S.ரஞ்சன்
ரஞ்சன்
பழக்கடை
நெல்லியடி
மாக்கற்

Real Itatian
Vinmeen Pizza
உங்கள் வீட்டுக்கே...
3km வரை இலவச விநியோகம்
மங்கலகரமான நிகழ்வுகளுக்குத்
தேவையான உணவுகளை
ஓடர் செய்து பெற்றுக் கொள்ளலாம்.
No.83, MAIN STREET,
NELLIADY,
KARAVEDDY
Tel: 021 226 1051

அழகர்
பல்பொருள்
வாணிபம்
இல.4, நெல்லியடி,
கரவெட்டி.
(சி/13850)(4.6.3)

அன்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் முருகன் அருள் பாலிக்க
வாழ்த்துக்கள்.
(916 kdm)தங்க நகைகள்
மொத்தமாகக் கிடைக்கும்
239, பிரதான வீதி, பருத்தித்துறை.
ஸ்ரீ சுசீலா ஆபரண
மாளிகை
T.P: 021 320 7437,
077 721 0206,
021 226 1003



### வண்-வடமேற்கு அண்ணமார் களனிப்பதியில் வீற்றிருக்கும்
### ஸ்ரீ தில்லைக்காளி அம்பாள் ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன பிரதிஷ்டா

# மஹா கும்பாபிஷேக சிறப்புமலர் - 11.07.2014

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்கலகரமான ஸ்ரீ ஜய வருஷம் ஆனித்திங்கள் 27ஆம் நாள் (11.07.2014) வெள்ளிக்கிழமை மூல நட்சத்திரமும் வளர் சதுர்த்தசி திதியும் அமிர்தசித்த யோகமும் கூடிய சுப தினத்தில் காலை 9.31 மணிமுதல் 10.29 மணிக்குள் அமைந்த சிங்கலக்ன சுபமுகூர்த்த வேளையில் நடைபெற இறையருள் கைகூடியிருப்பதால் இன்று நடைபெறும் இப்பெருவிழாவில் அடியார்கள் இணைந்து கிரியைகளைத் தரிசித்து யோகங்கள் பல பெற்று ஞானானந்தப் பெருவாழ்வு வாழ்வீர்களாக.

"அனைவரும் வருக! அன்னை அருள் பெறுக!!"

**சிறப்புற வாழ்த்துவோர்:**

| | | | |
|---|---|---|---|
| **ரமணன் கட்டப் பொருள்** விற்பனை நிலையம் ஐயனார்கோயிலடி, யாழ்ப்பாணம். | **மகா கணபதி** களஞ்சியம் K.K.S. வீதி, நாச்சிமார்கோயிலடி. | **ஆர்.கே.மோட்டோர்ஸ்** 17, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். | **B.K.மல்ரி சொப்** 1008, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். |
| **முருகன் புடைவையகம்** 6, பெரியகடை வீதி. யாழ்ப்பாணம். | **ஷண் உணவகம்** K.K.S. வீதி, நாச்சிமார்கோயிலடி. | **நீலாம்பரி உணவகம்** K.K.S. வீதி, தட்டாதெரு சந்தி. | **நீலாம்பரி பூம்பந்தல் சேவை** K.K.S. வீதி, தட்டாதெரு சந்தி. |
| **த.பாலேந்திரன்** பலசரக்கு வியாபாரம் 602, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். | **சிவசக்தி மரக்காலை** 113, ஐயனார் கோயிலடி, யாழ்ப்பாணம். | **கணேசா களஞ்சியம்** 18/4, முருகமூர்த்தி வீதி, வண்ணார்பண்ணை. | **சூரியகுமாரன்** நகைத்தொழிலகம் 5, துரைராஜா வீதி, வண்ணார்பண்ணை. |

(39638)(7.6.3)



### சரசாலை இலந்தைத்திடல்

# ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா

## 11.07.2014

**அம்பிகை அடியார்களே!**

தென்மராட்சிப் பதியில் வீற்றிருந்து நல்லருள் பாலிக்கும் ஸ்ரீ வீரமாகாளி அம்பாளுக்கென அடியவர்களால் அமைக்கப்பெற்ற புதிய சித்திரத் திருத்தேரின் வெள்ளோட்ட விழா இடம்பெறத் திருவருள் கைகூடியுள்ளது.

**வெள்ளோட்ட நிகழ்வு:** இன்று (11.07.2014) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணி
**தேர்த்திருவிழா:** 13.07.2014 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி



**கௌரவிப்பு நிகழ்வு:** வெள்ளோட்ட நிகழ்வைத் தொடர்ந்து சித்திரத்தேரை வடிவமைத்த மட்டுவில் தெற்கு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் சிற்பாலய முதல்வர் **தம்பிராசா கதிர்காமநாதன்** ஆலய பரிபாலன சபையினரால் "***சிற்பக் கலாவிநோதன்***" என்ற கௌரவப் பட்டம் வழங்கி மதிப்பளிக்கப்படுவார்.


அனைவரும் வருக! அன்னையருள் பெறுக!

**பரிபாலன சபை.**


**வெள்ளோட்ட விழா சிறப்புறப் பிரார்த்திப்போர்**


| | |
|---|---|
| **ஜெகா எலக்ரிக்கல்ஸ்** இல.11, தனங்களப்பு வீதி, சாவகச்சேரி. | **சண்முகம் அன் சன்ஸ்** (பலசரக்கு சில்லறை மொத்த வியாபாரம்), கண்டி வீதி, சாவகச்சேரி. |

# நயினை அம்பாளின் வீதியுலா காட்சிகள்....











பதினொராம் நாள் திருவிழாவில் பூந்தண்டிகையில் வீதியுலா







பன்னிரண்டாம் நாள் திருவிழாவில் பிள்ளையார் முருகன் சகிதம் நயினை அம்மன் உலா

## தேரேறி வருகிறாள் நாகபூஷணி



தேரேறி வருகிறாள் நாகபூஷணி
தேச நலன் காக்கிறாள் நாகபூஷணி
போரோய வைக்கிறாள் நாகபூஷணி
புதுவாழ்வைத் தருகிறாள் நாகபூஷணி
ஊர் சுவட்டி வருகிறாள் நாகபூஷணி
உரிமைகளைச் சேர்க்கிறாள் நாகபூஷணி
சீர் பெருக்க வருகிறாள் நாகபூஷணி
சித்திரத் தேரேறி வருகிறாள் நாகபூஷணி

*அருள்– தமிழ்ச்செல்வி.*

## நயினையிலே தேர் ஏறும் நாகபூஷணி

நயினையிலே தேர் ஏறும்
நாகபூஷணி
நம் துயரை போக்கிடம்மா
அன்னபூரணி
கடல் கடந்து வந்தோமே உன்னைக்
கண்டிட
கண்ணீரைப் போக்கிடம்மா வடம்
பிடித்தோமே
ஆண்டாண்டாய் நாமும் வந்து
அழுது புரள்கிறோம் – எம்
வாழ்க்கைத் தேர் நடுத் தெருவில்
நாளும் நடுங்குகிறோம்
வாள் கொண்டு வெட்டிச் சரிக்கும்
வன்முறை போக்கி நாம்
ஆள்கின்ற வாழ்வளிப்பாய்
நயினை நாயகியே!

*– நந்தன்*

## எழுந்து வா அம்மா



தேரில் ஏறி வருகிறாள்
நயினை நாயகி
ஊரில் எங்கும் பக்தர்
உள்ளம் பொங்கிட
வடம் பிடித்து தேர் இழுக்க
வந்தோம் உம்மிடம் – எம்
இடம் பெயர்ந்த வாழ்வு
போக்கி
இருப்பிடம் தருவாய்
சூழ்கின்ற துயர் போக்க
எழுந்து வா அம்மா!
துன்பங்கள் அழியட்டும்
துதிக்கின்றோம் உன்னை

*புலோலியூர், வேல்நந்தன்.*